www.padippakam.com

# பெரியார்

## —ஒரு திருத்தமான வாசிப்பு

உனக்குப் பெருமை வேண்டுமானாலும்
உற்சாகம் வேண்டுமானாலும்
பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதில்
போட்டி போடுவதன் மூலம்
தேடிக் கொள்.

—பெரியார்

...ம்பர்-அக்டோபர், 1996 விலை ரூ. 10

படிப்பகம்

www.padippakam.com



என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்றபின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

# அடிக்கோடுகள்

அண்மையில் ‘பெரியாரியம்’ என்னும் பெயரில் நிறப்பிரிகை கட்டுரைகள் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன. (இது நூல் மதிப்புரைப் பகுதியன்று.) தொகுப்பாய்ப் படிக்கும்போது அதன் அருமை கூடுதலாகிறது. சிற்றிதழ்களிடையே நிறப்பிரிகை பதித்த அழுத்தமான முன்னோடிப் பதிவுகளில் பெரியாரியமும் ஒன்று.

‘பெரியாரியம்’ பற்றிய ஆய்விற்கான முன்வரைவுகளாக ராஜன்குறை தொகுத்தளிக்கும் கருத்துகள், பெரியாருடைய பேருருவின் அழகிய கோட்டுச் சித்திரம் என்பதோடு, பெரியாரால் நிகழ்ந்துள்ள சமூகப் பாதிப்பை அந்நியப் படுத்திக்கொள்ளாத ஓர் ஆய்வாளரின் நேர்மைக்கான சான்றாகவும் ஒளிர்கின்றன. அவர் கட்டுரை இவ்வாறு முடிகிறது:

“இக்கட்டுரையின் முன் அனுமானங்களை ஏற்றுக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும், தமிழகத்தில் அறிவார்த்தமாகவும், சமூகரீதியாகவும் செயல்படுபவர்கள் பெரியாருக்கு உரிய கவனத்தை அளிக்காமல் இருந்தால் அது ஒரு குருட்டுத்தனமென்பதையும், மாற்றத்துக்காகச் செயற்படுபவர்கள் பொதுக்கருத்தியலில் அவர் ஏற்படுத்திய உடைப்பைப் பயன்படுத்திக்கொள்ளாமலிருப்பது கைகளை வெட்டிக்கொண்டு வேலை செய்வதென்பதையும் துணிச்சலாகக் கூறலாமென்றே தோன்றுகிறது.”

இரவும் பகலும் சமப்படும் ஒரு நாளில் காலை 6 மணிக்குக் கிழக்கு வானமும், மாலை 6 மணிக்கு மேற்கு வானமும் ஒன்று போலவே காட்சிப்படும். ஆனால் அவை ஒன்றுக்கொன்று முரண்படும் விட்டத்தின் எதிர்வுகள் என்பதை அடுத்த சில கணங்களில் கிழக்கில் ஒளியூறுவதும் மேற்கில் இருள்சூழ்வதும் உறுதிப்படுத்தும்.

பெரியாரியத்தில் ராஜன்குறை ஒரு கிழக்கைக் காட்டுகிறார் என்றால், அதற்கு அடுத்ததாக வைக்கப்பட்டிருக்கும் கட்டுரையில் கோ கேசவன் ஒரு மேற்கைப் புனைகிறார். ஒரு முற்று முரணை முரணல்லாததுபோல் காட்டும் “அனுதாபம் தோய்ந்த வாயுபசா

படிப்பகம்

www.padippakam.com



ரம்'' கேசவனைத் திறமையான ஆய்வாளராக அடையாளப்படுத்தினாலும், இவரின் திறமையைவிட, 'பெரியார் ஒரு தமிழினப் பகைவர்' என்று வெளிப்படையாக அறிவித்துத் தூற்றும் குணாவின் நேர்மை 'தேவலை'யாகப் படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இவரின் 'அனுதாபம் தோய்ந்த வாயுபசாரம்' என்பது தவிர்க்க முடியாமல் பெரியாரியச் சாதனைகளை மேம்போக்காகவேனும் ஒத்துக்கொள்வது. இவருடைய திறமை என்பது அந்த ஒப்புதலுக்கும் மேலாக, 'ஆனாலும்... இருந்தாலும்...' போன்ற ஒட்டுண்ணிகளைச் சேர்த்து அச்சாதனைகளை உள்நோக்கம் கற்பித்துச் சிதைப்பது. இதுதான் பெரியாரியம் குறித்த கேசவனின் "மூட நம்பிக்கையற்ற சுதந்திரமான ஆய்வு."

"பெரியார் தொடர்ந்து கிளர்ச்சியாளராகவும் கலகக்காரராகவும் உயிர்ப்போடு இருந்தாரெனினும்", "பெரியாரியம் தமிழகச் சூழலில் வகுப்புவாரி இட ஒதுக்கீடு, தேசிய இனச்சிக்கல், பார்ப்பனியம், சாதியம், தீண்டாமைக் கொடுமை, பெண் விடுதலை, நாத்திகம், பகுத்தறிவு என்பன போன்ற அரசியல், சமூக வாழ்வியல், அறிவுத்துறை அம்சங்களின் மீது தொடர்ந்து வினையாற்றிக்கொண்டே வந்தது" (மேற்கோள்கள் அவரது சொற்கள்) எனினும் இவற்றின் முற்றெல்லைக்கான அடிநாதம் "தமிழ்ப் பிரதேச திராவிடத் தரகு முதலாளிகளின் நலன்களைக்" காப்பதுதான் என்பது கேசவனின் தீர்ந்த முடிவு.

"முதலாளிய அரசுக் கட்டமைப்பை ஒத்துக்கொள்ளல், ஏகாதிபத்திய ஆதரவு, ஏகாதிபததிய சார்பு, திராவிட முதலாளிகளுக்கான ஆதரவு" என்பதுதான் பெரியாரியத்தின் மையம்— முற்றாக மறுதலிக்கப்பட வேண்டிய மையம் என்கிறார் கேசவன். இன்றைய இந்தியாவை அந்நிய முதலாளிகளின் திறந்தவெளிக் கழிப்பிடச் சந்தையாக்குவதில் மௌனப் பங்குதாரர்களாகவும், அரசுப் பங்காளிகளாகி பொருள்வழியான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை இரு கரம் நீட்டி வரவேற்கிறவர்களாகவும் கட்சித் தொண்டூழியம் செய்து கொண்டிருக்கும் நமது கம்யூனிஸ்டுகளின் மையம் தொலைத்த மையம், பெரியாருக்குக் கேசவன் புனையும் மையத்தின் முன்னால் வெறும் சுண்டைக்காய்தான என்று நம்பும் குருட்டு நம்பிக்கையாளரால்தான் இப்படியோர் மூடநம்பிக்கையற்ற ஆய்வு செய்யமுடியும்.

பெரியாரியத்தின் இந்த மையம் காரணமாகவே, "பெரியாரிடம் நான் கற்றுக்கொள்ள ஒன்றுமில்லை. மாறாக எதிர்க்கப்பட வேண்டியவராகவே உள்ளார்," என்று முற்றுப் புள்ளி வைத்துவிடுகிறார் கேசவன்.

படிப்பகம்

www.padippakam.com



இப்படி எதிர்ப்பதற்காவே இவர் செய்த ஆய்வுகளின் மதிப்பீடுகள்தான் எஸ்.வி.ஆர். கட்டுரை.

உலகத்தில் பிறந்த அதிமானுடர்கள் மாமனிதர்கள் என்போரும்கூட வெறும் மனிதர்கள்தாம். முழுமை தேடும் புனைவுகளில் மூளியாக நிற்பவர்கள்தாம். குறைபாடுகளும், போதாமைகளும், இடைவெளிகளும், கவனம் கொள்ளாமைகளும், மரபுவழிப் பிசகுகளும் கொண்டவர்கள்தாம். பெரியாரும் அப்படிப்பட்டவர்களில் ஒருவரே; அவரும் விமர்சனத்துக்குரியவரே; இதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், இந்திய மரபில் ஒரு புத்தனுக்குப் பிறகு, தமிழ் மரபில் ஒரு வள்ளுவனுக்குப் பிறகு, ஒரு சுய சிந்தனையாளராய், சமூக ஈனத்தனங்களுக்கெதிரான கலகக்காரராய், பெண் விடுதலை கருத்தாக்கத்தில் இன்னும் இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னாலும் அதிர்ச்சி தரக்கூடிய புதுயுகச் சிந்தனையாளராய், தமிழ்ச் சமூகத்தில் பார்ப்பன – பார்ப்பனிய மேலாண்மைக் கருத்தியலைக் குறுக்காகப் பிளந்துபோட்டு சுயமரியாதைக்கான மனித மதிப்பீடுகளை மீட்டெடுத்துப் பொதுமைப்படுத்தியவராய், இனிவரும் எத்தகைய மாற்றுச் சிந்தனையையும் அச்சமின்றிப் பரிசீலிக்கும் பக்குவத்திற்கு இந்தச் சமூகத்தைப் பதப்படுத்தியவராய், எஸ். வி. ஆர். சரியாகக் கவனம் கொண்டதுபோல் தன் இறுதி நாட்களில் மூத்திரப் பையைத் தூக்கிக்கொண்டு, இடையிடையே வலி தாளாமல் 'அம்மா அம்மா' என்று அரற்றிக்கொண்டு தன் கருத்துகளைப் பரப்ப மக்களைத் தேடி ஓடிக்கொண்டிருந்தவரை, தன்னை 'மாவோயிஸ்ட்' ஆக மகிமைப்படுத்திக் கொள்ளும் ஒருவர், 'பெரியாரிடம் கற்றுக் கொள்ள ஒன்றுமில்லை' என்று சொல்லித் தூக்கிக் கடாசிவிடக் கூடும் எனில்,— மகத்துவங்கள் என்ற பெயரில் இந்த மண்ணில் பல்கிக் கிடக்கும் மலினங்களைச் சரியாகவே குறி வைத்துப் போர் புரிந்த பெரியாரைப் புறக்கணித்துவிட்ட மாவோயிசமோ மார்க்சியமோ இங்கு 'எந்தச் சமூகப் பிரிவின் நலன்களையும் நிறைவு செய்யும்' துப்பற்று, பாராளுமன்ற அரசியலில் எவனோடு சேர்ந்தால் எத்தனை இடம் பிடிக்கலாம் என்பதிலேயே தன் உயிரைத் தக்கவைத்துக்கொண்டிருக்கிறது என்னும் வெட்கப்படத்தக்க உண்மையைப் பார்க்க மறுக்கும் கம்யூனிசக் கொத்தடிமையால் மட்டுமே அதைச் செய்ய முடியும். கேசவன் அதைத்தான் செய்திருக்கிறார்.

பெரியார் பற்றிய இவரது ஆய்வுகளின் நம்பகத் தன்மை பற்றி எஸ். வி. ஆர். எழுதிய கட்டுரையை முழுமையாக வெளியிட்டதன் நோக்கம், கட்டுரையானது கேசவனுக்குரிய விளக்கம் என்பதற்கும் மேலாக பெரியாரின் பன்முகத் தன்மைகளை ஓர் அசலான பார்வையில் திரட்டிக் கொடுக்கிறது என்பதற்காகவும்தான்.

படிப்பகம்

www.padippakam.com



பெரியாரை அவரின் நிறை குறைகளோடு யார் மதிப்பீடு செய்தாலும் மதிப்பீட்டாளருக்கான அடிப்படை நேர்மையாக இருக்க வேண்டியது– இரண்டாயிரம் ஆண்டு கால இழிமரபுகளை ஓர் ஐம்பதாண்டுத் தொடர் செயற்பாட்டில் தலைகீழாகப் புரட்டிப்போட்டுக் காட்டிய பெரியார், வரலாற்றில் அடிக்கோடு போட்டுக் காட்ட வேண்டிய ஒரு சகாப்தம் என்பதை ஒப்புக்கொள்வதுதான். இந்த ஒப்புகை சில வேளைகளில் பெரியாரை மகிமைப்படுத்துகிறவனாக ஓர் ஆய்வாளனைக் கொண்டு நிறுத்தக் கூடும். எனினும் பெரியார் காலத்தோடு கொண்ட நேரடித் தொடர்புக்கான எச்சங்கள் இருக்கும் வரை இது பெரிதுபடுத்த வேண்டாத அம்சமாக்கலாம். நீரூற்றை மண் போட்டு மூடுவதை விட, ஊற்று நீர் கன்னல் சாறு என்று மிகைப்படுத்துவது அப்படியொன்றும் பாவமாகிவிடாது.

---

## ஜெயகாந்தன் இலக்கியத் தடம்

தமிழ்ப் புனைகதை ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்க சிலரைப் பற்றிய தீவிரமான விவாதங்களைத் தொடங்கி வைக்கும் முயற்சியில் 'இலக்கியத்தடம்' வரிசை நூல்களை காவ்யா பதிப்பகம் வெளியிட்டு வருகிறது. இதுவரை க. நா. சுப்பிரமணியம், மௌனி, புதுமைப்பித்தன் ஆகியோரைப் பற்றி உடன்பாடானதும், எதிர்மறையானதுமான கருத்துகளைக் கொண்ட நூல்கள் வெளிவந்துள்ளன. தூய அழகியல், மார்க்சீயம், சமூகவியல், பெண்ணியம், தலித்தியம் முதலிய பல்தரப்பட்ட அணுகுமுறைகள் கொண்ட 'இலக்கியத் தடம் வரிசை முயற்சியில் அடுத்ததாக 'ஜெயகாந்தன் இலக்கியத் தடம்' வர இருக்கிறது. ஜெயகாந்தனின் ஆளுமை, சிந்தனை, படைப்புலகம் பற்றிய கட்டுரைகளை வரவேற்கிறோம். ஜெயகாந்தனைப்பற்றியும் அவரது எழுத்துகளைப்பற்றியும் இதுவரை வெளியான கட்டுரைகள் பற்றிய தகவல்களும் தந்துதவ வேண்டுகிறோம். கட்டுரைகளை அக்டோபர் 31 ஆம் தேதிக்குள் அனுப்பித் தந்தால் நல்லது.

அனுப்ப வேண்டிய முகவரி:

Dr. Shanmugasundaram
Kaavya Publishers, 16, 17th E Cross
Indira Nagar 2nd Stage
Bangalore –560 038

படிப்பகம்

www.padippakam.com



# கடிதங்கள்

● நான் முன்பு 'சிரத்தா' இதழில் 'தலித்' இலக்கியம் பற்றியும் தலித் அமைப்புகள் பற்றியும் கூறிய சில கருத்துகளை விமர்சித்து ஜெயந்தன் அவர்கள் கட்டுரை எழுதியிருந்தார்கள். அ. மார்க்ஸ் 'உளறல்' என்று வேறு ஒரு இதழில் குறிப்பிட்டிருந்தார்கள்.

முதலில் அந்த பேட்டியில் என்னுடைய 'தொனி' தவறாக அமைந்துவிட்டதற்காக மனதார வருத்தப்படுகிறேன்.

தலித் அரசியல் பற்றி நடந்து வந்துள்ள பல விஷயங்கள் குறித்த என் அறியாமையும் அந்த 'தொனிக்கு' காரணம். இன்று என் அபிப்ராயங்களில் நிறைய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து என்னை மாற்றிக் கொள்ளவும் திருத்திக் கொள்ளவும் தயாராக இருப்பவன் நான். 'தலித் அரசியல்' பற்றி எனக்கு மாறுபட்ட அபிப்ராயம் உண்டு இப்போதும்.

தலித் இலக்கியம் என்பது தலித் மக்களைப் போல மற்றவர்களால் படைக்க முடியாது என்று இன்று கருதுகிறேன்.

முற்போக்கு இலக்கியம் என்பதின் பிரிக்க முடியாத அம்சம் தலித் இலக்கியம் என்று கருதுகிறேன்.

என் பேட்டியின் 'தொனி'யினால் நான் மதிக்கிற பலபேருடைய மனதை புண்படுத்திவிட்டேன். அதற்காக வருந்துகிறேன்.

**ச. தமிழ்ச்செல்வன், பத்தமடை**

● கவிதாசரண் இதழ் (நவம் 1995) பார்த்து மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். பட்டிசெங்குட்டுவன் என்பவரின் அவதூறு கடிதம் தான் இதற்கு காரணம்.

நிறப்பிரிகை குழுவைச் சார்ந்த அ. மா., ரவிக்குமாருடன் தோழமை கொண்டவன் என்கிற முறையில் சில விளக்கங்கள்:

அ. மார்க்ஸ், ரவிக்குமார் குறித்து நாகார்ஜுனன், தமிழவன், கோவை ஞானி போன்றோர் மாற்று அபிப்ராயங்களை எழுதி இருந்திருக்கிறார்கள். அவற்றிலெல்லாம் ஒரு logic இருந்துள்ளது.

'தன்னார்வக் குழுவின் செல்லப் பிள்ளைகள்.' இந்தக் கூற்றுக்கு பட்டி செங்குட்டுவனிடம் ஏதாவது ஆதாரமுண்டா?

இங்கு பின்–அமைப்பியல், பின்–நவீனத்துவம், ஃபோர்வோ, சார்த்தார், லக்கான் இப்படியெல்லாம் யாரும் பேசிக் கொண்டு போகலாம். இவர்களை—

படிப்பகம்

www.padippakam.com



இந்திய மற்றும் தமிழக அரசியல் பீடத்தின் உச்சியில் இருப்பவர்களும் இவர்களை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் இன்று ஃபாசிசமாக வளர்ந்திருக்கும் இந்துத்துவ வாதிகளும் கண்டுகொள்ளப் போவதில்லை.

வெறும் தன்னார்வக் குழுவின் செல்லப்பிள்ளைகளாக இருந்தால் மார்க்சும், ரவிக்குமாரும் இதைத்தான் செய்வார்கள்.

மக. கி, பியுசிஎல், ஆரம்பத்தில் பு. ப. க, நிறப்பிரிகைக் குழு இவற்றின்மூலம், சாதி மோதல், காவல் நிலையங்களில் பாலியல் பலாத்காரத்திற்கு ஆட்பட்டவர்களுக்காகவும், கல்லூரிகளில் தலித் மாணவர்கள் தாக்கப்படும் போதும் இவர்களின் களப்பணி எழுத்தையும்விட மேன்மையானது.

இங்கு அமைப்பியல் மட்டும் பேசினால் அவன் உள்வட்ட அறிவு ஜீவி. 'தடாசட்டம் ஒரு வன்முறை' என்றால், 'இசுலாமியருக்கெதிரான 'கட்டுக்கதைகளை' அம்பலப்படுத்தினால் அவன் அராஜகவாதி. அவன் வீட்டுக்கு C B I வரும்.

இதே நண்பர் பட்டி செங்குட்டுவன் இவர்கள் நடத்திய 'புலம் பொர்ந்தோர் நல மாநாட்டிற்கு' நன்கொடை வசூலித்துக் கொடுத்தாரே, அப்போதெல்லாம் மார்க்சும் ரவிக்குமாரும் நல்லவர்கள். Overnight இல் ஞானோதயம் வந்து இப்போது 'தன்னார்வக் குழந்தைகள்' என்று கண்டு கொண்டது எப்படி?

அ. மா.வின் முழுப்பரிமாணத்தையும் வளர்ந்துவரும் சமூகப் பொறுப்புணர்வுடைய இளைஞர்கள் தெரிந்து கொண்டால் அது அவர்களுக்கு உத்வேகத்தை அளிக்கக்கூடும் எனும் நம்பிக்கையில் களம்புதிதுவை அவர் குறித்தான ஒரு சிறப்பிதழாகக் கொண்டுவர நாங்கள் அணுகியபோது மிகவும் கூச்சப்பட்டதோடு மறுத்தும் விட்டார்.

அன்றும் இன்றும் மார்க்ஸ் ஒரே மாதிரியாக பாதிக்கப்படும் வெகு மக்கள் திரளுக்கு குரல் கொடுப்பவராகவே இருக்கிறார். கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளுக்கு முன்பாக நான் பூம்புகார் கல்லூரியில் படித்த காலத்திலிருந்து இவரை அருகிலிருந்து கவனித்து வருகிறேன்– அப்போதெல்லாம் நேரடியான பழக்கமில்லை என்றாலும் கூட.

நீங்கள் பார்ப்பனியத்தை எதிர்ப்பவர். சோ, சேஷன், வெங்கட்ராமன் போன்ற அந்தக் கும்பல்தான் இப்படி ஆதாரமில்லாமல் அண்ணாவை C I A Agent என்று சொல்லும். தமிழுக்கு ஆதரவாக குரல் கொடுத்தால் பிரிவினை என்கும்.

தயவு செய்து நண்பர் பட்டி செங்குட்டுவனிடம் ஆதாரமிருந்தால் வாங்கி வெளியிடுங்கள். என்போன்றவர்களுக்கு அவ்வாதா

படிப்பகம்

www.padippakam.com



ரங்களில் திருப்தியிருந்தால் அ. மா., ரவிக்குமார் போன்றோரின் தோழமையை மறுபரிசீலனைக்குட்படுத்த அது வசதியாயிருக்கும். அப்படி அவரிடம் ஆதாரமில்லையெனில் அவர் மன்னிப்புக் கேட்பதுதான் நகாரீகம். நாம் வாசகர்களிடம் சில கருத்துக்களை பரிசீலனைக்கு வைக்கலாம். எந்த முடிவுகளையும் திணித்துவிட முடியாது.

**கரிகாலன், மருங்கூர்**

● தமிழகத்தில் இன்றைய தினம் செயல் ஒன்றே சிறந்த சொல்' என்ற அடிப்படையில் பணியாற்றி வரும் அண்ணன் அ. மார்க்ஸ் அவர்கள் சிறந்த சமூகவியலறிஞர் ஆவார்.

அவருடன் இணைந்து பணியாற்றும் தோழர் ரவிக்குமார், வேல்சாமி ஆகிய தோழர்கள் சென்ற ஆண்டு எந்த அரசியல் கட்சியும் பேசப் பயந்த புலம் பெயர்ந்த தமிழர்களின் நலன் பேண மாநாடு நடத்தியதை நாடறியும். நாமறிவோம்.

'கோடு', மூவரையும் ஒருசேர அழைத்துப் பேச வைத்தமைக்கு நன்றி.

இந்தியா டுடே, தலித் இலக்கிய கண்காட்சி தொடர்பாக எழுந்த கோபத்தில் நான் கவிதாசரணில் எழுதிய சில வாசகங்களுக்காக வருந்துகிறேன்.

சல விசயங்களில் வேறுபாடு இருப்பினும் அதையெல்லாம் மறந்து அவர்களுடன் நாமும் இணைந்து பணியாற்றுவதே சிறந்தது என்று எண்ணுகிறேன்.

அண்ணன் மார்க்ஸ் பற்றிய தனிமனித விமர்சனங்களை தவிர்ப்பதே நாம் அவர்களுக்குச் செய்யும் கைமாறாக இருக்கும். கவிஞர் பழமலய்கூட என்னைக் கண்டித்தார் உரிமையுடன்.

**பட்டி செங்குட்டுவன், விருத்தாசலம்**

**★ மூன்று கடிதங்களும் தாமத வெளியீடுகள் ☆**

● எனக்கு வாழ்த்து தெரிவித்திருப்பதற்காக எனது மகிழ்ச்சியையும் நன்றியையும் கூறிக்கொள்கிறேன். சொல்ல வேண்டிய எண்ணங்களை அழுத்தமாக, தெளிவாக, சூடாக, சுவையாக எழுத்தில் பதிவு செய்யும் உங்கள் ஆற்றல் மிகுந்த பாராட்டுதலுக்கு உரியது. ஜெயந்தன் எழுதியுள்ள 'மீண்டும் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' தற்கால நிலைமைகளை சுவையோடு சுட்டிக்காட்டுகிற ரசமான கதை.

—தொடர்ச்சி 107ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# கோ. கேசவன் மறுக்கிறார்

கவிதாசரண் இதழில் (அக் - நவம். 95) தோழர் எஸ். வி. ராஜதுரை அவர்கள் எழுதிய கட்டுரையில் என் நூல்கள் சிலவற்றையும் என்னையும் விமர்சனத்துக்கு எடுத்துக்கொண்டுள்ளார். முதலில் அதற்கு என் நன்றி. அதில் குறிப்பிட்டுள்ள சிலகருத்துகளுக்கு என் மறுப்பைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

1. 'நான் படிக்காத, பார்த்திராத, பார்க்க ஒருபோதும் வாய்ப்பு கிட்டியிராத (கிட்ட முடியாத) பழைய இதழ்களைப் பார்த்ததாகவும், படித்ததாகவும் பாசாங்கு காட்டி மேற்கோள்கள் காட்டியுள்ளேன்' என்றும் 'வெள்ளைக்கார அறிஞர்கள், ஈ. சா. விசுவநாதன், டி. பி. கமலநாதன், நம்பி-ஆரூரான் ஆகியோர் நூல்களிலிருந்து அவர்கள் பெயரைக் குறிப்பிடாமலேயே மேற்கோள்கள், குறிப்புகள் எடுத்தாளப்பட்டுள்ளன' என்றும் எஸ். வி. ஆர். குறிப்பிட்டுள்ளார்.

திரரவிட இயக்கம் குறித்த என் படைப்புகட்கு சென்னை ஆவணக் காப்பக மூலாதாரங்கள், தந்தை பெரியாரின் படைப்புகள், அண்ணாதுரை, கலைஞர் மற்றும் பிறரின் படைப்புகள், திராவிட இயக்க ஏடுகள், அது தொடர்பான பிற ஏடுகள் ஆகியன மட்டுமின்றி, திராவிட இயக்கம் குறித்து ஏற்கனவே வந்த நூல்களில் உள்ள மேற்கோள்களும் பயன்படுத்தப்பட்டு உள்ளன. பிறர் நூல்களில் உள்ளவற்றைப் பயன்படுத்தும் பொழுது பல இடங்களில் அந்த நூல்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலும் எஸ்.வி.ஆர். குறிப்பிட்ட இதழ்கள், ஆவணக் காப்பகச் சான்றுகள் ஆகியவை கைப்பிரதி எடுக்கப்பட்டோ ஒளிக்கோர்வை செய்யப்பட்டோ என்னிடம் பல உள்ளன. எனவே பாசாங்கு செய்ய வேண்டிய நிலையில் நானில்லை எனப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றைப் பார்ப்பதிலும் பயன் படுத்துவதிலும் உள்ள சிரமங்களை நானறிவேன். ஆனால் 'இவற்றைப் பார்க்க ஒரு போதும் வாய்ப்பு கிட்டியிராத' என்று மட்டும் எஸ். வி. ஆர். எழுதாமல் 'கிட்டமுடியாத' என அடைப்புக் குறிக்குள் அவர் எழுதும் பொழுது அத்தகைய வாய்ப்பும் சூழலும் ஏதோ சில உயர் குழாமுக்கு மட்டுமே உரித்தானதாகவும் பிறரையெல்லாம் அதிலிருந்து ஒதுக்குவதாகவும் காணப்படுகிறது. மாடு தின்னும் புலையா, மார்கழித் திருநாளும் உனக்குண்டோ என வேதியர் கேட்டதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு உள்ளது?

அதுமட்டுமல்ல, அவரது நிலைப்பாட்டில் தடுமாற்றமும் இருப்பதாக நான் கருதுகிறேன். 'ஈ. சா. விசுவநாதனும் அவரைக் காப்பி

படிப்பகம்

www.padippakam.com



யடிக்கும் கோ. கேசவனும்' என ஓரிடத்தில் (பக். 39) எழுதியுள்ளார். அதற்கு முன்னர் (பக். 32) 'விசுவநாதன்[1] கூறியுள்ள சில விஷயங்கள்... முனைந்து பொய் சொல்லும் கோ. கேசவன் ஏற்கனவே செய்து வைத்த ஆராய்ச்சிகளின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளதாகத் தெரிகின்றன' என்கிறார். இதில் உள்ள வியப்பு என்னவெனில் ஈ. சா. வி. நூல் 1983இலும் திராவிட இயக்கம் குறித்த என் முதல் நூல் 1990இலும் வந்தன. என் நூலுக்கும் ஈ. சா. வி. நூலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இருப்பினும் என் ஆராய்ச்சி முடிவுகள் ஈ. சா. வி. யைப் பாதித்தது என தடுமாறுவதற்குக் காரணம் உண்டு. 'இன்றுள்ள தலைமுறையினர் மீது கேசவன் பரப்பும் பொய்ச் செய்திகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன' என எஸ். வி. ஆர். முடிவு செய்தவுடன் அதற்குரிய ஆதாரத்தைக் காட்ட வேண்டுமல்லவா? எனவே எனக்கு 7 ஆண்டுகட்கு முன்னரே நூலை வெளியிட்ட ஈ. சா வி. 7 ஆண்டுகட்குப் பிந்தைய நூலைப் பின்பற்றியுள்ளார் எனக் குறிப்பிட வேண்டிய சுய நிர்ப்பந்தம் உள்ளது.

இவ்வாறு ஒதுக்கும்பொழுதும் தடுமாற்றத்துக்கு உள்ளானாலும் முனைந்து சிலவற்றைத் திணிக்கும் பொழுதும் எஸ். வி. ஆரிடத்தில் உள்ளார்ந்து இயங்கும் பண்பு எது எனக் கண்டறியுமாறும் அதைக் களையுமாறும் எம்மைப் போன்றோரின் ஆய்வு முன்னோடியான எஸ். வி. ஆரைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்

2. ஆய்வு என்பது ஒரு பொருள் குறித்து அதுவரை கிடைக்கக் கூடிய விவரங்களைத் திரட்டி ஆய்வாளரின் கண்ணோட்டத்தின் ஊடாகச் சில முடிவுகட்கு / கருது கோள்கட்கு வந்தடைதல் ஆகும். அந்தவிதத்தில் விவரங்கள் முதன்மையானவை ஆகும். என் படைப்புகளில் 'விவரப் பிழைகள், முழுப் பொய்கள், அரை உண்மைகள்' இருப்பதாக ஆதாரத்தோடு சுட்டிக் காண்பித்தால் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். 'திராவிட இயக்கமும் மொழிக் கொள்கையும்' என்ற நூலின் சமர்ப்பணத்தில் தாளமுத்து என உள்ளதாகவும் அங்கு நடராசன் என்ற பெயர் இருக்கவேண்டும் என எஸ். வி. ஆர். கூறுதல் சரியாகும். ஆனால் நூல் வெளியிட்டவுடன் இத்தவறு கண்டறியப்பட்டு, உடனே நடராசன் என்ற பெயர் அச்சிடப்பட்டு ஒட்டப்பட்டு நூல்கள் அனுப்பப்பட்டன. (அதன் ஒளிக்கோர்வை நகல் இத்துடன் உள்ளது.) அதற்குள் ஒரு கட்டு விற்பனைக்குச் சென்றுவிட்டது என்பதே உண்மையாகும். இதற்கு நூலாசிரியர் என்ற விதத்தில் நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

திராவிட இயக்கம் மட்டுமின்றி காங்கிரசு இயக்கம், பொதுவுடமை இயக்கம் ஆகியன பற்றி எனக்குக் கிடைத்த விவரங்களை

[1] எஸ் வி.ஆர். கட்டுரை விச்வநாதன் எனக் குறிக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



ஒளிவுமறைவின்றி நேர்மையாகப் பதிவு செய்துள்ளேன். பாரதி குறித்தும் சிங்காரவேலு குறித்தும் பல விவரங்களை வெளிக் கொணர்ந்தேன் என்பதால் என் மீது பல விமர்சனங்கள் வந்த துண்டு. விவரங்களை இருட்டடிப்புச் செய்தலோ அரைகுறையாக அமுக்கிச் சொல்தலோ ஆய்வு நேர்மை ஆகாது என்பதில் நானும் உடன்படுகிறேன்.

3. பெரியாரைத் தலித்விரோதியாகக்காட்டுவதாகவும் (பக்.30), பெரியார் தலித்துகளைத் திராவிடர்கள் / தமிழர்கள் என்ற வகை யினத்தில் சேர்க்கவேயில்லை என நான் பச்சைப் பொய் சொல்வ தாகவும் (பக். 31), தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் இடையே பிளவுகளை ஏற்படுத்தும் பார்ப்பனிய/ உயர்சாதிய அணுகுமுறையை நான் கடைப்பிடிப்பதாகவும் எஸ். வி. ஆர். என் மீது சரமாரியாகப் பொழிந்து தள்ளியுள்ளார்.

பெரியார் தலித்துகளை திராவிடர்கள் / தமிழர்கள் என்ற வகை யினத்தில் சேர்க்கவேயில்லை என எஸ். வி. ஆர். குறிப்பிடும் அந்த நூலிலும், வேறு எந்த நூலிலும் நான் குறிப்பிடவே இல்லை. பெரியார் பார்ப்பனர் அல்லாதார் என்ற வகையினத்தில் தலித்து களை எல்லாக் காலக்கட்டங்களிலும் சேர்த்து இருக்கிறாரா என் பதையே குறிப்பிட்டுள்ளேன். சில கட்டங்களில் சேர்த்துள்ளார் என்றும் சில கட்டங்களில் சேர்க்கவில்லை என்றும் அவரது பேச்சு களைக் காட்டி எழுதி உள்ளேன் (குடியரசு 11-10-31; விடுதலை 21-9-59). இந்த அணுகுமுறை திராவிட இயக்கத்துக்கு உரியதா கும் என்பதும் வேறு நூலில் ஆதாரத்துடன் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது (சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும் பக்.77). மேலும் திராவிட இயக்கத்தின் பொதுவான அணுகுமுறையிலிருந்தும்கூட தலித்துகள் மீதான பெரியாரிய அணுகுமுறை சற்று விலகலாகவுள் ளது எனவும் அந்நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெரியாரைத் தலித் விரோதியாகக் காட்டவும் இல்லை; காட்டு வதும் என் நோக்கம் இல்லை. ஆனால் பார்ப்பனரல்லாத உயர் / இடைசாதிகட்கும் தலித்துகட்கும் இடையிலான ஒற்றுமை - முரண் பாடு என்ற அம்சத்தில் பெரியாரிய வரம்புகளையே நான் சுட்டிக் காட்டி உள்ளேன். இரண்டு சமூக சக்திகட்கும் இடையிலான ஒற் றுமை அம்சங்களைக் கண்டடைவதிலும் அதை வளர்த்தெடுப்பதி லும் பயன்படும் பெரியாரியம் முரண் அம்சங்கள் ஏற்படுகையில் தலித்துகளின் சார்பான நியாயத்தை எப்பொழுதும் கூறுகிற அள வுக்கு வலுவோடு நடைமுறையில் இருந்ததில்லை எனக் கூறியுள் ளேன். பார்ப்பனரை எதிர்த்த பரந்துபட்ட ஒரு கூட்டணியை ஏற்படுத்துவதில் பயன்படுகிற பெரியாரியம், அதற்கு அடுத்து பார்ப்

படிப்பகம்

www.padippakam.com



பனரல்லாதாருக்கு இடையில் ஏற்படும் சமூக முரண்பாட்டை சனநாயக ரீதியில் கையாள்வதில் எந்த அளவுக்குப் பயன்பட்டது என்பதைத் தமிழக வரலாறு சொல்கிறது. இங்குப் பெரியாரியம் போதாது; அது வளர்த்தெடுக்கப் பட்டாக வேண்டும் என்பதே என் கருத்து. இது குறித்து விரிவாகவே எழுதியுள்ளேன். (சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும், பக். 82 - 86). இவ்வாறு கூறுவதனாலேயே பெரியாரைத் தலித் விரோதியாகக் காட்டுவதாக அர்த்தப்படுத்திவிடக் கூடாது.

எஸ். வி. ஆர்., வ. கீதா ஆகியோர்கூடத் தங்கள் கட்டுரையொன்றில் இத்தகைய ஒற்றுமை – முரண்பாடு அம்சங்களைக் குறிப்பிட்டு 'தலித்துகளின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாப்பதில் நீதிக்கட்சியும் உள்ளிட்ட பார்ப்பனரல்லாதார் இயக்கம் பெருமளவில் தவறியதன் மூலம் தன் வரம்புகளை வெளிப்படுத்தி விட்டது' (திராவிட தினமணியின் பார்ப்பனியம், பக். 97) எனக் குறிப்பிடுகின்றனர். இதை வைத்துக்கொண்டு பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தைத் தலித் விரோத இயக்கமாக எஸ். வி. ஆர். காண்கின்றார் என எவரேனும் குறிப்பிட்டால் அது சரியாக இருக்காது என்பதே என் கருத்து.

இங்கு கவனிக்க வேண்டியதென்னவெனில், பார்ப்பனர் அல்லாத உயர் / இடை சாதிகட்கும் தலித்துகளுக்கும் இடையிலான முரண்பாட்டை 'அன்று யாராலுமே தீர்த்து வைத்திருக்க முடியாது' என எஸ். வி. ஆர். கருதுவதும், இன்றைக்கு எப்படித் தீர்ப்பது என்பது குறித்து மௌனம் சாதிப்பதும் ஆகும். இன்றைய சூழலில் இத்தகைய மௌனம் முறையற்றது. இன்றைய சூழலில் உள்ள ஆபத்து என்னவெனில் சூத்திரர் - பஞ்சமர் முரண்பாட்டைப் பற்றிப் பேசினாலே அதைப் பார்ப்பனியம் என ஒரே அடியாக வெட்டிச் சாய்க்க முயற்சி செய்வதாகும். சூத்திரர் - பஞ்சமர் இடையிலான முரண்பாட்டைப் பார்ப்பனியம் ஊதிப்புடைக்க பெருத்துவிட்டு பார்ப்பனர்களின் மேலாதிக்கத்தை தக்க வைத்துக் கொள்ளும் சூழ்ச்சி வலையை எப்போதும் நாம் உணர வேண்டியுள்ளது. இத்தகைய விழிப்புணர்ச்சி, இந்த முரண்பாட்டைக் கையாளுவதில் தடையாகி விடக் கூடாது. சூத்திரர் - பஞ்சமர் இடையிலான முரண்பாட்டைப் பார்ப்பனியக் கண்ணோட்டத்துடன் அணுகுவதை முற்றாக எதிர்க்கும் அதே நேரத்தில் அதை சூத்திரர் கண்ணோட்டத்தில் அணுகும் போக்கையும் களைந்தாக வேண்டும். இங்கு தேவை சனநாயகக் கண்ணோட்டம். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்தும் பார்ப்பனிய - உயர்சாதிய அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதாக எஸ். வி. ஆரின் குற்றச்சாட்டை இந்த விதத்தில் மறுக்க வேண்டியுள்ளது. இரண்டு சமூக சக்திகட்கு இடையில் பிளவை ஏற்படுத்த வேண்டும் என நான் குறிப்பிடவில்லை. பார்ப்புனரல்லாத உயர் / இடை சாதிகளுக்குள் சாதி

படிப்பகம்

www.padippakam.com



ஆதிக்கநிலை, வர்க்க ஆதிக்கநிலை என்ற அளவுகளில் பிளவை ஏற்படுத்தி, பார்ப்பனரல்லாத உயர் / இடை சாதிகளில் உள்ள சன நாயக சக்திகளைத் தாழ்த்தப்பட்ட சாதிகளோடு அய்க்கியப்படுத்த வேண்டும் என்றே குறிப்பிட்டுள்ளேன். பார்ப்பனரை எதிர்த்த பிற்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் கூட்டணி என்பது இரண்டு சக்திகட்கும் இடையிலான ஒற்றுமை அம்சத்தைக் கையாளும் பொழுது பயன்படுகிறது. ஆனால் முரண்பாடு அம்சத்தைக் கையாளும் பொழுது பார்ப்பனரல்லாத உயர் / இடைச் சாதியினர் பண்பு ரீதியில் பிளவுபட்டு, பிளவு படுத்தப்பட்டு, அவர்களில் சன நாயக சக்திகள் தாழ்த்தப்பட்டோருடன் அய்க்கியமாக வேண்டும். எஸ். வி. ஆர். இன்னமும் ஒரு படி உயர்ந்து சென்று, 'பார்ப்பனர் களில் ஒரு சிலர் பார்ப்பனரல்லாதார் பக்கம் வந்து சேரும் சாத் தியபாட்டையும் மறுக்கவில்லை' எனக் குறிப்பிட்டுள்ளார் (திரா விட தினமணியின் பார்ப்பனியம், பக். 14). சனநாயக, புரட்சித் தன்மையுடைய பார்ப்பனர்களையும் இணைத்துக் கொண்டு காணும் பொழுது தாழ்த்தப்பட்டோர் அல்லாதாரில் சனநாயக சக்திகட்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் இடையிலான ஒருங்கிணைவு தேவைப் படுகிறது. இதையே என் படைப்புகளில் குறிப்பிட்டுள்ளேன். இது தாழ்த்தப்பட்டோருக்கும் பிற்பட்ட வகுப்பினர்க்கும் இடையில் பிளவு ஏற்படுத்துவதல்ல. பிற்பட்ட வகுப்பினரை மட்டுமல்லாமல் பார்ப்பனரல்லாத உயர் / இடை சாதிகளையும் பார்ப்பனர்களை யும் சனநாயக ரீதியில் பிளவு படுத்தலாகும். இத்தகைய பிளவுகள் வரலாற்றுத் தேவை. இதைப் பார்ப்பனிய, உயர் சாதிய அடக்கு முறை என எஸ். வி. ஆர். கருதுவாரேயானால், பார்ப்பனியத் துக்குத் தலை கீழான அர்த்தத்தைக் கொடுக்க அவர் தலைப்பட் டுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.

4. நெல்லூரில் நீதிக்கட்சி மாநாட்டில் (அக். 1929) பார்ப்ப னர்களை நீதிக்கட்சியில் சேர்க்கலாம் என்ற தீர்மானத்தைப் பெரி யார் ஆதரித்ததாகக் கூசாமல் நான் புளுகியுள்ளதாக எஸ். வி. ஆர். குறிப்பிட்டுள்ளார் (பக். 39). நான் குறிப்பிட்டது இதுதான்: அந்த மாநாட்டில் பார்ப்பனர்களை நீதிக்கட்சியின் சட்டமன்றப் பிரிவில் சில நிபந்தனைக்கு உட்பட்டுச் சேர்க்கலாம் எனப் பெரியார் கருத் துரைத்தார் என்பதாகும். ('சுயமரியாதை இயக்கமும் பொதுவுடை மையும்' பக். 93-94). ஆனால் இது குறித்துப் பெரியார் தொடர்ச் சியான மற்றும் உறுதியான நிலைப்பாட்டில் இல்லை எனவும் கூறியுள்ளேன்.

நீதிக்கட்சியின் இன்னொரு மாநாட்டில் (29-9-34) பார்ப்பனர் களை நீதிக்கட்சியில் சேர்த்துக் கொள்ளலாம் என ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்துக்குப் பெரியார் பின்னால் விளக்கம் கொடுத்துள்ளார். தலைவர்கள் இதன் விளைவை அனுபவத்தில் பார்க்கட்டுமே எனத் தாம் அப்போது மௌனமாக இருந்துவிட்ட தாகப் பெரியார் விளக்கம் கொடுத்துள்ளார் (பகுத்தறிவு, 7-10-34).

படிப்பகம்

www.padippakam.com



எனினும் நீதிக்கட்சியில் பார்ப்பனர்களை நிபந்தனைக்கு உட்பட்டுச் சேர்க்கலாம் எனப் பின்னால் குறிப்பிட்டுள்ளார்.

"ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்தல் என்றால் அரசியல் விஷயத்தில் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு கிளர்ச்சி செய்வதும் சமூக விஷயத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்பதும் ஆகியவற்றை ஒப்புக்கொள்ளும் பார்ப்பனர்களைத்தான்"

(குடியரசு, தலையங்கம், 15 - 9- 1935)

இவை 1934, 1935 ஆகிய ஆண்டுகளில். அப்போது பெரியார் நீதிக்கட்சியின் தலைவர் இல்லை. தலைவரான பின்னரும் கூறியுள்ளார். சென்னை, திருவல்லிக்கேணி கூட்டத்தில் 2- 8 -1939 ஆற்றிய உரையின் ஒரு பகுதி:

ஆகவே எனது பார்ப்பன நண்பர்களுக்கு சொல்லி வைக்கிறேன். இந்த ஆட்சியை ஒழிக்க ஒத்துழைக்க வேண்டுகிறேன். நாங்கள் பார்ப்பன துவேஷிகள் எனக் கருதினால் நீங்கள் உண்மையில் ஏமாந்து விடுவீர்கள். உங்களுக்காக ஜஸ்டிஸ் கட்சி உங்களுக்குள்ள விகிதாசாரப்படி பாகத்தைப் பிரித்துக் கொடுக்க சித்தமாயிருக்கிறோம். தாராளமாக வந்து சேருங்கள். இந்த சந்தர்ப்பத்தை நழுவவிடுவீர்களேயானால் ஏமாற்றம் அடைவீர்கள்.

இது விடுதலையில் (23-8-1939) வெளியாகிவுள்ளது. நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாடுபடும் பார்ப்பனர்களை நீதிக்கட்சியில் சேருமாறும் பெரியார் கேட்டுக்கொண்டார். (குடியரசு 3 -9 –1939) பெரியாரின் இந்தப் போக்கைக் கண்டித்து பி. டி. இராசன் அறிக்கைகள் விடுத்தார் என்பது உட்கட்சி விவகாரம் ஆகும்.

நெல்லூர் மாநாட்டில் பெரியார் நிலைபாடு குறித்து நான் எழுதாததை எழுதியதாக முனைந்து உண்மைக்கு மாறான தகவலைத் தரும் எஸ். வி. ஆரின் கருத்து தவறானதாகும். பார்ப்பனர்களை நீதிக்கட்சியில் சேர்ப்பது குறித்துப் பெரியார் எதிர்த்துள்ளார்; மௌனமாக இருந்துள்ளார்; ஆதரித்தும் உள்ளார் என்பதே உண்மையான வரலாறு. இதை நாம் மறுக்கவோ மறைக்க வேண்டியதோ இல்லை. பெரியார் பற்றிய விவரங்களை முதலில் பெரியாரிடமிருந்தே எடுத்துக் கொள்வோம்; பெரியார் பற்றிய நமது முடிவுகளில் இருந்தல்ல. அது நமது கருதுகோள்கட்குத் தக்க விதத்தில் விவரங்ளைச் செதுக்குதலாகும். அப்போதுதான் எஸ். வி. ஆர். அர்த்தப்படுத்தும் அரை உண்மை, முழுப்பொய், பச்சைப்பொய் என்பவையெல்லாம் மேலெழும்பும்.

5. 1937 - 1939 ஆம் ஆண்டுகளில் தமிழக வரலாற்றில் முதன் முதலாகத் தமிழ்த் தேசியத்துக்கு வடிவம் கொடுத்த இந்தி

படிப்பகம்

www.padippakam.com



எதிர்ப்புப் போராட்டத்தை ஏகாதிபத்திய ஆதரவாளர்கள், உயர் சாதி வேளாளர்கள் ஆகியோர் நடத்தியதாகக் கொச்சைத்தனமாகவும் யோக்கியப் பொறுப்பற்ற முறையிலும் நான் கேவலப்படுத்தியுள்ளதாக எஸ். வி. ஆர். குறிப்பிட்டுள்ளார் (பக். 30). இது முற்றிலும் தவறான வாசிப்பாகும். அவர் குறிப்பிடும் 'திராவிட இயக்கமும் மொழிக் கொள்கையும்' என்ற நூலில் 1937 – 1939 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பற்றிப் பின்வருமாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது:

> தமிழ் பேசும் பகுதியில் மட்டுமே நடந்த முதல் தேசிய விழிப்புணர்ச்சி இயக்கம் என இதைக் குறிப்பிடலாம்: ஆனால் இந்த இயக்கத்தின் தலைமை மற்றும் அதன் வரையறை ஆகிய இவற்றோடு இணைத்து இது குறித்துக் கணிக்க வேண்டும் (பக். 78).

தமிழக மக்களின் எல்லாப் பிரிவினரும் இதில் கலந்து கொண்டனர் என்பது உண்மை. ஆனால் இதைத் தலைமை ஏற்று நடத்திய சக்திகளின் கண்ணோட்டம், ஏகாதிபத்திய சார்பு, நிலவுடைமைச் சிந்தனை ஆகியவற்றுக்கு உட்பட்டு இருந்தது. இங்கு பங்கெடுத்துக் கொண்ட என்பதற்கும் தலைமையேற்று நடத்திய என்பதற்கும் இடையிலான வேறுபாட்டை எஸ். வி. ஆர். மறந்து போதல் தமிழ் தேசிய இனத்தின் நலன்கட்கு உகந்ததாக இல்லை. இன்றைய சகாப்தத்தில் ஒரு தேசிய இனச் சிக்கலை ஏகாதிபத்திய சார்புக் கண்ணோட்டத்திலும் நிலவுடைமை மதிப்பீட்டிலும் (இந்தியாவைப் பொறுத்து உயர்சாதிய மதிப்பீட்டிலும் எனச் சேர்த்துக் கொள்ள வேண்டும்) ஊன்றி நின்று தலைமை கொடுத்தால் அது விடிவுக்கு உரிய பாதையைக் கண்டடையாது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சனநாயக அம்சங்கள் இருப்பினும் அது தேசிய மொழியை முன்னிறுத்துவதாக இல்லை. இந்தி எதிர்ப்பிலும் ஆங்கில ஆதரவிலும் உறுதியாக இருந்த இயக்கம், தமிழாதரவிலும் அதைக் கட்டாயமாக்குவதிலும் உறுதியாக இல்லை என்பதே தொடர்ந்த வரலாறு. தமிழைத் தமிழனுடைய மொழியாக்குவது என இன்றைக்கும் நாம் குறிப்பிட வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்பதே இன்றைய சோகநிலை. இதற்கான காரணங்கள் பல எனினும் இயக்கத்தின் தலைமைக்குரிய கண்ணோட்டமும் அதில் முக்கியமானதாகும். மற்றபடி தமிழ்த் தேசியம் குறித்து எஸ். வி. ஆரின் நியாயமான கவலை தோய்ந்த கூற்றுகளில் (பக். 36) எழுத்துக்கு எழுத்து எனக்கு உடன்பாடே. ஆனால் தேசிய இன இயக்கத்தின் தலைமைக்குரிய கண்ணோட்டம் பற்றிய தம் தெளிவினை எஸ். வி. ஆர். முன் வைத்தலே பொருத்தமாக இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



6. மார்க்சு, எங்கெல்சு, லெனின், மாவோ, அம்பேத்கர் போன்றோரைப் போலவே பெரியாரும் விமரிசனத்திற்கு அப்பாற் பட்டவர் அல்லர் என எஸ். வி. ஆர். குறிப்பிடல் சரி (பக். 38). ஆனால் ஒரு வேண்டுகோள். பெரியார் குறித்த விமரிசனக் கண்ணோட்டத்திலான தமது கருத்துகளை அவர் சிதம்பர ரகசிய மாக மட்டுமே வைத்திருப்பது சரியல்ல. விரிவாக இல்லையெனி னும் ஒரு கோடாவது போட்டுக் காண்பிக்கலாம். மார்க்சிய லெனி னிய 'புரொக்ரஸ்டியன்' மேசையில் இதற்காகப் பெரியாரைக் கிடத்த வேண்டாம்; மார்க்சிய லெனினிய ஆய்வுக்கு உட்படுத்தலாம்.

7. இந்தக் கட்டுரையில் எனக்கு பல பட்டங்களைச் சூட்டியுள் ளார். இதனால் அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டால் எனக்கும் மகிழ்ச்சியே. மாவோயிஸ்ட், முனைந்து பொய் சொல்பவர், பச் சைப் பொய்யர், யோக்கியப் பொறுப்பற்றவர் எனப் பலப்பல... எஸ். வி. ஆர். மீது எனக்கு எப்போதும் உரிய மதிப்பு உண்டு. இவ்வளவு பட்டங்களை எனக்கு வழங்கியபின் நான் எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவர் வருத்தப்படக் கூடாது அல் லவா? எனவே 'மாவோயிஸ்ட்' என்ற பட்டத்தை மட்டுமே எடுத் துக் கொள்கிறேன்- அதற்கு முழு அளவில் உகந்தவனாக இன் றைக்கு இல்லை என்றாலும் கூட. மீதி தொப்பிகளைப் பொருத்த மான தலைகளில் சுமத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

8. தலித்துகள்மீது நான் திடீர் காதல் கொண்டுள்ளதாக எஸ். வி. ஆர். குறிப்பிட்டுள்ளார். அடக்கமாகவே சொல்ல விரும்புகி றேன்: எனக்குப் பக்குவமும் பார்வையும் கிட்டும்போதுதான் காதல் கொள்ள முடியும். எனக்கு முன்னரே பல தோழர்களுக்கு இந்தப் பக்குவமும் பார்வையும் வாய்க்கப் பெற்றிருக்கலாம். இப் போது அது அவ்வளவு முக்கியம் இல்லை. அத்தகைய வாய்ப்பைப் பெற்ற பின்னர் தலித் சிக்கல்களின் மீதான என் படைப்புகள் மீது (நூல்கள், கட்டுரைகள்) எஸ். வி. ஆர். என்ன கருத்துக் கொண் டுள்ளார் என்பதையே அறிய விரும்புகிறேன். என் கருதுகோள்க ளில் / முடிவுகளில் அவர் உடன்பாடு - மாறுபாடு கொண்டு வெளிப் படுத்தினால் அவரோடு விவாதிக்கும் அளவுக்கு என்னை உயர்த் திக்கொள்ள விரும்புகிறேன். இதுதான் தேவை; சரியான அணுகு முறை. இதை விட்டு விட்டு 'காதல், தன்னெழுச்சியா திட்டமிட் டதா' என்று பட்டிமன்றம் நடத்த வேண்டியது இல்லை அதற்கு எஸ். வி. ஆர். நடுவராக இருக்கவும் வேண்டியது இல்லை. பத் தாண்டுகட்கு முன்பு (பரிமாணம் அக் - டிசம்.1985, பக். 90) எஸ். வி. ஆர். எழுதியதை இங்கு நினைவு கூர்தல் பொருத்தமாக இருக் டும் எனக் கருதுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



"30 - 40 ஆண்டுகளாகத் தமிழக மறுமலர்ச்சிக்கு உரிமை கொண்டாடி அரசியல் – பண்பாட்டுத் துறைகளில் மேலாதிக்கம் செலுத்திவரும் ஒரு போலி இயக்கம்..."

எனக் குறுப்பிட்டுள்ளார். இந்தப் போலி இயக்கம் எது என்பதை இப்போதாவது விளக்க வேண்டுகிறேன்.

9. இறுதியாக மிகச்சிறிய வேண்டுகோள். மொத்தக் கட்டுரையின் தொனி, என்னைப் பார்ப்பனிய ஆதரவாளனாக அடையாளப்படுத்த வீண் முயற்சி கொண்டுள்ளது. திராவிட இயக்கத்தினரின் பார்ப்பனியப் புரிதலோடுகூட என் படைப்புகளை வாசிக்கும் பொழுது அத்தகைய முடிவுக்கு வர சாத்தியமே இல்லை. அதையும் கடந்த ஒரு நிலைப்பாட்டிலிருந்து பார்ப்பனியத்தை அணுகுவதாகக் குறிப்பிட்டுக் கொள்ளும் எஸ். வி. ஆர். எங்கிருந்து இத்தகைய புரிதலைப் பெற்றார் எனத் தெரியவில்லை. என் படைப்புகளில் இருந்தா? அன்றி, ஆசைபற்றி அறையலுற்ற அகவய விருப்பிலிருந்தா?

தன்னோடு முழு அளவில் உடனடியாக உடன்படாத எல்லாரையும் எப்படியாவது எதிரி முகாமில் பிடித்துத் தள்ளிவிட்டு அவர்கள் மீது முத்திரை குத்தும் போக்கு பற்றி எஸ். வி. ஆர். நிறைய விமரிசித்துள்ளார். இப்போது அந்தப் போக்குக்கு எஸ். வி. ஆர். பலியாகிவிட்டாரோ என அஞ்சவேண்டியுள்ளது. என் அச்சம் நிகழ்வாகிவிடக் கூடாது எனவும் விரும்புகிறேன்.

பார்ப்பனிய எதிர்ப்பாளர்களுக்கு இடையில் பல கருத்து வேறுபாடுகள் உண்டு. இதை அங்கீகரிப்பது சனநாயக உரிமையை அங்கீகரிப்பதாகும். இத்தகைய வேறுபாடுகளை விவாதங்களின் மூலமும் சமூக நடைமுறைகளின் மூலமும் களைய முடியும். அவ்வாறு அல்லாமல் பார்ப்பனிய எதிர்ப்பாளர்களே எதிரெதிர் முகாம்களில் தங்களை நிறுத்திக் கொண்டு அம்பறாத்துணி காலியாகும்வரை அம்புகள் தொடுப்பதும் மோதிக்கொள்வதும் பார்ப்பனியத்துக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாகும். இதை நான் சொல்லி எஸ். வி. ஆர். தெரிந்து கொள்ள வேண்டியது இல்லை. அன்றைக்குப் பாட்டாளி வர்க்க எதிரி என்ற முத்திரையைக் கையில் வைத்திருந்ததற்கு மாறாக இன்றைக்கு பார்ப்பனிய ஆதரவாளன் என்ற முத்திரையைக் கையில் வைத்துள்ளோம். இடம் மாறி பதிக்கப்பட்ட முத்திரைகளால் பயணங்கள் தடம் மாறிப் போயுள்ளன என்ற வரலாற்றுச் சோகத்தை எஸ். வி. ஆருக்கு நினைவுபடுத்துதல் என் கடமையாகும்.

**கோ. கேசவன்**

படிப்பகம்

www.padippakam.com



## ஸ்தல மகாத்மியம்—

"ராவுத்தர் தெரு
மரத்தடி மகமாயி கோயில்ல
சாமி அசைஞ்சு அசைஞ்சு
ஆடுதாண்டோய்"

செவிமாறி
செவிமாறி
செய்தி பரவ
ஊர் சேர்ந்தது அங்கே

புதுசாய் உண்டியல்கள்
அய்யர்
ஒலிபெருக்கி திருவிழா
பால்குடம் காவடி
பரபரப்பாயிற்று கொஞ்சநாளில்

வேலை கிடைச்சுதாம்
வியாதி தீருதாம்
லாபம் கொட்டுதாம்

ஏதேதோ மகாத்மியம் சொல்ல
வாகனங்களிலிருந்தும்
வந்து குவிந்தனர் மக்கள்

அர்ச்சனை டிக்கெட்
சிறப்பு தரிசனம்
பெட்டி கடைகள்—என
மவுசு கூடிற்று இன்னும்

பின்னால் போகும் சாக்கடையில்
உடைப்பெடுத்த துளைவழியே
அதிக தண்ணீர் வரும் போது
விக்ரகம் ஆடுதென
பொறியாளர் ஒருவர் சொல்லும்வரை
சிதறாதிருந்தன நம்பிக்கைகள்.

—ரவிசுப்பிரமணியன்

படிப்பகம்

www.padippakam.com

# எஸ். வி. ராஜதுரை காளூதுகிறார்

'கவிதாசரண்' ஆசிரியரிடமும் வாசகர்களிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு இக்கட்டுரையைத் தொடங்க விரும்புகிறேன். இக்கட்டுரையில் விவாதிக்கப்படும் பல விஷயங்கள் மத்திய கால ஐரோப்பாவில் கிறிஸ்துவப் பாதிரிகளிடையே நடந்து வந்ததே ஒரு விவாதம், அதாவது ஒரு ஊசிமுனையில் எத்தனை தேவதைகளால் நடனமாட முடியும் என்பது குறித்த விவாதம், அதனையொத்தவை. நமது இன்றைய வாழ்க்கைக்குச் சிறிதும் சம்பந்தமற்றவை. எனினும் திரிக்கப்பட்ட வரலாற்றையும் செய்திகளையும் நேர் செய்வதற்காகச் சற்று விரிவாக எழுத வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்ட நான் அக் 'கட்டாயக் கடமை'யை நிறைவேற்றுவதற்காக 'கவிதாசரண்' ஏட்டில் ஏராளமான பக்கங்களை ஆக்கிரமித்துக் கொண்டு, எந்தக் குழுவையும் சாராமல் தனது வாழ்நாள் சேமிப்புகளையெல்லாம் தன்னலம் கருதாது செலவிட்டு வரும் கவிதாசரண் அவர்களுக்குக் கூடுதல் சுமையைத் தருவதற்காகவும், வாசகர்களின் பொறுமையைச் சோதிப்பதற்காகவும் மன்னிப்பு கோருகிறேன். இதற்காக நான், எனக்கு நானே தண்டனை விதித்துக்கொள்ள வேண்டுமென்றால், இப்படி ஒரு கட்டுரை எழுதுவதே போதும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

எனது முந்தைய கட்டுரையில் கடுஞ்சொற்கள் நிறைய இருந்தமைக்காகவும் "வெல்லப்பட முடியாத தத்துவங்கள்", "மாற்றப்படமுடியாத உண்மைகள்" என்பனவெல்லாம் தோல்வி கண்டு, முறிந்த எலும்புகளுடனும் உடைந்த மூட்டுகளுடனும் நொண்டியடித்துக் கொண்டிருக்கும் இந்த யுகத்தில் வரிந்து கட்டிக் கொண்டு ஒரு கருத்துப் போராட்டத்தில் இறங்குவதற்காகவும், ஏதோ ஒரு சிந்தனையாளர் அல்லது சமூகப்புரட்சியாளரைக் கட்டிக் காப்பதற்காக அவரது இயக்கத்தையோ இசத்தையோ சாராத நான் ஏதோ அந்தக் காரியம் என் தலையில்தான் விடிந்திருக்கிறது என்ற அகம் பாவத்துடன் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட நேர்ந்தமைக்காகவும் வெட்கப்படுகிறேன். எனினும் சில குற்றச்சாட்டுகளை நான் ஏற்கனவே தொடுத்துவிட்டதாலும் அவற்றுக்கான மறுப்புரைகள் எனக்குத் தரப்பட்டுவிட்டதாலும், அக்குற்றச்சாட்டுகளை மெய்ப்பித்தல் அல்லது திரும்பப் பெறுதல் ஆகியவற்றில் ஏதேனுமொன்றைச் செய்ய வேண்டியது எனக்குள்ள தார்மீகப் பொறுப்பாதலாலும் இந்த 'மெனக்கெட்ட' வேலையைத் தவிர்க்க முடியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



# 1

எனது குற்றச்சாட்டுகள் மூலமாக என்னை ஒரு 'வேதியனாக' உயர்த்திக் கொண்டுள்ளதாகவும், அவரை ஒரு 'புலையனாக' தாழ்த்திவிட்டதாகவும் கோ. கேசவன் (கோ. கே.) கூறுகிறார். அதாவது என்னிடம் 'பார்ப்பனியம்' இருப்பதாகக் கருதுகிறார். யாருமே பார்க்க முடியாத, அவரால் பார்த்திருக்க முடியாத ஆவணங்களை, ஏடுகளை அவர் பார்த்ததாக உரிமை கொண்டாடிக் கொள்வது ஒரு பாசாங்கு என்பதுதான் என் குற்றச்சாட்டு. எடுத்துக்காட்டாக, அவரது நூல்களில் 'இந்து', 'மெட்ராஸ் மெயில்', 'ஜஸ்டிஸ்', அயோத்திதாஸ் பண்டிதரின் 'ஒரு பைசாத் தமிழன்', 'தமிழன்', ரெட்டமலை சீனிவாசன் நடத்தி வந்த 'பறையன்', பிற தாழ்த்தப்பட்டோர் நடத்திய 'ஆதி திராவிடன்' போன்ற 50 - 70 ஆண்டுகளுக்கு முந்திய இதழ்களிலிருந்து சரமாரியாக மேற்கோள் காட்டுவார். பழைய அரசாணைகள் எல்லாம் அவர் வீட்டு அலமாரியில் தயாராக அடுக்கி வைக்கப்பட்டிருப்பது போல, பத்திக்கொரு அரசாணையை மேற்கோள் காட்டுவார். இது நமக்குப் பெரும வியப்பை ஏற்படுத்துகிறது. ஏனெனில்,

1. 'மெட்ராஸ் மெயில்' நாளேடு நிறுத்தப்பட்டு அதன் அலுவலகம் 'சீல்' வைக்கப்பட்டு இருபதாண்டுகளுக்கு மேலாகின்றன. கடந்த 15 ஆண்டுகளாகவே, அந்த அலுவலகத்துக்கு உரியவர்களிடம் சென்று அனுமதி பெற்று பழைய இதழ்களைப் பார்வையிடுவதற்கான வாய்ப்பு உலக அளவில் அங்கீகாரம் பெற்றுள்ளவர்களும் செல்வாக்கு மிகுந்தவர்களுமான ஆராய்ச்சியாளர்களுக்குக் கிட்டவில்லை. அந்த இதழ்களில் ஒரு சில மட்டுமே -யாராலும் எடுத்துப் பயன்படுத்தப்படமுடியாத நிலையில்- சென்னைப் பல்கலைக் கழக நூலகம், ஆவணக் காப்பகம் போன்ற இடங்களில் உள்ளன. 2. 'இந்து' பழைய இதழ்களைப் பார்க்க வேண்டுமானால், அதனை பார்ப்பனர்களிடம் செல்வாக்குடையவர்கள், என். ராம் போன்றோருடன் தொடர்புடையவர்கள், உலக அளவில் அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சியாளர் போன்றோருக்கே சாத்தியமாக உள்ளது. அதுவும் முன் கூட்டியே பெயர் பதிவு செய்து கொண்டு வரிசைக் கிரமப்படி Queuing System என்ற முறைப்படி, தனது முறை வரும்வரை ஒருவர் காத்திருக்க வேண்டும். பிறகு நுண் படங்களாக ( micro films ) மட்டுமே கிடைக்கிற பழைய இதழ்களைப் படிக்க 'ரீடர்' எனச் சொல்லப்படும் கருவியை அவரவரே கொண்டு வரவேண்டும் என்ற நிபந்தனையையும் இப்போது விதித்திருக்கிறார்கள். 3. 'ஜஸ்டிஸ்' ஏட்டின் பழைய இதழ்கள் சென்னையிலுள்ள டாக்டர் ராஜாராம் என்ற பேராசிரியரைத் தவிர வேறு யாரிடமும் இல்லை என்றே ஆராய்ச்சியாளர்கள் பலர் கூறுகின்றனர். (டெல்லி ஜவகர்லால் நேரு

படிப்பகம்

www.padippakam.com



நினைவு நூலகத்தில் சில இதழ்கள் உள்ளன.) 4. தலித்திய ஆய்வாளர்கள், 'ஒரு பைசாத் தமிழன்', 'தமிழன்', 'பறையன்', 'ஆதி திராவிடன்' போன்ற மிகப் பழைய ஏடுகளின் இதழ் களைத் தேடிக் கண்டுபிடிக்க அரும்பாடு பட்டுக்கொண்டிருக் கிறார்கள். அவற்றில் ஒரு சிலவற்றை வைத்திருக்கும் சில தலித் பெரியவர்கள், தங்களாலும் பயன்படுத்தப் படாமலும் பிறருக்கும் அதைத் தரும் மனமில்லாமலும் பொத்திப் பாது காத்து வருகின்றனர்.

இவை எல்லாவற்றையும் 'கோ. கே. திரட்டி வைத்திருக்கக் கூடும். எனினும் ஒரு ஆராய்ச்சியாளருக்கு இருக்க வேண்டிய குறைந்த அளவு நேர்மை என்கிற வகையில் அவர் கீழ்க் கண் டவற்றைச் செய்திருக்க வேண்டும்:

1. தனது நூல்களில் பயன்படுத்தப்படும் பழைய ஏடுகள், ஆவணங்கள் முதலியன (நூல்கள் இதற்கு விதி விலக்கு என்றாலும் ஒரு அரிய நூல் பயன்படுத்தப்படும்போது அது குறித்த தகவலும் தேவை) எந்தப் பொது / தனியார் நூலகத் தில், காப்பகத்தில் கிடைக்கின்றன, குறிப்பிட்ட அரசாணை உள்ள கோப்பு எண் என்ன என்பதான தகவல்களைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அப்போதுதான் பிற ஆராய்ச்சி யாளர்கள் தமது ஆராய்ச்சிகளைத் தொடரவோ முந்தைய 'ஆராய்ச்சிகளை' சரிபார்க்கவோ முடியும்.

2. தான் சரமாரியாக மேற்கோள் காட்டும் 'இந்து', 'மெயில்', 'தமிழன்', 'ஜஸ்டிஸ்', 'பறையன்' முதலிய இதழ் கள், தனது நூலுக்கான 'பயன்பட்ட ஆதாரங்கள்' எனத் தரப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

கோ. கே. வின் மூன்று நூல்களில் இந்த விவரங்கள் ஏதும் கிடையாது. அவை: 1. சுயமரியாதை இயக்கமும் பொதுவுடமையும் (கோகே 1); 2. திராவிட இயக்கமும் மொழிக் கொள்கையும் (கோகே 2); 3. சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும் கோகே 3).

பிற ஆராய்ச்சியாளர்கள் ஏற்கனவே பயன்படுத்தியுள்ள தரவு களை அவர்களுக்குப் பிறகு வந்த ஆராய்ச்சியாளர் இரண்டாங் கையாக பயன்படுத்துவது தவறல்ல. ஆனால் அது 'இரண்டாங்கை தகவல்' என்று ஒத்துக் கொள்ளப்பட வேண்டுமேயொழிய, ஏதோ தானே அதனை நேரடியாகக் கண்டதுபோலக் கூறுவது, பிறரது 'உழைப்பு' க்குச் செய்யப்படும் அவமரியாதை. ஆனால் பிற பத் திரிகைகளில் வருகின்றவற்றை அப்படியே எடுத்துத் தாங்கள் சொந் தமாக எழுதுவதைப் போலக் காட்டுவதைப் புரட்சிகரப் பண் பாடாக வளர்க்கும் 'புரட்சி' இயக்கங்கள் இருக்கும் நம் நாட்டில் இது வொன்றும் பெரிய விஷயமல்ல என்று சிலர் கருதலாம்.

படிப்பகம்

www.padippakam.com



பிற நூலாசிரியர்களிடமிருந்து 'காப்பி'யடிக்கப்பட்டவை என நான் கருதுவனவற்றில் ஒரு சில எடுத்துக்காட்டுகளை மட்டும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்: முதலில் ஈ. சா. விசுவநாதனின் Political Career of E.V. Ramasamy, Ravi & Vasanthi Publishers, Madras, 1983 என்ற நூலினை எடுத்துக்கொள்வோம்.

நீதிக்கட்சிக்கு பெரியார் அனுப்பிய செயல் திட்டம் குறித்து இரண்டு நூல்களிலும் காணப்படும் கூற்று:

ESV, p. 174 - 175

The Tamilnad Congress leaders realised that the Justicites count on the mass support at the elections, especially with that part of the Self Respect programme which deals with the proposals to relieve the indebtness of agriculturalists, to imp liment a scheme of compulsory education and prohibition, to bring under state con trol and management all public utilities and to 'ensure a minimum living wages

......Satyamoorti, the then President of TNCC in a speech at Madras on 19 Nov-ember 1935 averred that the recently pro gramme framed at the Karachi Session of Congress 1931 and compared the former to 'stolen rags from the Congress which the Justicites could not wear but would use to deceive others.' (Hindu and Swa desamitran, 19 Nov. 1935.)

கோகே 1, 225

அன்றைய காங்கிரசுத் தலைவரான சத்யமூர்த்தி 'இந்தத் தீர்மானங்கள் கராச்சி மாநாட்டின் தீர்மானங்களிலிருந்து எடுத்தாளப்பட்டவையாகும்' என விமர்சித்தார் (ஜஸ்டிஸ். 19-11-1935

ஈ. சா. விசுவநாதனைக் காப்பியடிக்கும் வேகத்தில் கோ. கே., 'இந்து'வையும், 'சுதேசமித்திரனை'யும் 'ஜஸ்டிஸ்' ஆக மாற்றிவிட்டது குறிப்பிடத்தக்கது. தனது நூலில் பெரியாரையும் அவர் நீதிக்கட்சிக்கு அனுப்பி வைத்த திட்டத்தையும் சிறுமைப்படுத்தும் கோ. கே., அந்த நீர்த்துப்போன 'சமதர்மத் திட்டமும்'கூட காங்கிரஸ்காரர்களுக்கு எத்தனை கலக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பதையும் கராச்சி தீர்மானத்தில் இல்லாத 'வகுப்புரிமை' பெரியாரின் திட்டத்தில் இருந்த ஒரு விஷயமே அன்றைய காலகட்டத்தில் மிக முற்போக்கானது என்பதைக் குறிப்பிடாதது வியப்புக்குரியதல்ல. "வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் சாதி வேறுபாடுகளைதலும் மட்டுமே காங்கிரசுக்கும் பெரியாருக்கும் இடையிலான

படிப்பகம்

www.padippakam.com



வேறுபாடு" (கோகே 1, 226) என்ற கூற்றின் மூலம் இந்த இரண்டு பிரச்சனைகளும் மிக அற்பமானவை என்று கூறியிருக்கிறார் கோ. கே.

ESV, p 178

The crushing defeat sustained by the Justice Party in the district board elections had a psychological effect on the Justlcites. Veterans like Natesa Mudallar doubted the political future of the Justice Party and freely talked in terms of merging it with the Congress provided it acc-epted the principle of communal representation in government services for atleast 20 years or more (Mail 6 and 7, January 1936). Naicker also shared his views, met Rajaji on 3 June 1936, and had informal talks with him regarding the possibility of coming to an understanding over the question of communal representation in public services. Neither Rajajl nor TNCC was wllling to accede to this request. (Mail and Hindu, 3 June 1936)

கோ கே 1, 233

1936 தேர்தல்தோல்விக்குப் பின் நீதிக்கட்சியைக் காங்கிரசில் இணைத்துவிடலாம் என்றும், காங்கிரசு 20 ஆண்டுகளுக்காவது வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொண்டால் அவ்வாறு இணையலாம் என்றும் நீதிக்கட்சிப் பிரமுகர்கள் (மெயில், 6, 7-1-1936) இந்தப் பாதைக்கு உடன்பட, பெரியார் இது குறித்து இராசாசியைக் குற்றாலத்தில் சந்தித்தார். எனினும் காங்கிரசு இதற்கு உடன்படவில்லை. (இந்து 3-6-1936.)

பெரியாரை ஒரு 'பிழைப்புவாதி' என்று 'நிரூபிப்பதற்காக எழுதப்பட்ட கோகே 1, தான் ராஜாஜியைச் சந்தித்தது பற்றி ஒரு தன்னிலை விளக்கம் கொடுத்தாரே பெரியார், தங்களிருவருக்குமிடையே தனியாத தனிப்பட்ட நட்பு (இதைக் 'காதல்' என்றே பெரியார் கூறுகிறார்) ஒருபுறம் இருந்தாலும், இருவருக்குமே காங்கிரஸ், ஜஸ்டிஸ் இரண்டும் நடத்தும் கிளர்ச்சிகளில் அதிருப்தியும், இருவரும் சேர்ந்து வேலை செய்வதில் விருப்பமும் இருந்தபோதிலும் ஆழமான வேறுபாடுகள் இருப்பதைப் பற்றிக் கூறுகிறாரே பெரியார் (ஈ. வெ. ரா. - சி. ஆர் சந்திப்பு, குடிஅரசு, 14-6-1936)- அதையுமல்லவா கோகே கருத்தில் கொண்டிருக்க வேண்டும். பார்ப்பனீயத்தையும் பணக்காரனீயத்தையும் ஒழிக்காமல் சாகமாட்டேன் எனச் சூளுரைத்த ப. ஜீவானந்தம், 1936 ஜில்லா போர்டு தேர்தலில் நீதிக்கட்சி பணக்காரர்களை மட்டும் எதிர்த்து, நாகப்ப செட்டியார் போன்ற காங்கிரஸ் பணமுதலைகளை ஆதரித்துப் பிரசா

படிப்பகம்

www.padippakam.com



ரம் செய்ததையும் (குடிஅரசு 20 - 12 - 36) குறிப்பிட்டிருக்கலாம். அன்றிருந்த அரசியல் சூழலில் காங்கிரஸ், நீதிக்கட்சி ஆகியவற்றுக்கு மாற்றாக ஏதும் இல்லை. பார்ப்பன – பார்ப்பனிய எதிர்ப்புப் போராட்டம், வர்க்கப் போராட்டம், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம், தாழ்த்தப்பட்டோர் உரிமைப் போராட்டம், பெண் விடுதலைப் போராட்டம் முதலிய பல்வேறு போராட்டங்களைக் கருத்தில் கொண்டு பன்முகப் போராட்டம் நடத்தும் தகுதியும் ஆற்றலும் கொண்ட ஒரு பொதுவுடமைக்கட்சி - ever absent party! இருக்கவில்லை. அத்தகையதொருகட்சி தோன்றுவதற்காக ஆயிரம் ஒளி ஆண்டுகள் காத்திருப்பதைவிட, கிடைக்கக்கூடிய எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தி, பொதுவுடமை சொர்க்கம் வரும்வரை காத்திராமல், வகுப்புரிமை போன்ற ஒரு சில அனுகூலங்களையாவது பெறுவதற்குத்தான் டாக்டர் நடேசன் காங்கிரசாரை அனுகியிருக்கிறாரேயன்றி பிழைப்புவாதத்துக்காக அல்ல.

ESV 247 கோ கே 2, 73

Yonder lies Natarajan... His heart ceased to beat, his blood ceased to circulate, and his hair standing on its end. Bur look at the face alone. Does it not indicate that he died while fighting in the battle for his independence and culture? All those of you who have mustered in your thousaads should make n promise that you would foilow the inspiring example of Mr Natarajan, who alas, is no more with us, to participate in the fight against an unwanted lauguage... If anyone were to ask you here after whether the introduction of Hindi will impair the growth of the Tamil language, your answer shall be 'Hindi has come, and a Tamilian died, dled while attempting to prevent it.' (Sunday Observer, 22 January 1935).

இதோ இங்கே நடராசனின் பிணம்...இவரது இதயம் துடிப்பதை நிறுத்தி விட்டது. இவரது இரத்த ஓட்டம் நின்று போயிற்று. இவரது தலைமுடி குத்திட்டு அசைவற்று நிற்கிறது. தன் இனத்தின் சுதந்திரத்துக்கும் கலாச்சாரத்துக்கும் உரிய போரில் சண்டையிடும் பொழுது இவர் மரணம் அடைந்தது இது எடுத்துக்காட்டவில்லையா? ஆயிரக் கணக்கில் திரண்டுள்ள மக்களே! நடராசனின் எழுச்சி மிக்க உதாரணத்தை நாமும் பின்பற்ற உறுதி எடுத்துக் கொள்ள வேண்டாமா? அந்தோ பரிதாபம்! நடராசன் நம்மிடம் இல்லை...இந்தி திணிக்கப்பட்டால் தமிழ் மொழியின் வளர்ச்சி கெடுமா என்று இனியாரேனும் கேள்வி கேட்டால் அவருக்குச் சொல்லுங்கள்: இந்தி வந்தது, ஒரு தமிழன் இறந்துபோனான்; அதைத் தடுக்கும் முயற்சியில் இறந்து போனான்.

படிப்பகம்

www.padippakam.com



Sunday Observer பத்திரிகை ஆங்கில மொழியாக்கம் செய்து வெளியிட்ட சி. என். அண்ணாதுரையின் (அண்ணாவின்) பேச்சை கோ. கே. தமிழாக்கம் செய்திருக்கிறார். அதனால்தான் இந்தத் தமிழ்ச் சொற்பொழிவின் மூலாதாரத்தை அவரால் தன் நூலில் சுட்டிக்காட்ட முடியவில்லை.

அடுத்ததாக, தமிழ் ஆராய்ச்சியாளர் டி.பி. கமலநாதன் (காலஞ்சென்ற தென்னிந்திய பௌத்த சங்க அறிஞரும் சுயமரியாதை இயக்கத்துடன் தொடர்புகொண்டிருந்தவருமான ஏ.பி. பெரியசாமிப் புலவரின் மகன்) எழுதியுள்ள Mr. K. Veeramani, M.A., B.L. is refuted... (Ambedkar's Self-Respect Movement, Tirupattur, N.A., 1985)— TPK என்ற நூலை எடுத்துக்கொள்வோம்.

**T P K, p 62—63**

As early as 1909 the Dalit leaders focussed their views through Pandit C. Iyothi Dass and placed their demand as follows:- 'Communal Representation was required In Governer's Executive Council, Municipalities, Army, Medical, Police, Railway, Education according to their population basis. If Legislative Council is to select 100 members, it should be done under the ratio given:- 1. Non-caste Dravidians (Depressed Classes)—25 ·/., 2. Caste Hindus – 25 ·/. 3. Moghumedans— 25 ·/., 4. Europeans—13 ·/., 5. Native Christians— 12·/. Executive members' period should be fixed to only one year (Pandit C. Iyothi Dass, Tamilan, dt. 3-2-1909, p 3). Protest came from Hindus about the demands made by Dalits. A modified demand was placed in the next writing by Pandit C. Iyothi Dass as follows: 1. Caste Hindus— 20·/. 2. Non-Caste Dravidians (Depressed classes) — 20·/. 3. Moghumedans – 20·/. 4. Europeans— 20·/. 5. Native Christians— 20·/. (Pandit C. Iyothi Dass, Tamilan, 10-2-1909). After the stout objection from the Hindus for the

**கோ கே 3, 42**

தமிழ்நாட்டுத் தாழ்த்தப்பட்டவர்களான தங்களுக்கு மக்கட்தொகை அடிப்படையில் ஆளுநர் நிர்வாக மன்றம், சட்ட மன்றம், நகர சபைகள், இராணுவம், மருத்துவத் துறை, காவல் துறை, இரயில்வே, கல்வித்துறை என எல்லாவற்றிலும் 20 சதவீத வகுப்புவாரி இட ஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டும் என வேண்டினர் (10-2-1909). இந்த மனுவில் தாழ்த்தப்பட்டோர் சாதியற்ற திராவிடர் எனக் குறிப்பிடப்பட்டனர். இது மறுக்கப்பட்டதை எதிர்த்து கற்றறிந்த

படிப்பகம்

www.padippakam.com



demand of Dalits to communal Representation, the Dalit leaders organised a Signature campaign. They obtained 2713 signatures during April and May 1909, from the educated employed Dalits in gouernment services, working In the private European companies, Railway office, Merchants, contractors, those who own lands, domestic servants employed in Eropean houses and submitted to the British Government to impliment the Commnnal Representation (Pandit C. Iyothi Dass, Tamilan dt. 26-5-1909).

மற்றும் பணி புரிகின்ற, சிறு நிலவுடைமைகொண்ட தாழ்த்தப்பட்டோர் (2713 பேர்கள்) வகுப்பு வாரி ஒதுக்கீட்டை அமுலாக்க வேண்டி அறிக்கை வெளியிட்டனர் (தமிழன், (26-5-1909).

இங்கு ஒரு 'பஞ்சமரின்' அறிவு உழைப்பை அறுவடை செய்து கொண்ட 'வேதியர்' யார் என்பதை வாசகர்களே முடிவு செய்து கொள்ளட்டும்.

கவிதாசரண் அக்டோபர் - நவம்பர் 995 பக்கம் 39 இல் நான் குறிப்பிடுவது ஈ. சா. விசுவநாதனையும் அவரைக் காப்பியடித்ததாக நான் கருதும் கோ. கேசவனையும்தான். ஆனால் பக்கம் 32இல் நான் குறிப்பிடுவது அரசூர் விச்வநாதனை. இரண்டு விசுவநாதன் களையும் சேர்த்துக் குழப்பிக் கொள்வது கேசவனின் குற்றம். நான் என்ன செய்வது.

## 2

கோ. கே. வின் நூல்களில் "விவரப்பிழைகள், முழுப் பொய்கள், அரை உண்மைகள்" இருப்பதாக நான் கூறிய குற்றச்சாட்டுகளுக்கு ஏராளமான எடுத்துக்காட்டுகளைக் கூறமுடியும். அவருடைய மூன்று நூல்களின் நோக்கம் பெரியாரைப் பற்றியும் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும் ஒரு வக்கிரமான விளக்கத்தை வன்மையாகவோ அல்லது மென்மையாகவோ வழங்குவதுதான். எந்த ஒரு மனுஷியின் / மனிதனின் சிந்தனையும் பரிணாம வளர்ச்சியைக் கொண்டதுதான். சாதி எதிர்ப்பு பெரியாரிடம் 1919 ஆம் ஆண்டிலிருந்தே இருந்தது என்பதற்குச் சான்றாக இதைக் கூறலாம்.

"பிராமணனோடு அமர்ந்து உணவு கொள்ள விரும்பும் வேளாளன் பஞ்சமரோடு அமர்ந்து உணவு கொள்ள விரும்புகிறானில்லை. பிராமணனோடு கலக்க விரும்புமிவன் ஏன் பஞ்சமரோடு கலக்க விரும்பலாகாது? நம்மவருள் பலர் தாழ்ந்த வகுப்பாரோடு சகோதரத்துவம் காட்டாது பிராமணனிடத்துச் சகோதரத்துவமில்லை என்று கூறுவது அறியா

படிப்பகம்

www.padippakam.com



மையேயாகும். (வைசியமித்திரன், 12-10-1919, மேற்கோளிடப்பட்ட நூல்; மங்கள முருகேசன், சுயமரியாதை இயக்கம், ப. 102)

சாதி எதிர்ப்பு என்பதை இந்துமத எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, வேத புராண எதிர்ப்பு, கடவுள் மறுப்பு ஆகியவற்றுடன் இணைத்துத்தான் முழுமைப்படுத்த முடியும் என்ற நிலைக்குப் பெரியார் வந்து சேர சில ஆண்டுகளாகியிருக்கலாம். " 'குடிஅரசு' தொடக்க இதழ்களில் கோபுரம், மாதா கோயில், மசூதி ஆகிய சின்னங்கள் அச்சிடப்பட்டிருந்தன" என்ற மகத்தான கண்டு பிடிப்பைச் செய்துள்ள கேசவன் (அது அன்றைய கால கட்டத்தில் மிக முற்போக்கான காரியம் என்பதை இவர் உணர்வதில்லை.) "சாதிப்பட்டங்கள் பெயர்களுக்குப் பின் ஒட்டிக் கொண்டிருந்தன. எனினும் இவை 25-12-1927 இதழில் இல்லை. குடி அரசு தொடங்கும் நாளிலும் (2-5-1925) காங்கிரசு மாநாட்டைவிட்டுப் பெரியார் வெளியேறிய நாளிலும் (21-11-1925 பெரியார் சாதியை ஒப்புக்கொள்பவராகவும் சமய அபிமானத்தைக் கட்டிக் காப்பவராகவுமாக இருந்திருக்கிறார்" (கோகே 1, 23, 27). இதற்கு எந்த ஆதாரத்தையும் கோ. கே காட்டுவதில்லை. சாதி அபிமானம் பெரியாரிடம் இருந்தது என்று அவர் கூறுவதற்கான ஒரு ஆதாரம் அவர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் என்று தன் பெயரை அச்சிட்டு வந்ததுதான்! அது அவரைப் பொறுத்தவரை -கேசவன் சொக்கிக்குளம் என்பதைப் போல ஒரு பெயராக மட்டுந்தானே இருந்தது. அதிலிருந்துங்கூட அவர் 'நாயக்கர்' என்பதைக் கத்தரித்து எறிந்துவிட்டாரே. கத்தரித்து எறிவதற்கு முன் அவரிடம் சாதி அபிமானம் இருந்ததற்கான சான்றை கேசவனால் தரமுடியுமா? 'குடி அரசு' தொடங்கியபோது பத்திரிகை யலுவலகத்தைத் திறந்துவைக்கும்படி திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளைப் பெரியார் கேட்டுக் கொண்டு பெரியார் கூறியது இதுதான்:

> இப்பத்திரிகையை ஆரம்பிக்கும் நோக்கம் தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் இன்னும் மற்ற விஷயங்களையும் ஜனங்களிடை உணர்த்துவதற்கேயாம். (குடிஅரசு, 2-5-1925, மேற்கோளிடப்பட்ட நூல், மங்கள முருகேசன், ப: 215)

'குடிஅரசு' பத்திரிகையை பெரியார் மட்டும் தொடங்கவில்லை. தொடக்க நாட்களில் தங்கவேல் பிள்ளை என்பவரும் அதன் இணையாசிரியராக இருந்தார் என்பது ஒருபுறமிருக்க, இங்கு சாதியபிமானம் என்ற பேச்சே இல்லையே. பெரியாரின் சமயாபிமானம் என்பதுங்கூட எந்தவொரு குறிப்பிட்ட சமயத்தையும் ஆதரிப்பது என்பதாக இருந்ததற்கான சான்று இல்லை. அவருடைய சமயாபிமானம், இறைநம்பிக்கை என்பன ஒரு அறவியல் சார்ந்த ஆன்மீக நோக்கு என்பதற்குமேல் வேறேதுமல்ல என்ப

படிப்பகம்

www.padippakam.com



தற்கான சான்றுகளை பெரியாரை மேற்கோள்காட்டி மங்கள முருகேசன் மேற்குறிப்பிட்ட நூலில் (ப. 212, 217) வழங்குகிறார். கேசவன் (இவரது நூலும் 1990ஆம் ஆண்டில்தான் வெளிவந்தது.) மிகவும் சிரமப்பட்டு, பெரியார் நடத்திய முதல் சுயமரியாதைத் திருமணத்தில் "எல்லாம் வல்ல சக்தியை இறைஞ்சி வேண்டி வாழ்த்தினார்" பெரியார் என்பதைக் கண்டறிந்து சொல்லும் கேசவன் "இதில் ஓர் ஆண் இரண்டு பெண்களை மணந்தார்" என்ற செய்தியைக் குறிப்பிடுகிறார் (கோகே. பக்.23) இதே செய்தியைத் தனது நூலில் இரண்டு இடங்களில் குறிப்பிடத் தவறாத கேசவன் (ப 23, 125 அந்த இரண்டு பெண்களும் இறுதிவரை இணைபிரியாத தோழியர்களாக இருக்க வேண்டுமென உறுதி பூண்டு தாங்களிருவருமாகவே பேசி முடிவுசெய்து, திருமணம் செய்வதானாலும் ஒரே ஆடவரையே இருவரும் திருமணம் செய்துகொள்வோம் என்று கூறிவிட்டதால் அத்திருமணம் நடந்தது என்ற செய்தி அதே குடிஅரசு இதழில் இருப்பதைக் கேசவன் சுட்டிக் காட்டாததற்குக் காரணமில்லாமலில்லை. பார்ப்பனர் ஒழிந்த திருமணம், பார்ப்பனர் ஒழிந்த திதி என வருண அமைப்பில் உயரிடம் தரப்பட்டிருந்த பார்ப்பனரின் மேன்மையை மறுப்பதிலிருந்து தொடங்கி சடங்குகளே இல்லாத, தாலியே கட்டாத, சாதிக்கலப்புடைய ஆயிரக் கணக்கான நிகழ்ச்சிகளாக பரிணாம வளர்ச்சியடைந்த சுயமரியாதை திருமணங்கள், பிறப்பு இறப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மிக அலட்சியம் செய்து சில பக்கங்களை எழுதி பெரியாருக்கு முன்பே அத்தகைய சீர்திருத்தங்களைச் செய்துள்ளனர் பலர் என ஒரு பட்டியல் போடும் கேசவன் (கோகே 1, 22 - 124) பெரியாரும் சுயமரியதை இயக்கத்தினரும், சுயமரியாதைத் திருமணம் என்பதை பண்புவகையில் முற்றிலும் மாறுபட்டதும் புரட்சிகரமானதுமான ஒரு பரந்துபட்ட மக்களைச் சென்றடைந்த சமூக சீர்த்திருத்த இயக்கத்தின் பகுதியாக்கியதைச் சிறுமைப்படுத்துகிறார். (கோ கே, , 122 - 124.) அவரால் காண முடிந்ததெல்லாம் "சமயவரம்பிற்கு அப்பாற்பட்ட தன்மை" யையே.

பெரியாரின் இறை நம்பிக்கையை மெய்ப்பிக்க 1925 முதல் 1928 வரை பல எடுத்துக்காட்டுகளை 'குடிஅரசு' இதழ்களிலிருந்து எளிதாக எடுத்துக் காட்டும் வாய்ப்பு இருக்கும்போது மிகச் சிரமப்பட்டு ஒரு தவறான செய்தியைக் கூறுகிறார் கேசவன். செங்கல்பட்டு மாவட்டக் கழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் மாநாட்டில் பெரியார் பேசியதாகக் கீழ்க் கண்டவற்றைக் குறிப்பிடுகிறார். (கோகே 1 23.)

> நம் கவலைகளை மறந்து நமது குறைகளைப் போக்கும்படி நாமே கடவுளரிடம் முறையிட்டுக்கொள்வதற்கு ஏற்ற நிர்மலமான தூய ஸ்தல மொன்றே அத்தியாவசியமாகும். இனியேனும் தமிழ் மக்கள் உண்மைத் தெய்வ பக்தர்களாய் உல

படிப்பகம்

www.padippakam.com



கத்தில் தலைமை ஸ்தானத்தை வகிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன் (குடிஅரசு, 27 - 5 - 1928)

இந்தக் 'குடிஅரசு' இதழ் 7, 17 ஆம் பக்கங்களில் பு. நெ. ரா- என்பவர் எழுதிய தமிழரின் 'தெய்வ வழிபாடு' என்ற கட்டுரையிலுள்ள பகுதிதான் இது! பெரியாரிடம் ஒவ்வொரு அணுவிலும் அங்க அசைவிலும் சொல்லிலும் செயலிலும் குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்ற வன்மத்தோடும் வக்கிரபுத்தியோடும் எழுதப்பட்டுள்ள 'சுயமரியாதை இயக்கமும் பொதுவுடமையும்' என்ற நூல், பெரியாரின் குடும்பம் தெலுங்கு பேசும் பலிஜா நாயுடு குடும்பம் (கோ கே 1, 7) என்ற தவறான செய்தியுடன் தொடங்குகிறது. பிறகு, 1915 இல் ஈரோடு நகர மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பெரியார், அவரது "எதிரிகள் இவரது (பெரியாரின்) நடத்தைகள் குறித்து மேலிடத்துக்குப் புகார் செய்த காரணத்தினால் மேலிடத்தின் வற்புறுத்தலால் பதவி விலகினார்" என்ற ஒரு அவதூற்றைச் செய்கிறது (கோகே , 8). அதற்கு ஆதாரமாக கிறிஸ்தோபர் ஜான் பேக்கர் என்ற வெள்ளைக்காரர் எழுதிய An Indian Rural Economy 1880 - 1955. The Tamilnadu Countryside என்ற புத்தகத்தின் 508ஆம் பக்கத்தைச் சுட்டுகிறார். இந்த ஆங்கிலப் புத்தகத்தின் 508 ஆம் பக்கத்தில் இருப்பது Crop yield per acre in selected Districts என்பதற்கான ஒரு Graph!

இந்தக் கூற்று உள்ள பத்திக்கு முதல் பத்தியில் கோ. கே. பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ள சாமி சிதம்பரனார் தரும் தகவல்களை அப்படியே ஏற்றுக் கொள்கிறார். ஆனால், சாமி சிதம்பரனாரின் நூல், நகராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து பெரியார் விலகியதற்கு ஒரு உன்னதமான காரணத்தைக் கூறுவதால், பெரியாரைக் கேவலப்படுத்தும் ஒரே நோக்கத்துடனேயே தனது நூலை எழுதியுள்ள கோ. கே. நகராட்சித் தலைவர் பதவி விலகலுக்கான காரணத்திற்கு மட்டும் சாமி சிதம்பரனார் நூலைத் தவிர்த்துவிடுகிறார். சாமி சிதம்பரனார் கூறுவதென்ன? 'பஞ்சாப் படுகொலையைக் கண்டித்து பதவியை ராஜிநாமா செய்தார் பெரியார்.' (சாமி சிதம்பரனார், தமிழர் தலைவர் - பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு, 1989, ப. 62.)

தான் காங்கிரசில் 1920இல் சேர்ந்ததற்கான நோக்கம் குறித்து பின்னாளில் பெரியார் 'கற்பிக்கும்' காரணங்கள், "வசதி கருதி சொல்லப்பட்ட நியாயங்கள்" என்று நிராகரித்துவிடுகிறார் கோ. கே. அப்பட்டமான பார்ப்பன தேசியக் கண்ணோட்டத்திலிருந்து பெரியார் பற்றிய நூலை எழுதியிருக்கும் ஈ. சா. விசுவநாதன் கூட "நாட்டின் அரசியல் விடுதலைக்கும் சமூக ஏற்றத் தாழ்வை நீக்குவதற்கும் காங்கிரசில் சேர்தலே பொருத்தம் என்று இராசாசி, வரதராஜுலு இருவரும் சொன்னதின் பேரிலேயே பெரியார் காங்கிரசில் இணைந்தார்" என்று கூறுகிறாரே, அதையும் மறுத்து

படிப்பகம்

www.padippakam.com



கோ. கே. வாதாடுவது என்னவென்றால் "...காங்கிரசின் வரலாற்றை ஆராய்ந்த பொழுது அந்தக் காலத்தில் காங்கிரசுக்கு அரசியல் விடுதலையின் மீது அக்கறையில்லை எனத் தெரிகிறது. பதவிகளை இந்தியர் மயமாக்குவதில் காங்கிரசுக்கு அக்கறை இருந்ததாகத் தெரிகிறது" என்ற கருத்தை பிபின் சந்திரா என்றவரலாற்றாசிரியர் மூலம் கொணர்ந்து இறக்குகிறார். (கோ.கே. 1) காந்திய காங்கிரஸ் சார்புடைய இதே பிபின் சந்திரா, 1920 இலிருந்து இந்திய அரசியலில் காந்தியின் வருகையின் காரணமாக காங்கிரஸ் வெகு மக்கள் தன்மையைப் பெற்றதாகவும், ஒத்துழையாமை, நிர்மானத் திட்டங்கள் ஆகியன மூலம் பதவி வேட்டைக்கு எதிராக அரசியலைத் திருப்பினார் என்றும் கூறுகிறார். மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்த்திருத்தத்தின் காரணமாக "பெருநகரத்தில் மையம் கொண்டிருந்த அரசு அதிகார பிரதிநிதித்துவ வாய்ப்பு புறநகரங்களுக்கும்" பரவி நகர்ப்புறங்களில் அரசியல் விரிவாக்கம் ஏற்பட்டு, "அரசு அதிகாரப் பங்கேற்கும் வாய்ப்பு புறநகரங்களுக்கும் விரிவடையும் காலத்தில் பெரியாரைப் போன்றவர்கள் (அரசியலுக்குள் காங்கிரசுக்குள்) ஈர்க்கப்பட்டனர்" (கோ கே 1, 12) காந்தியம் என்ற கருத்தியல் (அல்லது வேறு எந்த ஒரு கருத்தியலும்) அற்று சமூகச் செயல்பாடு பற்றிய பெரியாரின் சமூக அக்கறைக்கு இத்தகைய கொச்சைப் பொருள் முதல்வாத விளக்கத்தைத் தரும் கோ. கே., அடுத்த பத்தியில் இந்தியர் மயமாக்கும் அரசியல் சீர்திருத்தத்தினால் பெரியாரைப் போன்றவர்கள் காங்கிரசில் 'ஈர்க்கப்படுதல்' என்ற விளக்கத்தை மறுத்துவிட்டு புதிய விளக்கம் தருகிறார். அதாவது "மக்களிடத்திலுள்ள ஆதிக்க எதிர்ப்புணர்வுகளை எழுப்பிவிட்டு அதன் மூலம் கிடைக்கும் பேர ஆற்றலைப் (மன்னிக்கவும்! பேரம் பேசும் ஆற்றலைத்தான் தமிழ்ப் பேராசிரியர் கோ.கே. இப்படிக் குறிக்கிறார்! பயன்படுத்தி புதிய அரசியல் சீர்திருத்தங்களை அரசிடம் கோரிப் பெறுதலை மையமாகக் கொண்ட மக்கள் திரள் இயக்கங்கள் 1920 இன் தொடக்கத்தில் அறிமுகமாயின. இவ்வாறு சட்டவாதக் கிளர்ச்சிப் போர்த் தந்திர முறை கையாளப்பட்ட காலத்தில் நிர்வாக சீர்திருத்தம் கோரும் அறிவாளிகளும் உள்ளூர் செல்வாக்குமிக்கவர்களும் மைய நீரோடைக்கு ஈர்க்கப்பட்டனர்... இந்தப் பின்தளத்திலேதான்... பெரியாரின் மாகாண அரசியல் நுழைவும் ஏற்பட்டது" (கோ கே 1, 13, 14). அரசியல் சீர்திருத்தம் என்பதே பார்ப்பனர்களுக்கும் பணக்காரர்களுக்கும் படித்தவர்களுக்குமான விஷயம்தான் என்று கருதித்தான் பெரியார் ஹோம்ரூல் இயக்கத்தினரை, சுயராஜ்யக் கட்சியினரை, பின்னர் காந்தியையும்கூட கண்டித்தார் என்பதை அவரை மேலோட்டமாகப் படித்தவர்கள்கூட அறிவார்கள். பெரியார் காங்கிரசில் சேருவதற்கு முன் நகராட்சித் தலைவர் பதவியை விட்டு விலகினார் என்பது வரலாறு.

சுயமரியாதை இயக்கத்திலிருந்த தன்னலமற்ற தொண்டர்

படிப்பகம்

www.padippakam.com



களைப் பற்றி சிங்காரவேலர் கூறிய பாராட்டுரையைக்கூட ஏற்க மறுக்கும் ஒரு குள்ள மனம் எவ்வாறு பொருளுரைக்கிறது என்பதைப் பார்ப்போம்:

"எளிமையான தமிழில் மக்களுக்கு விளங்கும் வகையில் மக்களின் தரத்துக்கு ஏற்ப செய்திகளைச் சொல்லிவிடக் கூடிய தன்மை சுயமரியாதை இயக்கப் பேச்சாளர்களுக்கு இருந்தது. இது குறித்து ம. வெ. சிங்காரவேலர் அவர்கள் ஓரிடத்தில் கூறியதை இங்கு நினைவு கூரலாம்: 'சுயமரியாதை இயக்கத்தாரைப் போன்ற திறமையுடையவர்கள் மற்ற இயக்கத்தில் மிகச் சிலர்...இயக்கத் தொண்டர்கள் பேசும் திறமையே திறமை. இவ்வாற்றலையுடைய மக்கள் ஒரு காலத்தில் அரசியல் துறையில் நுழையுங்காலை இவர்களை வெல்வார் யார்? இவர்கள் முன் யார் நிகர்? எந்தக் கட்சியாயிருப்பினும் சுயமரியாதை இயக்கத் தொண்டர்முன் பேசும் திறமையில் யாருமில்லை என்றே சொல்லாம் (குடிஅரசு, 13 - 11 - 1932")

சிங்காரவேலரின் தீர்க்க தரிசனமிக்க இவ்வுரையில் இலட்சியவாதமிக்க சுயமரியாதை இயக்கத்தின் பேச்சாற்றல் புலனாகின்றது. ஆனால் பேச்சாற்றல் என்பது காரியவாதத்துக்கும் (Pragmetism) பிழைப்புவாதத்துக்கும் (Careerlsm) பயன்பட முடியும் என்பது பின்னாளைய வரலாறு. (கோ கே, 127)

பெரியாரின் பிரிட்டிஷ் ஆதரவுப் போக்கை கீழ்க்கண்டவாறு 'நிரூபிக்கிறார்' கோ கே:

சுயமரியாதைக்கு பெரியார் கொடுக்கும் விளக்கத்தை அரசியல் துறைக்கு நீட்டிக்காமல் பிரிட்டிசு ஆதரவுப் போக்கு தென்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் சுயராஜ்யமா சுயமரியாதையா என்ற ஒன்றுக்கு ஒன்று முரணாக நிறுத்தப் படுகிறது. சுதந்திரமான மனிதனே சுயமரியாதையுடன் இருக்க முடியும். இது சகல துறைகட்கும் பொருந்தும் (கோ கே 1, 154)

இப்படி எழுதுவதைவிட பித்தலாட்டமான காரியம் ஏதாவது இருக்க முடியுமா? அன்று பார்ப்பன காங்கிரஸ் முன் வைத்து வந்த 'சுயராஜ்யம்' என்பதற்கு மாற்றாகவே 'சுயமரியாதை' என்பதை பெரியார் முன்வைத்தார் என்பதை அரைகுறை அறிவுள்ளவன்கூட அறிவானே!

பெரியார் குறிப்பிடுவதும்கூட "கலாச்சார சுயமரியாதையையே" என்று கூறும் கேசவன் எல்லா மக்களுக்கும் பயன்படும் படியான சுயமரியாதை என்று பெரியார் குடிஅரசு 1 - 5 - 1932 இதழில் கூறுவதை இவ்வாறு விளக்குகிறார். அந்த விளக்கத்துக்கு குடிஅரசு 11 – 10 – 1931 இதழில் உள்ள பெரியாரின் பேச்சொன்றை மேற்கோள் காட்டுகிறார்! கேசவன் எழுதுகிறார்:

படிப்பகம்

www.padippakam.com


எல்லா மக்களுக்கும் என்பதில் பார்ப்பனர்களை நாம் முதலில் நீக்கிவிட்டு இறுதியில் தீண்டத்தகாதவர்களையும் நீக்கிவிட வேண்டும். அன்றைய யதார்த்தம் அவ்வாறே இருந்தது. பார்ப்பனரல்லாத சாதிகளிடம் தீண்டத்தகாதாருக்கு சலுகைகள் வேண்டும் பொழுதும் (சமுதாய சீர்திருத்தம், பக் 24 மற்றும் 44). ஏனைய இடங்களிலும் ஆதிதிராவிடர் அல்லாத மக்களில் பார்ப்பனரல்லாத எல்லோருடைய நன்மைக்குமே பேசுவதாகப் பெரியார் குறிப்பிடுகின்றார் (குடிஅரசு, 11-10-1931). இங்கு பெரியார் குறிப்பிடும் தொடர் முக்கியமானதாகும். பார்ப்பனரல்லாதவர்கள் எனில் பார்ப்பனர்கள் தவிர்த்து தீண்டத்தகாதார் உட்பட என்று பொருளல்ல; பார்ப்பனர் தீண்டத்தகாதார் தவிர்த்த என்று பொருள். ஆக பெரியார் குறிப்பிடும் சுயமரியாதை அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளுக்கு இல்லாததோடு மட்டுமின்றி அவரது கலாச்சாரசுயமரியாதைஎன்பது பார்ப்பனர்- தீண்டத்தகாதார் அல்லாத மக்களை நோக்கியதாகவேயுள்ளது (கோகே 1, 154-155 அழுத்தம் அவருடையது).

பெரியாரை ஒரு தலித் விரோதியாகக் காட்ட முயற்சி செய்துள்ளார் என்று நான் குற்றம் சாட்டியது தவறா? இங்கு கேசவன் மேற்கோள் காட்டுகிறாரே, குடிஅரசு 11-10-1931 இதழில் பிரசுரமாகிய பெரியாரின் பேச்சு —அதிலிருந்து கேசவன் தனது நூலிலேயே மற்றோர் பக்கத்தில் (ப. 90) கீழ்க்கண்டவாறு மேற்கோள் காட்டுகிறார்:

> சாதியை ஒன்றாக்குகின்றோம். ஆம்! ஆக்க முயற்சிக்கின்றோம்... எங்கள் பெண்களைப் பறையனுக்குக் கொடுப்போமா என்று கேட்கப்படுகின்றது. இது ஒரு அறிவீனமான கேள்வி- அல்லது அயோக்கியத்தனமான கேள்வி. எங்கள் பெண்களை நாங்கள் அவர்களுக்கு இஷ்டப்பட்டவர்களுடன் கூடி வாழச் செய்யப் போகின்றோம்.
>
> ஆதி திராவிடர் நன்மை கருதி பேசப்படும் பேச்சுகளும் முயற்சிகளும் ஆதித்திராவிடரல்லாத மக்களில் பார்ப்பனரல்லாத எல்லோருடைய நன்மைக்கும் என்பதாக உணருங்கள். (அழுத்தங்கள் கோ. கேசவன்.)

நாகப்பட்டினத்தில் 3-10 1931 அன்று பெரியார் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து சில வாக்கியங்களை இப்படிப் பிரித்தெடுத்தும் சில சொற்களுக்கு மட்டும் அழுத்தம் கொடுத்தும் மேற்கோள் காட்டுவதன் மூலம் பெரியாரை தலித் விரோதியாகவோ அல்லது தலித்துகளை சூத்திரர்களுக்குப் பயன்படும் கருவிகளாகப் பார்த்தவராகவோ சூத்திரர்களுக்கும் தலித்துகளுக்குமிடையே கொள்வினை கொடுப்பினை இருப்பதை எதிர்த்தவராகவோ காட்டுவதற்கு மிக நாணயக் குறைவான வழிமுறையைக் கடைப்பிடித்திருக்கிறார் கேசவன். தலித்துகளின் கடைத் தேற்றத்தில்தான், விடுதலையில்

படிப்பகம்

www.padippakam.com



தான் சூத்திரர்களின் விடுதலை அடங்கியிருக்கிறது என்ற பொருளில் பெரியார் பேசியதை இப்படித் திரித்துக் காட்ட முயன்றிருக்கிறார் கேசவன். பெரியாரின் இச் சொற்பொழிவை முழுமையாகக் காண்கையில் கேசவனின் பித்தலாட்டம் தெளிவாகப் புலப்படும். அதற்கு முன்பு சிராவயலில் 7 - 4 - 1926 அன்று தலித்துகளிடையே பெரியார் ஆற்றிய உரையொன்றிலிருந்து சில பகுதிகளைப் படிப்போம்:

> 'பறையர்' என்கிற ஒரு சாதிப் பெயர் நம் நாட்டிலிருப்பதால் தான் 'சூத்திரர்' என்கிற ஒரு பெயர் நம் நாட்டில் இருக்கிறது. 'பறையர்' என்கிற சாதிப் பெயரைவிட, 'சூத்திரர்' என்கிற சாதிப் பெயர் இழிவானது. இந்து சாஸ்திரப்படி, பறைய ஸ்திரீகளில் பதிவிரதைகளுக்கும் சரியான ஒரு தாய்க்கும் தகப்பனுக்கும்—பிறந்தவர்களும் இருக்கலாம். 'சூத்திரர்'களில் அப்படி இருக்க இடமில்லை. ஏனென்றால் 'சூத்திரச்சி' என்றால் தாசி, வேசி மகள் என்பதுதான் பொருள். 'சூத்திரன்' என்றால் தாசிமகன், வேசிமகன் என்றுதான் பொருள். இதை ஒப்புக் கொள்ளாதவன் இந்து ஆக மாட்டான் என்பது சாஸ்திர சம்மதம். ஆகையால் என் போன்ற 'சூத்திரன்' என்று சொல்லப்படுபவன், 'பறையர்கள்' என்று சொல்லப்படுவோருக்கு உழைப்பதாகச் சொல்லுவதெல்லாம் 'சூத்திரர்கள்' என்று நம்மை யாரும் கருதக்கூடாது என்பதற்காகத்தானே யல்லாமல் வேறல்ல. ஆகையால் எனக்காக நான் பாடுபடுவது என்பது உங்கள் கண்ணுக்கு உங்களுக்காகப் பாடுபடுவதாய்த் தோன்றுகிறது. உங்களைத் தாழ்மையாகக் கருதும் பெண்களும், ஆண்களும், தாங்கள் பிறரால் உங்களைவிடக் கேவலமாய் — தாழ்மையாய்க் கருதப்படுவதை அறிவதில்லை. அன்னியர்களைத் தாழ்ந்தவர்களாக நினைக்கும் அறியாமையால் தங்களை மற்றவர்கள் தாழ்மையாய் நினைப்பது தங்களுக்கு ஈனமாய்த் தோன்றுவதில்லை. (குடிஅரசு, 25 - 4 - 1926, பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள், முதல் தொகுதி, ப. 84.)

இக்கருத்தைப் பெரியார் சிறுவத்தூரில் 12 - 6 - 1929 அன்று தலித்துகளிடையே பேசியுள்ளதையும் காணலாம். (குடி அரசு, 16 - 6 - 1929: ஈ. வெ. ரா. சிந்தனைகள், முதல் தொகுதி, ப. 57.)

நாகப்பட்டிணத்தில் சூத்திரர்களை விளித்துப் பேசிய பேச்சு முழுவதையும் இங்கு தருகின்றோம்:

> சாதியை ஒன்றாக்குகின்றோம். ஆம்! ஆக்க முயற்சிக்கின்றோம். அதில் சந்தேகமில்லை. ஆனால் சீக்கிரத்தில் முடியுமா என்பது சந்தேகம். மனித சாதி ஒன்றாகித்தான் தீர வேண்டும். அதற்குத் தடை செய்கின்றவர்கள் அயோக்கியர்கள் - மடையர்கள் என்று தைரியமாகச் சொல்லுகின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com



எங்கள் பெண்களைப் பறையனுக்குக் கொடுப்போமா என்று கேட்கப்படுகின்றது. இது ஒரு அறிவீனமான கேள்வி; அல்லது அயோக்கியத்தனமான கேள்வி என்றே சொல்லுவேன். ஏனெனில் எங்கள் பெண்களை நாங்கள் அவர்களுக்கு இஷ்டப்பட்டவர்களுடன் கூடி வாழச் செய்யப் போகின்றோமே யொழிய, எங்களுக்கு இஷ்டமானவர்களுக்குக் கொடுக்கும் உரிமையைக் கொண்டாடுகின்றவர்கள் அல்லர். பெண்களை ஒரு சாமானாகக் கருதி 'ஒருவருக்குக் கொடுப்பது' என்கின்ற முறையை ஒழிக்க முயற்சிக்கின்றோம்.

நண்பர்களே! நாங்கள் ஆதித் திராவிடர்களைப் பற்றிப் பேசும் போது, பார்ப்பனர்கள் மனவருத்தம் அடைவதில் அர்த்தம் உண்டு. ஆனால் பார்ப்பனரல்லாதார் மனவருத்தம் அடைவதில் சிறிதும் அர்த்தமில்லை. அது வெறும் முட்டாள்தனமும் மானமற்ற தன்மையுமேயாகும். ஏனெனில், நமது சமூகத்தில் பார்ப்பனர் என்கிற கூட்டத்தாராகிய 100க்கு 3 வீதமுள்ள ஜனத்தொகை நீங்கி, மற்ற ஜனங்களுக்கு இந்த நாட்டில் சூத்திரன் (அடிமை), ஆதித் திராவிடன் என்கின்ற பட்டமில்லாமல் வேறு எந்தப் பட்டத்தோடாவது யாராவது இருக்க முடியுமா? இருக்கின்றார்களா? என்று கருதியும், அனுபவத்தையும் கொண்டு பாருங்கள். சூத்திரன் என்கின்ற 'கலத்தில்' நீங்கள் பதியப்பட்டிருப்பதில் உங்களுக்குச் சிறிதாவது மானம் இருந்தால், பறையன் என்ற பட்டம் போவதில் கடுகளவாவது வருத்தமிருக்குமா?

பறையன் பட்டம் போகாமல் உங்களுடைய சூத்திரப் பட்டம் போய்விடும் என்று கருதுகிறீர்களேயானால், நீங்கள் வடிகட்டின முட்டாள்களேயாவீர்கள்.

மற்றும் பேசப் போனால், பறையன், சக்கிலி என்பதற்கு இன்னார்தான் உரிமை என்றும், அது கீழ் சாதி என்பதற்கு இன்னது ஆதாரமென்று சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. கைபலமேயொழிய, தந்திரமேயொழிய வேறில்லை. ஆதலால், பறைப்பட்டமாவது சீக்கிரத்தில் மறைந்துவிடக்கூடும். உங்கள் சூத்திரப் பட்டத்திற்குக் கடவுள், மதம், வேதம், சாஸ்திரம் புராணம், இதிகாசம், ஆகிய அனேக ஆதாரங்கள் உண்டு. இத்தனையும் நாசமாக்கி அடியோடு ஒழிக்காமல் உங்கள் தலையில் இருக்கும் சூத்திரப்பட்டம் கீழே இறங்காது.

ஆகவே யாருக்காவது மான உணர்ச்சி இருந்திருந்தால் "நீங்கள் சாதியை ஒன்றாக்குகின்றீர்களே!" என்று நம்மை கேட்டிருக்க மாட்டார்கள்.

ஆகவே ஆதித்திராவிடர் நன்மையைக் கோரிப் பேசப்படும் பேச்சுகளும் செய்யப்படும் முயற்சிகளும் ஆதித்திராவிடரல்

படிப்பகம்

www.padippakam.com



லாத மக்களில் பார்ப்பனரல்லாத எல்லோருடைய நன்மைக்கும் என்பதாக உணருங்கள். (குடிஅரசு, 11 - 10 - 1931 ஈ.வெ.ரா சிந்தனைகள், முதல் தொகுதி, ப. 59 - 60)

"தீண்டாமை என்பது ஏணிமரப்படி போல் இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் பீடித்திருக்கின்றது" (குடிஅரசு, 12- 4- 1931, ஈ. வெ.ரா. சிந்தனைகள், ப. 60) என்பதை உணர்ந்திருந்த பெரியார் சூத்திரர் விடுதலையும் தலித் விடுதலையும் பிரிக்க முடியாதவை என்று திரும்பத் திரும்பக் கூறியதில் வியப்பில்லை. சாதி ஒழிப்பு பற்றிப் பெரியாரின், சுயமரியாதைக்காரர்களின் பேச்சுகளும் கிளர்ச்சிகளும் சூத்திரர்களில் ஒரு பகுதியினருக்கு ஆத்திரமூட்டியிருந்தன. அன்று சுயமரியாதை இயக்கத்தை எதிர்ப்பதற்கும் ஒழிப்பதற்கும் பார்ப்பனர்களால் கூலி கொடுக்கப்பட்டு நடத்தப்பட்ட 'தேசபந்து' என்ற ஏடு (அதன் ஆசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் தமையனார் கிருஷ்ணசாமிப் பாவலர்.) சுயமரியாதை இயக்கத்தைக் கொச்சைப்படுத்த கட்டுரைகள் எழுதியும் கேள்விகள் எழுப்பியும் வந்தது. சுயமரியாதைத் திருமணம், கலப்புத் திருமணம் என்று சுயமரியாதைக்காரர்கள் பேசினால் உடனே ஜே. எஸ். கண்ணப்பர் (திராவிடன் ஆசிரியராக இருந்தவர்.) ஏன் ஒரு பறைப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது, ஏன உங்கள் வீட்டுப் பெண்ணை ஒரு ஆதித் திராவிடனுக்குக் கொடுக்கக்கூடாது என்ற வக்கரித்துப் போன கேள்விகளை 'தேசபந்து' கேட்டு வந்தது. தலித்துகளை மனிதர்களாகக் கருதி அவர்களது தன்னிலையை, ஆளுமையை அங்கீகரித்த அதே சமயம் பெரியாரும் சுயமரியாதை இயககத்தினரும் பெண்களின் தன்னிலையையும ஆளுமையையும் அங்கீகரித்தனர். அதனால்தான் 'பெண்கள் என்ன விற்பனைச் சாமான்களா எடுத்துக் கொடுப்பதற்கு. திருமணம் என்பது அவர்களது விருப்பத்தைப் பொறுத்த விஷயம்' என்று பெரியார் கூறினாரேயன்றி, கேசவன் திரித்துக் காட்டுவதுபோல் சூத்திரப் பெண்கள் தலித் ஆண்களைத் திருமணம் செய்து கொள்வது 'அயோக்கியத்தனம்' என்றல்ல. தலித் பெண்கள் தலித் அல்லாத ஆண்களையும் தலித் ஆண்கள் தலித் அல்லாத பெண்களையும் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டதற்கான எடுத்துக்காட்டுகளை நம்மால் தர இயலும். கேசவன் மேற்கோள் காட்டிய வரிகளை, பெரியாரின் முழுச் சொற்பொழிவுடன ஒப்பிட்டுப் பார்த்து, முனைவரின் மோசடித்தனத்தை உணரந்து கொள்ளுமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

'குடி அரசு' தொடங்கி ஆறு மாத காலம் முடிந்ததும் பெரியார் எழுதினார்:

நமது 'குடிஅரசு' பத்திரிகை ஆரம்பித்து ஆறு மாதங்களாகிறது. அது முக்கியமாய் நமது நாட்டுக்கு சுயராஜ்யமாகிய

படிப்பகம்

www.padippakam.com



மகாத்மாவின் நிர்மாணத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவும் தமிழர்களாகிய தீண்டாதார் முதலியோருடைய முன்னேற்றத்துக்காக உழைக்கவுமே ஏற்படுத்தப்பட்டது. (குடி அரசு, 1-11-1925)

'பார்ப்பனரல்லாதார்' என்ற சொல்லை இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்றவாறு இருவேறு பொருள்களில் பெரியார் பயன்படுத்துவதைப் பற்றி இக்கட்டுரையில் பிரிதோரிடத்தில் நான் விளக்குகிறேன். சூத்திரர்களை மட்டுமே குறிக்கக்கூடியதாகவும் சூத்திரர், தாழ்த்தப்பட்டோர் உள்ளிட்டவர்களைக் குறிக்கக் கூடியதாகவும் அவர் இச்சொல்லைப் பயன்படுத்துகிறார். எனினும் இந்த இரு பிரிவினரின் ஒட்டு மொத்தமான நலன்களையே அவர் தொடக்கம் முதல் வலியுறுத்தி வந்தார் என்பதற்கு மேலே கூறிய எடுத்துக் காட்டைத் தவிர 'பார்ப்பனரல்லாதார்' என்பதற்கு அவர் கொடுத்த வரையறையையும் இங்கே சுட்டிக்காட்டுகிறேன்:

தென்னாட்டில் பொதுவாக இக்கூட்டத்தாரை (பிராமணரை) நீக்கிய பொது ஜனங்களுக்கு பிராமணரல்லாதார் என்ற பெயர் வழங்கப்படுகிறது. முக்கியமாக இதில் கிறிஸ்துவர்கள், முகமதியர்கள் ஆங்கிலோ இந்தியர்கள் முதலிய இந்துக்களல்லாதவர்களும் பிராமணரல்லாதவர்களே. இந்துக்களுக்குள்ளும் பிராமணர் நீங்கிய மற்றவர்கள் பிராமணர்களால் ஏற்படுத்தப்பட்ட பல ஜாதிப் பெயர்கள் சொல்லிக் கொள்ளப்பட்டாலும் அவர்களும் பிராமணரல்லாதவர்களே. அல்லாமலும் தீண்டாதாரெனக் கூறி தொடக்கூடாதவர்கள், பார்க்கக் கூடாதவர்கள் என்று தள்ளி வைத்திருக்கும் ஒரு பெரும் கூட்டத்தாரும் பிராமணரல்லாதவர்களே. இவர்கள் யாரும் நாம் சொன்ன பிராமணர்களின் மாயவலையிலிருந்து தப்பி சுயமரியாதையுடன் வாழ வேண்டுமானால் தங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் சிறுசிறு வகுப்பு வித்தியாசங்களையும் பொருளற்ற ராஜீய அபிப்பிராய வித்தியாசத்தையும் மறந்துவிடுவதோடு தங்கள் சுய நன்மைக்காக பிராமணர்களுக்கு ஒற்றர்களாகவும் காட்டிக் கொடுப்பவர்களாகவும் இருக்கும் சிறுமைக் குணங்களைவிட்டு எல்லாரும் முன்னுக்கு வரவேண்டுமென்ற எண்ணத்துடன் சூழ்ச்சியின்றியும் துவேஷமின்றியும் மனம்பூர்வமாக ஒன்றுபட்டு பாடுபட்டு முன்னேற வேண்டும். (குடிஅரசு, 8-11-1925.)

கேசவனின் யோக்கியப் பொறுப்பற்ற தன்மையை நிரூபிக்க மேற்சொன்ன இரு உதாரணங்களே போதும். பெரியாரைத் திரித்துப் பொருள் கூறியபின் அவர் எழுதுகிறார்:

பார்ப்பனரல்லாதாரிடமிருந்து தீண்டத்தகாதாரைப் பிரித்து ஒதுக்கி, பார்ப்பனரல்லாதார் கொடுமைக்கு பார்ப்பனர்களைக்

படிப்பகம்

www.padippakam.com



காரணம் சுமத்தி, அவ்வாறு கொடுமைப்படுத்தலுக்கு ஏதேனும் உரிமை இருக்கின்றதையும் குறிப்பிட்டுச் சொல்லும் பெரியார், தீண்டத்தகாதாரின் நலன்கள் குறித்துப் பேசப்படும்பொழு தெல்லாம் அவற்றில் பார்ப்பனரல்லாதார் நலன்களே உள்ளன என்பதையும் போட்டு உடைத்துவிடுகிறார். பார்ப்பனரல்லா தார் என்பதில் தீண்டத்தகாத சாதிகள் இணைக்கப்படவில்லை. ஆக சுயமரியாதையும் சமத்துவமும் தீண்டத்தகாதவர்களுக்கு இல்லை என்பது பெரியாரின் கருத்து. (கோ கே 1, 91)

இங்கு எத்தகைய நாணயக் குறைவான 'ஆய்வு' போட்டு உடைக்கப்படுகிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

கேசவனின் நூலில் உள்ள பிற பித்தலாட்டங்களைச் சுட்டிக் காட்டுவதென்றால், மற்றொரு பித்தலாட்ட ஆய்வாளரான 'குணா' வின் 'திராவிடத்தால் வீழ்ந்தோம்' நூலுக்கு மறுப்புரையாகத் தோழர் 'விடுதலை' ராசேந்திரன் போல ஒரு பெரிய நூலினையே எழுத வேண்டியிருக்கும். இத்தகைய ஆய்வாளர்களையும் 'சீரிய சரக' எடுத்துக்கொள்பவர்களில் பேராசிரியர்கள், நூலாசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், மார்க்சியர்கள் என்ப வர்களும் இருப்பதாலேயே இந்த அளவுக்கு ஒரு விரிவான கட்டு ரையை எழுத வேண்டியதாயிற்று. இந்த நூல் பக்கத்திற்குப் பக்கம் பொய்களையும் திரித்தல்களையும் கொண்டுள்ளதால், எங்கு முழுப் பொய் சொல்லப்படுகிறது, எங்கு அரை உண்மை உள்ளது, எங்கு விவரங்கள் சிதைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நினைவில் வைத் துக்கொள்வது கடினமாக உள்ளது. எனவேதான் நெல்லூரில் நடந்த நீதிக்கட்சி மாநாட்டில் (அக்டோபர் 1929) பார்ப்பனர்களை நீதிக்கட்சியில் சேர்த்துக்கொள்வதுதொடர்பான பெரியாரின் நிலைப் பாடு திரிக்கப்பட்டு, கொச்சைப்படுத்தப்பட்டு, வக்கிரமான முறை யில் விளக்கப்படுகிறது என்று கூறுவதற்குப் பதிலாக "பார்ப்பனர் களை நீதிக்கட்சியில் சேர்க்கலாம் என்ற தீர்மானத்தைப் பெரியார் ஆதரித்தார் என்று கேசவன் கூசாமல் பொய் சொன்னதாக" நான் கூறியதன் மூலம் என் குற்றச்சாட்டை சரியானபடி முன் வைக்கவில்லை. இந்த Technical mistake செய்ததற்காக அவரிட மும் வாசகர்களிடமும் மன்னிப்புக் கோருகிறேன். நெல்லூரில் நீதிக்கட்சி மாநாடு நடப்பதற்கு முன் பிளவுபட்டிருந்த மூன்று சட்ட மன்றக் குழுக்களை இணைப்பதற்கான முயற்சி நடந்தது. சுப்ப ராயனின் அமைச்சரவையிலும் அவரது சட்டமன்றக் குழுவிலும் சேதுரத்தினம் அய்யர் என்ற பார்ப்பனர் இருந்ததாலும், அவரை விட்டுவிடக் கூடாது என்று சுப்பராயன் கருதியதாலும் நீதிக்கட்சி சட்டமன்றப் பிரிவில் பார்ப்பன சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வது என்ற தீர்மானம் வகுக்கப்பட்டது. பெரியார் நீதிக்கட்சியில் எவ்விதப் பதவியும் வகிக்காதவர். ஆயினும் அவர் எப்போதும் கௌரவ அழைப்பாளராக, ஆலோசகராக அழைக்கப் படுவதும் கலந்தாலோசிக்கப்படுவதும் வழக்கம். பார்ப்பனரல்லா

படிப்பகம்

www.padippakam.com



தார், தாழ்த்தப்பட்டோர், பெண்கள் ஆகியோரின் நலன்களை ஓரளவேனும் காக்கக்கூடிய பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்ற அடிப்படையில் நீதிக்கட்சியில் ஒற்றுமையை உருவாக்க விரும்பிய பெரியார் மெற்சொன்ன தீர்மானத்திற்கு ஆதரவு தந்தார். ஆனால் நீதிக்கட்சித் தலைவர்களிலொருவரான ஏ.பி. பாத்ரோ, பார்ப்பனர்களைக் கட்சி உறுப்பினர்களாகக்கூட அனுமதிக்கலாம் என்ற திருத்தத்தை நெல்லூர் மாநாட்டில் கொண்டு வந்தபோது அத்திருத்தத்தைப் பெரியார் எதிர்த்தார். பார்ப்பனரல்லாதார் கட்சியான நீதிக்கட்சியில் ஏன் பார்ப்பனர்களைச் சேர்க்கக் கூடாது என்று எழுதியதையும், பார்ப்பனரின் நியாயமான அரசியல் உரிமைகளை அவர் அங்கீகரிக்க மறுத்ததில்லை என்பதையும் முன் கவிதாசரண் இதழில் சுட்டிக் காட்டியுள்ளேன்.

மற்றோர் புறம், நீதிக்கட்சியின் சட்டசபைப் பிரிவில் பார்ப்பன சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளும் ஆலோசனைக்குத் தனது இசைவைத் தெரிவித்தபோதும்கூட கீழ்க்கண்ட நிபந்தனைகளை விதித்தார்:

"1. எப்படிப்பட்ட பார்ப்பனர்களையும் ஜஸ்டிஸ் கட்சியில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளக் கூடாது.

2. எந்தப் பார்ப்பனரையும் கட்சியின் பேரால் எந்தத் தேர்தலுக்கும் நிறுத்தக் கூடாது.

3. பார்ப்பனர்களுக்கு கட்சியின் சார்பாய் ஓட்டு சேகரிக்கக் கூடாது (குடிஅரசு, 13-10-1929)."

கோ.கேசவன் இப்பிரச்சனையை எவ்வாறு எடுத்துரைக்கிறார் என்பதைக் காண்போம்:

"சட்ட சபைப் பிரிவில் பிராமணர்களைச் சேர்க்க விரும்பிய பெரியார் அதற்கு மூன்று நிபந்தனைகளை விதித்தார் (குடிஅரசு 13-10-1929).

1. அவர்களை நீதிக்கட்சியில் சேர்க்கலாகாது.

2- நீதிக் கட்சியின் சார்பில் அவர்கள் தேர்தலில் நிறுத்தப் படமாட்டார்கள்.

3. எக்கட்சியின் சார்பில் நின்றாலும் அவர்களை ஆதரிக்கக் கூடாது

பத்ரோவின் திருத்தத்தை எதிர்த்துப் பேசிய பெரியாரின் மறுப்புரையில் காணப்படும் இந்த நிபந்தனைகள் அர்த்தமற்றவை. தனக்குப் பலம் வரும்பொழுது பார்ப்பனர்கள் ஆதரவு தேவையில்லையென்றும் பலம் இல்லையென்று தெரியும்பொழுது பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளவும் அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கவும் சிறிதும் பின்வாங்கக் கூடாதென்றும், சில சமயங்க

படிப்பகம்

www.padippakam.com



ளில் தைரியக் குறைவு ஏற்பட்டால் தாமாகவே பார்ப்பனர்களை நாடிக்கொண்டு போகலாமென்றும் பெரியார் குறிப்பிட்டார் (குடி அரசு, 13 - 10- 1929).'' —கோ கே ', 94.

பெரியாரின் நிபந்தனைகளிலுள்ள வாசகங்கள் கேசவனால் சிறிது மாற்றப்பட்டிருப்பது அவ்வளவு பெரிய விஷயமல்ல! இங்குக் கேசவன் இரண்டு விஷயங்களை வேண்டுமென்றே சேர்த்துக் குழப்புகிறார். ஒன்று, நீதிக்கட்சியின் சட்டமன்றப் பிரிவில் பார்ப்பன சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள பெரியார் தந்த இசைவு; மற்றொன்று, "எப்படிப்பட்ட பார்ப்பனர்களையும் ஜஸ்டிஸ் கட்சியில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளக் கூடாது" என்ற அவரது எதிர்ப்பு. அதாவது, ஏற்கனவே முத்தரப்புக் குழுவால் நிறைவேற்றப்பட்ட அசல் (oiginal) தீர்மானத்திற்கு பாத்ரோ கொண்டு வந்த திருத்தத்திற்கு எதிர்ப்பு.

நெல்லூர் மாநாட்டில் அசல் தீர்மானமும்கூட ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது. தான் இசைவு தந்த அந்தத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டதை வரவேற்று எழுதிய பெரியார், அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் நிறைவேற்றப்படாமல் இருந்திருந்தாலும் ஏற்படக்கூடிய விளைவு ஒன்றுதான் என்றும் பார்ப்பனரல்லாத கட்சியினரான நீதிக்கட்சியினர் பார்ப்பனர்களின் உதவியை நாடுதல் என்பதை தியாகராயர் காலத்திலிருந்தே (பெரியாருக்கு அக்கட்சியுடன் உறவு ஏற்படுவதற்கு முன்பிருந்தே) கடைப்பிடித்து வந்த உத்தி என்பதை இரண்டொரு உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டுகிறார். அன்றைய இரட்டையாட்சியில், முழு அதிகாரங்களும் அமைச்சரவையிடம் இல்லை. சில அதிகாரங்கள் ஆளுநரின் நேரடிப் பொறுப்பின் கீழ் இருந்தன. எனவே ஆளுநரின் விருப்பு வெறுப்புக்குட்பட்டுச் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பெரியார் இங்கு 'நாம்' என்று குறிப்பிடுவது ஜஸ்டிஸ் கட்சியையாகும்: "மந்திரி சபையை நாமாகவே நடத்திக்கொண்டு போக முடியும் என்கிற உறுதியான பலம் கொண்ட நிலைமை நமக்கு வரும்போது பார்ப்பனர்களை நாம் சேர்க்கவே மாட்டோம். நமக்கு பலமில்லை என்று தெரியும் பொழுது பார்ப்பனர்களைச் சேர்ந்துக்கொள்ளவும் அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கவும் சிறிதும் பின்வாங்க மாட்டோம். சில சமயத்தில் நமக்கு பலமும் கட்டுப்பாடும் இருந்தாலும் தைரியக் குறைவு ஏற்பட்டால் பார்ப்பனர்களை நாமாகவே தேடிக்கொண்டு போகிறோம். இதுதான் ஜஸ்டிஸ் கட்சியின் அனுபவமாகும். உதாரணமாக எத்தனையோ பார்ப்பனர்கள் தேவஸ்தான சட்டத்தை எதிர்த்தும் மற்றும் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும், அது நிறைவேறிய பின் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் தேவஸ்தான போர்டு தலைமைப் பதவியை ஒரு பார்ப்பனருக்கும், தேவஸ்தான கமிஷனர் பதவிகளில் ஒன்றை ஒரு பார்ப்பனருக்கும் வலியக் கொண்டுபோய் கொடுத்தார்கள். இதன் காரணம் என்னவென்றால் அந்தப்படி

படிப்பகம்

www.padippakam.com



செய்திருக்காத பட்சம் அதுசமயம் கட்சி நிர்வாகம் கஷ்டமானதாயிருந்திருக்கும்'' (குடிஅரசு, 13-10-1929).

ஒத்துழையாமை இயக்கம், சட்டசபை அலுவல்களை முடக்குதல் என்ற சுயராஜ்யக் கட்சியினர் கொள்கை என்பன உண்மையில் சென்னை மாகாணத்திலிருந்த பார்ப்பனரல்லாத அமைச்சரவையை நெருக்கடிக்குள்ளாக்கும் நோக்கம் கொண்டவையாக இருந்தன. அரசாங்க அதிகாரத்தை முதன்முதலாகப் பெற்ற பார்ப்பனரல்லதார் கட்சியானது மிகக் குறுகிய அந்த அதிகார வரம்புக்குள்ளிருந்து பார்ப்பனரல்லாதார் நலன்களுக்கான சில செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அந்த அடிப்படையான நோக்கங்களுக்காக பார்ப்பனர்களுடன் சில விட்டுக் கொடுப்புகளைச் செய்தது—அதுவும் 'தைரியக் குறைவு' இருந்தபோது—தவறானது அல்ல என்று பெரியார் கருதினார்.

அதேபோல 1926இல் நீதிக்கட்சி தோல்வியடைந்து, எக்கட்சிக்கும் பெருபான்மை இல்லாத சமயத்தில் காங்கிரஸ் கட்சியின் இரு பிரிவுகளும் ப. சுப்பராயனை முதலமைச்சராக்குவதில் வெற்றி பெற்றன. அவர்களின் ஒரே நோக்கம் பார்ப்பனரல்லாதார் கட்சியான நீதிக்கட்சி ஆட்சிக்கு வரக்கூடாது என்பதுதான். பார்ப்பனரல்லாதாரான ப. சுப்பராயனை ஆதரிப்பதன் மூலம் தாங்கள் பார்ப்பனரல்லாதார் நலன்களுக்கு எதிரானவர்கள் அல்லர் என்று காட்டுவதுதான் அவர்கள் முயற்சி. இங்கு நடந்த மற்றொரு நிகழ்ச்சியைப் பெரியார் மேற்சொன்ன கட்டுரையில் கூறுகிறார்:

...ஜஸ்டிஸ் கட்சி தோல்வி யடைந்து, பார்ப்பனக் கட்சி மந்திரி (ப. சுப்பராயனைத்தான் அப்படிக் கிண்டல் செய்கிறார் பெரியார். — எஸ். வி. ஆர்.) அதிகாரத்துக்கு வந்த சமயத்தில் அதே போர்டு தலைவர் பதவி (தேவஸ்தான போர்டு எஸ். வி. ஆர்.) காலியானதும் பார்ப்பனக்கட்சி மந்திரிகளாலேயே அது ஒரு பார்ப்பனரல்லாதோருக்குக் கொடுக்கப்பட்டது. இதைக் குறித்து ஒரு பார்ப்பனராவது சத்தம் போடவே இல்லை. இதன் காரணம் என்ன? இந்தப்படி செய்திருக்கவில்லையானால் அந்த மந்திரிகளின் நிர்வாகமானது அப்போது சற்று கஷ்டமானதாக இருந்திருக்கும்'' (குடிஅரசு, 13-10-1929). அதாவது நீதிக்கட்சி ஆட்சிக்கு வராதிருந்தாலே போதும், ஓரிரு பெரிய பதவிகளைப் பார்ப்பனரல்லாதாருக்கு சுப்பராயன் தருவதை எதிர்க்கக்கூடாது என்பதுதான் அன்றைய காங்கிரஸ் – சுயராஜ்யக் கட்சியாரின் எண்ணம்.

சேதுரத்தினம் அய்யர் ப. சுப்பராயன் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டதின் பின்னணியை முன் 'கவிதாசரண்' இதழ் கட்டுரையில் நான் விளக்கியுள்ளதால் அதை இங்கே திருப்பிச் சொல்லத் தேவையில்லை. சுப்பராயன் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதில் சுயராஜ்யக் கட்சியினருடன்

படிப்பகம்

www.padippakam.com



முதலில் ஒத்துழைத்த நீதிக்கட்சியினர், பின்னர் பெரியாரின் கண்டனத்திற்குப் பின் சுப்பராயனை ஆதரிக்கும்படி செய்யப்பட்டனர்.

இது குறித்துப் பெரியார் மேற்சொன்ன கட்டுரையில் எழுதுகிறார்: "பார்ப்பனரல்லாத மந்திரிசபையைக் கவிழ்த்த (சுப்பராயனின் அமைச்சரவையில் இருந்த 2ஆவது 3ஆவது அமைச்சர்கள் பதவி விலக நேர்ந்ததைப் பெரியார் இவ்வாறு குறிப்பிடுகிறார்.) பார்ப்பனரல்லதார் கட்சியானது (நீதிக்கட்சி– எஸ்.வி.ஆர்) ஒரு பார்ப்பனரல்லாத மந்திரியை ஒழித்து அந்த ஸ்தானத்தில் ஒரு பார்ப்பன மந்திரியை (சேதுரத்தினம் அய்யர்- எஸ். வி. ஆர்.) வைத்து ஆதரித்து, அதற்கு (சுப்பராயன் அமைச்சரவை எஸ். வி. ஆர்) எவ்வித ஆபத்தும் நேரிடாமல் இன்னும் காப்பாற்றிக்கொண்டுதான் வருகின்றது. இந்தப்படி செய்யாவிட்டால் பார்ப்பனரல்லாதார் கட்சிக்குப் போதிய அனுகூலம் கிடைக்காது என்கின்ற கவலைதானே ஒழிய, கனம் சேதுரத்தினம் அய்யரைக் காப்பாற்றாவிட்டால் பார்ப்பனரல்லாதார் கட்சியே அடியோடு அழிந்து போகும் என்கின்ற பயம் அல்லவே அல்ல."

பெரியார் மேலும் கூறுகிறார்: "அன்றியும் சென்னை அரசாங்க நிர்வாக சபையில் Governor's Executive Council மெம்பராயிருந்த திரு கே. சீனிவாசய்யங்கார் காலம் சென்றதும், அந்த ஸ்தானத்துக்கு திருவாளர்கள் எஸ். சீனிவாச அய்யங்காரும் சர். சி. பி. ராமசாமி அய்யரும் சர். தியாகராயர் வீட்டிற்கு நடந்ததில் சர். தியாகராயர் சர். சி. பி. அய்யரையே சர்க்காருக்கு சிபார்சு செய்தார். அந்தக் காலத்தில் சர் தியாகராயர் செல்வாக்கு அவ்வளவு பலமிருந்தும் ஏன் ஒரு பார்ப்பனரை சிபார்சு செய்தார் என்றால் அந்தக் காலத்தில் அது ஒரு பார்ப்பனருக்குக் கொடுத்துத்தான் தீர வேண்டிய நிலையில் சர்க்கார் இருந்ததுதான்." (குடிஅரசு, 13-10- 1929)

எனவே நீதிக்கட்சியினர் சட்டமன்றத்தில் பார்ப்பன சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வது, அவர்களுடன் ஒத்துழைப்பது என்பது பெரியார் விரும்பியிருந்தாலும் விரும்பியிருக்காவிட்டாலும் நடந்தே இருந்திருக்கும் என்பதும், அப்படி நடந்துகொண்டதுதான் அன்று பார்ப்பனரல்லாதார் நலன்கள் பொருட்டும் அன்றைய வரம்புகளைக் கருத்தில் கொண்டும் மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடிய சாத்தியமான ஒரே நடைமுறை உத்தி என்பதும் தெளிவு.

நீதிக்கட்சியில் பார்ப்பனர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பது, பார்ப்பனர்களைப் பற்றி பெரியார் வைத்திருந்த கண்ணோட்டம் ஆகியவற்றுக்கு கேசவன் ஒருவகை 'போஸ்ட் மாடர்னிச' விளக்கம் கொடுக்கிறார்- அதாவது ஒரு Textual Analysis மூலம் பெரியாரின் கூற்றுகள் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதாகக் காட்ட

படிப்பகம்

www.padippakam.com



முயற்சி செய்கிறார். பெரியாரின் கூற்றுகளையும் நிலைப்பாடுகளையும் அந்தந்தச் சூழலுடன் தொடர்பு படுத்திப் பார்த்துத்தான் புரிந்து கொள்ள முடியும் என்று கருதுகின்ற நான் இது குறித்துச் சற்று விரிவாக எழுத விரும்புகிறேன்.

நீதிக்கட்சித் தலைவர்களிடம் பார்ப்பன எதிர்ப்பு உறுதியாக இல்லாத நேரங்களில், சட்டமன்ற நடவடிக்கைகளில் பார்ப்பன சட்டமன்ற உறுப்பினர்களுடன் ஒத்துழைப்பு தவிர்க்க முடியாததாக, இன்றியமையாததாக இருந்த நிலையில் சட்டமன்ற அளவில் அவர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் என்ற நிலையைத் தாண்டி அவர்களை கட்சியிலும் உறுப்பினர்களாக்கலாம் என்று, சமூக-பண்பாட்டு விஷயங்களில் மிகப் பிற்போக்காளராக இருந்தவரும் அக்காரணத்தாலேயே பெரியாரால் தொடர்ந்து விமர்சிக்கப்பட்டு வந்தவருமான ஏ. பி. பாத்ரோ போன்றோர் விரும்பிய போது பெரியார் அதனை எதிர்த்தார். அந்த எதிர்ப்பினை எனது முந்திய கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளேன். 1929 இல் நீதிக்கட்சித் தலைவராக முனிசாமி நாயுடு தலைமையேற்றபோது, அவர் பார்ப்பன ஆதரவாளராக இருந்தார். பெரியார் பார்ப்பனர்களைச் சேர்க்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். இது குறித்து பெரியார் பின்னாளில் எழுதியதாவது:

> பார்ப்பனரல்லாதார் பெயரைச் சொல்லிக் கொண்டு, பெரிய மனிதனாகி, மந்திரி பதவியையும் பார்ப்பனரல்லதார் இயக்கத் தலைவர் பதவியையும் பெற்ற தோழர் முனிசாமி நாயுடு அவர்கள் பதவிக்கு வந்தவுடன் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், பார்ப்பனரல்லாதார் நன்மைக்காகவே தோழர் முத்தையா முதலியார் அவர்களால் உத்தியோகங்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி வினியோகிக்க வேண்டும் என்று செய்யப்பட்டிருந்த விதியை ஒழிக்க வேண்டுமென்றும் பாடுபட்டதோடு, சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒரு இயக்கம் இருக்கின்றதா என்று அறியாதவர் போலும் பல தடவைகளில் அலட்சியமாகப் பேசியும் நடந்தும் வந்தார். (புரட்சி, 22 – 10 -1 933.)

1934 செப்டம்பர் 24ஆம் தேதி நடந்த மாநாட்டில் பார்ப்பனர்களை நீதிக்கட்சியில் சேர்த்துக்கொள்ளலாம் என்று ஒருமனதாய் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பெரியாரின் பங்கு ஏதுமில்லை. அது குறித்து அவர் மௌனமாகவும் இருக்கவில்லை. அத்தீர்மானம் 7 -6 - 1934 அன்று பொப்பிலி கூட்டிய நிர்வாகக் குழு மற்றும் நீதி க்கட்சி முன்னணித் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் முதலில் நிறைவேற்றப்பட்டது. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட பெரியார் பார்ப்பனர்களை சேர்த்தல் என்பதைத் தான் கடந்த 8, 10 ஆண்டுகளாக எதிர்த்து வந்ததற்கான காரணங்களைக் கூறினார்.

படிப்பகம்

www.padippakam.com



என்ன என்ன காரணங்களைக் கொண்டு ஆட்சேபித்து வந்திருக்கிறேனோ, அவற்றில் ஒரு சிறிதும் இன்று மாற்றமடையவில்லை. அப்போதைய அபிப்பிராயங்களை மாற்றிக் கொண்டு இப்போது பார்ப்பனர்களிடமிருந்து ஒரு மாறுதல்களையும் நான் காணமுடியவில்லை. ஆதலால் அந்த அபிப்பிராயம் இன்னமும் எனக்கு பலமாகவே இருக்கிறது. ஆனால் ஒரு மாறுதல் மாத்திரம் ஏற்பட்டுவிட்டது என்பதை என் சொந்த ஹோதாவில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது என் தோழர்களையோ கூட்டு வேலைக்காரர்களையோ யாரையும் கட்டுப்படுத்தாது என்று சொல்லுகின்றேன். அஃதென்னவென்றால் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் முன்னணியில் இருந்து அக்கட்சிக்காக வேலை செய்யும் சௌகரியம் இப்போது எனக்கு இல்லை. கட்சிக்காக அல்லது கட்சியின் பேரால் கவலை கொண்டு இன்று முன்னணியில் இருந்து வேலை செய்யும் பிரமுகர்கள் கட்சி நன்மையை உத்தேசித்து என்று சொல்லி ஒரு காரியத்தை செய்யத் தொடங்குவார்களேயானால் நான் போய் குறுக்கிட்டு அதை ஆட்சேபித்துக் கொண்டிருக்க வேண்டாம் என்கின்ற நிலையில் நான் இருக்கிறேன். ஏனெனில் ஒவ்வொரு தடவையும் என்னாலேயே ஆட்சேபிக்கப்பட்டு அவ்வெண்ணம் நிறைவேற்றப்பட முடியாமல் போய்விட்டது என்று சொல்லப்பட்டு வந்தது. ஆனால் ஒரு அளவுக்கு அதன் பலாபலன்களுக்கு நானும் பொறுப்பாளியாகவும் அனுபவிக்கிறவனாகவும் இருந்தேன் எனக் கருதினேன். இப்போதைய எனது நிலைமை அப்பயனுக்கும் அனுபவத்திற்கும் முழுப் பொறுப்பாளியாக இருக்க முடியாததாய் இருப்பதால் பொறுப்பாளியாய் இருப்பவர்களுக்கு முட்டுக்கட்டையாய் இருக்க வேண்டாம் என்று எனக்குத் தோன்றிவிட்டது. இது தவறுதலாய் இருக்கலாம். ஆனபோதிலும் இதன் அனுபவமானது பின்னால் நமக்கு ஒரு பெரிய நன்மையையும் படிப்பினையையும் உண்டாக்கினாலும் உண்டாக்கலாம். சமூக விஷயங்களைவிட அரசியல் காரியங்களையே பெரிதாய் கருதி இந்த பார்ப்பனர்களைச் சேர்க்க வேண்டுமென்ற யோசனைகள் செய்யப்படுவதாகத் தெரிகின்றது. எப்படியானாலும் நான் அதை ஆட்சேபிக்க வரவில்லை என்று மாத்திரமே சொல்லுகிறேன். (புரட்சி, 10 - 6 - 1934)

இங்கு பெரியார் நீதிக்கட்சித் தலைவர்கள் தனது பேச்சைக் கேட்கத் தயாராக இல்லை என்பதை வெளிப்படுத்துகிறார். என்ன காரணங்கள் கூறினாலும், யார் அதை எதிர்த்தாலும் அவர்கள் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான எல்லா ஆயத்தங்களுடன் இருந்ததை 'புரட்சி' சுட்டிக் காட்டியது. பார்ப்பனர்களைக் கட்சியில் சேர்த்துக்கொள்ளலாம் என்பதில் பெரியாரும் சௌந்தரபாண்டியனாரும் 'கறாராக' நடந்துகொள்ளவில்லை என்று 'திராவிடன்'

படிப்பகம்

www.padippakam.com



ஆசிரியர் டி. வி. சுப்பிரமணியன் கூறியதற்குப் பதில் சொல்லும் முகமாக 'புரட்சி' எழுதிற்று:

> சுயமரியாதை இயக்கத் தோழர்களைத் தவிர மற்றவர்களில் 100க்கு 90 பேருக்கு பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணமே இருந்ததாகக் காணப்பட்டது. சுயமரியாதைக்காரர்கள் கட்டுப்பாடாய் ஆட்சேபிப்பதினால் அப்பிரச்சனை சுலபத்தில் ஜஸ்டிஸ் கட்சி தலைவர்கள் என்பவர்களுக்கு அனுகூலமாகவே முடிந்திருக்காது என்பது உண்மையானதானாலும், இன்றைய நிலையில் அத்தலைவர்கள் எப்படியாவது அதற்குத் தக்க வழி செய்து வெற்றி பெற்றுவிடுவார்கள். ஆதலால் அதன் லாப நஷ்டத்தை அவர்களுக்கே விட்டுப் பார்க்கலாம் என்கின்ற யோசனையில் தான் தோழர்கள் ராமசாமி, சௌந்தரபாண்டியன் ஆகியவர்கள் தாங்கள் எதிர்ப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள். (புரட்சி, 10 – 6 - 1934)

அடுத்தநாள் நடந்த கூட்டத்தில் (8 - 6 - 1934) டாக்டர் நடேசன் முன்மொழிய, முதல்நாள் அத்தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்த கி. ஆ. பெ. விசுவநாதம் வழிமொழிய அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 29–9–1934 அன்று நடந்த கட்சி மாநாட்டில் அது முறைப்படி நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் அம்மாநாட்டில் முன்மொழியப்பட்டபோது 7- 6- 1934 அன்று பொப்பிலி கூட்டிய தனிப்பட்ட கூட்டத்தில் தான் அதை ஆட்சேபிக்கப் போவதில்லை என்று கூறியது "தலைவர்கள் என்பவர்கள் அதன் பயனை அனுபவித்துப் பார்க்கட்டும் என்று கருதித்தான்" என்று கூறியதை நினைவு படுத்திப் பெரியார் பேசியதாவது:

> இப்படிச் சொன்னதால் சில தோழர்கள் நான் சம்மதம் கொடுத்துவிட்டதாகச் சொல்லுகிறார்கள். அவர்களை எனக்கு நன்றாகத் தெரியும். பார்ப்பனர்களிடம் நான் துவேஷமாய் இருந்தாலும் சிநேகமாய் இருந்தாலும் அந்தப் பயன்களை இவர்கள் தான் அடைவார்களே ஒழிய எனக்கு ஒரு காலமும் இல்லை. வேண்டுமானால் பார்ப்பனர்களால் ஏற்படும் விஷமமும் தொல்லையும்தான் எனக்குச் சொந்தமாகும்.
>
> நான் சென்ற வாரப் பத்திரிகையில் "பார்ப்பனிய ஒழிப்புக் கொண்டாட்ட நாள்" என்பதாக வருஷத்தில் ஒருநாள் கொண்டாட வேண்டும் என எழுதியிருக்கிறேன். இவை நிற்க, பொதுவாக ஒரு விஷயத்தை உங்கள் ஞாபகத்துக்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.
>
> பார்ப்பனர்களைச் சேர்க்கக் கூடாதென்று ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு விதியும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்கிற ஒரு விதியும் நமக்குள் இருந்து வருகின்றது. என்றாலும் இது எப்போதும் இருக்க வேண்டியதா? அல்லது

படிப்பகம்

www.padippakam.com



எவ்வளவு காலத்துக்கு இருக்க வேணடியது? என்று யோசித்துப் பாருங்கள். எல்லா இந்திய மக்கள் மாத்திரம் அல்லாமல் உலக மக்கள் எல்லாருமே சகோதரர்களாக தோழமையுடன் வாழ வேண்டுமென்றும் வகுப்பு வித்தியாசம் என்பது எங்கும் எந்த ரூபத்திலும் காணக்கூடாது என்றும் கூப்பாடு போடுகின்ற நாம் எப்போதும் பார்ப்பனர்களைச் சேர்க்கக் கூடாது என்று சொல்ல முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள். சர்வஜன சகோதரத்துவத்துக்கும் வகுப்புப் பிரிவு மறைவுக்கும் தான் பார்ப்பனர்களைச் சேர்க்கக் கூடாது என்றும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்றும் சொல்லுகின்றோம்.

இந்த நிலை ஏற்படும் வரையில்தான் நாம் பார்ப்பனர்களைச் சேர்க்கக்கூடாது என்றும் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்றும் சொல்லுகின்றோமே ஒழிய உலகம் உள்ள வரையில், மனித சமூகம் உள்ள வரையில் கூடாது என்றும் வேண்டும் என்றும் நாம் கருதி ஏற்படுத்திவிடவில்லை.

இப்போது உள்ள கேள்வியெல்லாம் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளவும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை எடுத்துவிடவும் தகுதி ஆனதும் அவசியமானதுமான காலம் வந்துவிட்டதா என்பதேயாகும். என்னுடைய அபிப்பிராயத்தில் இல்லை என்றே கருதுகின்றேன். சிலர் வந்து விட்டது என்கிறார்கள். சிலருக்கு இரண்டும் தெரியாமல் சொல்லிக் கொடுத்ததைக் கிளிப் பிள்ளைகள் மாதிரி ஒரே மாதிரி சொல்லிக் கொண்டிருக்கிறாகள். இதுதான் இன்றைய அபிப்பிராய பேதங்களுக்குக் காரணமே ஒழிய வேறில்லை-

"பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளக் காலம் வந்துவிட்டது" என்று இன்று சொல்லுகின்றவர்கள் தலைவர்கள் என்கின்றவர்களேயாவார்கள். தோழர்கள் சர். ஷண்முகம், பொப்பிலிராஜா சர். உஸ்மான், ராஜன் போன்றவர்களே ஆசைப் படுகின்றார்கள் என்றால் அதன் பலாபலனை அடைந்து பார்க்க அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கும் வரையில் இந்தப் பிரச்சனை விஷயத்தில் சாந்தியும் ஏற்படாது.

பெரியார் இங்கு தனக்கும் சுயமரியாதை இயக்கத் தோழர்களுக்குமுள்ள பிரச்சனை என்ன என்பதைக் கூறுகிறார்:

பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொண்ட பிறகு ஜஸ்டிஸ் கட்சி செய்யப் போகும் வேலை என்ன? அதற்கு வேலைத் திட்டம் என்ன என்பதுதான் முக்கிய பிரச்சனை. இந்தப் பிரச்சனையில்தான் நாங்கள் ஜஸ்டிஸ் கட்சியில் இருப்பதா அல்லது விலகுவதா என்கின்ற தத்துவம் வருகின்றது. (பகுத்தறிவு, 7 – 10 – 1934)

படிப்பகம்

www.padippakam.com



எனவே பெரியார் 'மௌனம்' சாதித்தாரா என்பதை வாசகர்களே முடிவு செய்து கொள்ளும்படி வேண்டுகிறேன். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதையும் உள்ளடக்கிய தனது திட்டமொன்றை நீதிக்கட்சிக்கு அனுப்பி அதை ஏற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்த வேண்டும் என்று ஓராண்டுக் காலத்திற்கு மேல் வற்புறுத்தி வந்த பெரியார், அத்திட்டத்தைக் அக்கட்சி ஏற்றுக்கொண்டால் தான் சுயமரியதை இயக்கத்தின் ஆதரவு கிடைக்கும் என்ற நிபந்தனையை விதித்து வந்த பெரியார், அக்கட்சியின் மீது தனது சுயமரியாதை இயக்கச் செல்வாக்கைச் செலுத்தி வந்த பெரியார், அக்கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்வது என்ற முடிவு மேற்கொள்ளப்பட்ட பிறகு அம்முடிவு நிபந்தனையுடன் கூடியதாகவே இருக்க வேண்டும் என்ற கருத்தையே வலியுறுத்துகிறார்.

> பார்ப்பனரல்லாதார் கட்சி என்றாலும் சரி, ஜஸ்டிஸ் கட்சி என்றாலும் சரி, தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்றாலும் சரி, எல்லாம் அரசியல் விஷயத்தில் சட்டத்திற்குக் கட்டுப்பட்டுக் கிளர்ச்சி செய்வதும், சமூக விஷயத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்பதும் ஆகியவைகளைக் கொள்கையாகக் கொண்டது என்றும், அதை ஒப்புக் கொள்ளுகிற பார்ப்பனர்களைத்தான் ஜஸ்டிஸ் கட்சி சேர்த்துக் கொள்ளுவதே ஒழிய, மற்றப்படி பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு, வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்கு விரோதமான எல்லாப் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்வதாக எப்போதும் சொல்லவே இல்லை என்று பல தடவை பரம மூடர்களுக்கும் விளங்கும்படி எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். ('எது பிற்போக்கான கட்சி?', குடிஅரசு, 15-9-1935)

இங்கும்கூட கேசவன் பெரியாரின் வாசகங்களை எப்படி மாற்றியமைத்திருக்கிறார் என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

நீதிக்கட்சியின் தலைமைப் பொறுப்பே பெரியாரிடம் வந்துவிட்ட பிறகு, பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு என்பனவற்றில் உறுதி குலையாதவர் அக்கட்சித் தலைவராகி விட்ட பிறகு பார்ப்பனரைக் கட்சியில் சேர்த்துக் கொள்வதைப் பற்றி பெரியார் அச்சம் கொள்வதற்கான காரணம் ஏதும் இல்லாமல் போய்விட்டது. மேலும், 1939 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியவர்கள் மீது கடுமையான ஒடுக்குமுறை, தொழிலாளர் மீது ஒடுக்குமுறை, விற்பனை வரிச் சட்டம், தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை குறைப்பு முதலிய மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொண்ட இராஜகோபாலாச்சாரியாரின் ஆட்சியை அகற்றுவதற்காக என்ற முறையில் பெரியார் முதன்மையான எதிரிக்கு எதிராக சாத்தியமான அனைத்துச் சக்திகளையும் அனைத்துச் சமூகப் பிரிவுகளையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு அரசியல் கட்சித் தலைவராகச் செயல்பட்டார் என்பதை

படிப்பகம்

www.padippakam.com



நாம் கருத்தில் கொள்ளவேண்டும். அரசியலில், வேலைவாய்ப்பில், கல்வியில் பார்ப்பனர்களுக்குரிய விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை பெரியார் ஒரு காலத்திலும் மறுத்ததில்லை.

எனவே திருவல்லிக்கேணியில் 20 – 1 – 1939 அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் — அன்று வேலை நிறுத்தம் செய்து வந்த பி அண்ட் சி (சூளை) தொழிலாளர்களுக்குப் பண முடிப்பு வழங்கும் கூட்டத்தில் பெரியார் கீழ்க் கண்டவாறு பேசினார்:

> பார்ப்பன நண்பர்களுக்கு ஓர் விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். உங்களைக் குறை கூறவில்லை. உங்கள் உரிமைகளைக் குறைக்கப்போவதில்லை. ஆனால் நியாயமாக நடந்த கட்சியைத் தூற்றினீர்கள். இன்று பார்ப்பனர்கள் ஆளுகிறார்களென்று கருதி இவர்களுடைய கொடுமைகளைக் கண்டிக்காமலிருப்பதை நோக்க சந்தேகம் ஏற்படுகின்றது. எனக்கு ஓட்டு இருக்குமேயானால், இராஜகோபாலாச்சாரியும் சங்கராச்சாரியும் தேர்தலுக்கு நிற்பார்களேயானால் நான் எனது ஓட்டை சங்கராச்சாரியாருக்குத்தான் கொடுப்பேன். ஏன்? அவர் உள்ளபடியே பேசுகின்றவர். ஆனால் டாக்டர் ராஜன், ஆச்சாரியார் போன்றோர் அவ்வாறில்லை என்பதனால்தான். ஆகவே எனது பார்ப்பன நண்பர்களுக்குச் சொல்லிவைக்கின்றேன், இந்த ஆட்சியை ஒழிக்க ஒத்துழைக்க வேண்டுமென்று. நாங்கள் பார்ப்பனர் துவேஷிகள் என்று கருதினால் நீங்கள் உண்மையில் ஏமாந்து விடுவீர்கள். உங்களுக்காக ஜஸ்டிஸ் கட்சியில் உங்களுக்குள்ள விகிதாச்சாரப்படி பாகத்தைப் பிரித்துக் கொடுக்க சித்தமாயிருக்கிறோம். தாராளமாக வந்து சேருங்கள். இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடுவீர்களேயானால் ஏமாற்றம் அடைவீர்கள். (விடுதலை, 23-8-1939)

எனவே பெரியாரின் கூற்றுகளைக் குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலுடன் தொடர்புபடுத்தித்தான் சரியாகப்புரிந்துகொள்ளமுடியும்.

தனது பார்ப்பன எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு பற்றிப் பெரியார் 3–9–1939இல் சேலத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் தெளிவுபடுத்தினார்:

> ... எந்தப் பார்ப்பனரிடமும் எனக்குத் தனிப்பட்ட முறையில் விரோதமோ பகைமையோ கிடையாது என்றும் ஒரு பார்ப்பனரிடமும் எனக்குப் பேச்சு வார்த்தை இல்லை என்று சொல்வது தக்க அபிப்பிராய பேதம்கூட இல்லை என்றும் சொல்லுவேன். சாதாரண வாழ்க்கைத் துறையில் ஒருவருக்கொருவர் மனிதத் தன்மையுடன்தான் எல்லாப் பார்ப்பனரிடமும் பழகி வருகிறேன் என்பதுடன் சகல பார்ப்பனரும் என்னிடம் அப்படித்தான் பழகி வருகின்றார்கள் என்றே சொல்லுவேன். ஏதோ சில பார்ப்பனர்களும் பார்ப்பன வாலிபர்களும் தங்

படிப்பகம்

www.padippakam.com



கள் நன்மையும் ஆதிக்கமும் பாதிக்கப்பட்டுவிடுமே என பயந்து சில்லறை விஷமங்கள் செய்து வருகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ...“பார்ப்பனப் பூண்டை ஒழிக்கவே நான் உயிருடன் இருக்கிறேன்” என்று எங்கோ சொன்னதாகக் கேள்வியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது அந்தக் காரியம் என்னால் முடியாது என்றும், யாராலும் முடியாது என்றும், முடியுமானால் அது அல்ல என்னுடைய அபிப்பிராயம் என்றும் பல தடவை சொல்லியும் எழுதியும் வந்திருக்கிறேன். ஆனால் நான் கூறி வந்ததும் இப்பொழுது உண்மையாய்க் கூறுவதும் பார்ப்பனியத்தை அடியோடு ஒழிப்பது என்பதுதான் எனது முக்கியமானதும் முதன்மையானதுமான காரியம் என்று கூறுகிறேன்.

பார்ப்பனீயத்தை மட்டுமல்லாமல் காந்தியத்தையும் ஒழித்தாக வேண்டுமென்று பல தடவை கூறி இருக்கிறேன். சுயநலப் பார்ப்பனர்களும் பதவி மோகம் கொண்ட பார்ப்பனர்களும் இதைத் தங்கள் சமூகத்தாரிடம் திரித்துக் கூறி பார்ப்பனர்கள் நம்மிடம் துவேஷம் உண்டாகும்படி செய்துகொள்ளுகிறார்கள். எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.

சுயநலமும் பதவி மோகமும் பணத்தாசையும் கொண்ட சில பார்ப்பனர்கள் பதவிக்கு வந்து தங்கள் சமூகத்தாருக்கு ஏதோ உத்தியோகம் கொடுக்கப் போவதாகச் சொல்லிக்கொண்டு பல பார்ப்பனரல்லாதாருக்குக் கேடு விளைவித்துக்கொண்டும் தங்கள் சுயநலத்துக்கு ஏராளமான பணம் பல நாணயக்குறைவான வழிகளில் சம்பாதித்துக் கொண்டும் வருவதை நடுநிலைமையுள்ள பார்ப்பனர்கள ஆதரித்து வருவதாலேயே இன்று நாட்டில் பார்ப்பனீயத்தின்மீது உள்ள வெறுப்பு பார்ப்பனர்கள்மீது திரும்புவதை அவர்கள் அறிவதில்லை.

எந்தக் காரியம் எப்படி இருந்தாலும் அரசியலில், பொதுவாழ்க்கையில் கண்டிப்பாக மனித தர்மம் தவிர வேறு எந்த கால தர்மமோ சமய தர்மமோ புகுத்தப்படக் கூடாது என்பதுதான் எனது ஆசையே ஒழிய உலகத்தில் உள்ள மக்கள் எல்லாம் என் இஷ்டம்போல்தான் நடக்க வேண்டும் என்பதல்ல. காலப் போக்கையும் நிலைமை இயற்கையிலேயே கைகூடி வருவதையும் பொறுத்தே நான் பேசுகிறேன் (குடிஅரசு. 17-9-1939)

பெரியாரின் மற்ற கொள்கைகளைப் போலவே அவரது பார்ப்பன எதிர்ப்பும் போலியானது என்பதை 'நிரூபிக்க' முயலும் கேசவன் எழுதுவதாவது:

“பெரியாரின் நிலைப்பாடு அப்பட்டமான பாராளுமன்றவாத சந்தர்ப்ப நிலைப்பாடு ஆகும். பெரியாரோ அவரது இயக்கமோ நேரடிப் பதவிகளை அனுபவிக்காமல் இருக்கலாம். ஆனால் பெரியா

படிப்பகம்

www.padippakam.com



ரின் சிந்தனைகள், பார்ப்பனர்களைச் சட்டப் பிரிவில் இணைத்துக் கொண்டு போதிய பலத்தையும் தைரியத்தையும் பெறுவதற்கு வழி வகுத்துக் கொடுத்திருக்கின்றன. தான் குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பிந்தைய தேர்தல்களில் பெரியாரே மீறியிருக்கிறார்.

சட்டமன்ற உறுப்பினர்களாகப் பார்ப்பனர்களில் மிராசுதாரோ பெருவணிகரோ முதலாளியோ அல்லது இத்தகைய நோக்குடைய அறிவாளியோதாம் வர இயலும். அவர்களுடன் இணைந்து செயல்படுவதில் பெரியாருக்கு எவ்விதத் தடையும் இல்லை. இங்குதான் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லப்படும் பெரிய அடைப்புக்குறிக்குள் காணப்படும் வர்க்கங்களைப் பிரித்தெடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. (பாவம், கேசவனுக்குக் கை வலித்திருக்கும்!– எஸ். வி.ஆர்.) பார்ப்பனரல்லாத மிராசுதாரர்கள், பெரு வணிகர்கள், முதலாளிகள் ஆகியோர்களின் பொருளாதார நலன்களோடு வர்க்க அளவில் வேறுபட்டு நிற்கவில்லை. எனவே இவர்கள் நெருக்கடி ஏற்படுகின்றபொழுது இணைந்துகெள்வதில் வியப்பு ஏதும் இல்லை. சாதி அளவிலும் இன அளவிலும் சமய அளவிலும் வேறுபட்டு இருக்கின்ற பெருந்தனக்காரர்கள் தேவைப்படுகின்றபொழுது வர்க்க அளவில் ஒன்றுபட்டுக்கொள்வதை பாராளுமன்ற வாதத்தின் திராவிட இயக்க சித்தாந்தியான அறிஞர் க.நா. அண்ணாதுரை பின்னாளில் ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். (கோ கே 1, 94–95)

கேசவன் செய்வதெல்லாம்

1. சமூக, பண்பாட்டுத் தளங்களில் அன்று பெரியார் செய்து வந்த புரட்சிகரமான செயல்பாடுகளை ஒட்டுமொத்தமாக மறுப்பதும், 2. அத்தகைய புரட்சிகரமான செயல்பாடுகளுக்காகவும் பிற்படுத்தப்பட்டோர், பெண்கள் ஆகியோரின் நலன்களுக்காகவும் உறுதுணை புரியக்கூடிய அரசாங்க நடவடிக்கைகளை வற்புறுத்திப் பெறுவதற்காக அவர் நீதிக்கட்சி சுப்பராயன் அமைச்சரவைகளுக்குத் தந்து வந்த ஆதரவை வர்க்க அடிப்படையிலான ஆதரவாகக் காட்டுவதும் ஆகும்.

கேசவன் ஒரு நேர்மையான மார்க்சியவாதியாக இருக்கும் பட்சத்தில் பெரியாரும் அவரது இயக்கமும் நீதிக்கட்சி அரசாங்கத்தாலும் காக்கப்பட்ட எந்தெந்த வர்க்க நலன்களுக்கு உறுதுணையாக இருந்தார்கள் என்பதை ஆதாரபூர்வமாக விளக்கியிருக்க வேண்டுமேயொழிய மிராசுதார்கள், பெருவணிகர்கள், முதலாளிகள், பார்ப்பன மிராசுதார்கள்... இத்யாதி இத்யாதி என்ற கேட்பதற்கே பயப்படும்படியான பயங்கரமான வார்த்தைகளை அள்ளி வீசியிருக்கக் கூடாது. (சுப்பராயன் அமைச்சரவையைப் பெரியார் ஆதரித்ததற்கான காரணங்களை நான் சென்ற 'கவிதாசரண்' இதழ் கட்டுரையில் கூறியிருக்கிறேன்.) இந்திய, தமிழ் சமுதாயத்தை, சாதிய அடிப்படையில் பெரியார் பார்த்தது ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



சாதியினரின் நலன்களின் பொருட்டுத்தான். (அவையும்கூட பெரும்பாலான சமயங்களில் சுரண்டப்படும் வர்க்கங்கள், சமூக அடுக்குகள், பெண்கள் ஆகியோரின் நலன்களாகத்தான் இருந்திருக்கின்றன.) வர்க்க அடிப்படையில் அல்ல. இதன் பொருள் அவர் அரசாங்கத்திலிருந்தவர்களின் வர்க்க மூலங்களைப் பார்க்காதவர் என்பதல்ல. 1929 ஆம் ஆண்டுத் தேர்தலில் அவர் நீதிக்கட்சியையும் சரி, ப. சுப்பராயனின் கட்சியையும் சரி திட்டவட்டமாக ஆதரிக்கவில்லை. இரு கட்சிகளில் 'எது மேல், எது கீழ்' என்று சொல்ல முடியாவிட்டாலும் சுயமரியாதைக் கொள்கைகளில் நாட்டமுடையவர்கள் இரு கட்சிகளிலும் இருப்பதால், அக்கட்சிகளில் எவ்வளவு நாணயக் குறைவு இருந்தாலும் சுயமரியாதை இயக்கத்திற்கு சில அனுகூலங்கள் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று பெரியார் எழுதினார். யார் ஆட்சிக்கு வந்தாலும் "நாம் எதிர்பார்ப்பதெல்லாம்—

1. உத்தியோகங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் படிப்பு கற்பிக்கப்படுவதில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டும் என்பது.
2. ஜாதி வித்தியாசமும் தீண்டாமையும் அடியோடு ஒழிய வேண்டுமென்பது
3. பெண்களுக்கு ஆண்களைப் போலவே எல்லாவித சுதந்திரமும் கல்யாண ரத்தும் வேண்டுமென்பது
4. கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் சிலவு செய்யப்படும் பணமும் நேரமும் முயற்சியும் மக்கள் நலத்திற்கு அதாவது கல்விக்கும் அறிவு வளர்ச்சிக்கும் திருப்பப்பட்டு அந்தப்படி உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்பது
5. பள்ளிக்கூடங்களில் மத சம்பந்தமான விஷயங்களைப் படிப்பிக்கவோ அவற்றின் மூலம் பொதுக்கல்வி கற்பிக்கவோ மத சம்பந்தமான உணர்ச்சிகள் பள்ளிக்கூடங்களில் காணப்படவோ கூடாது என்பதும் பொதுப்பணத்தில் எல்லோருக்கும் ஒரு அளவிற்காவது சமமான கல்வி வேண்டும் என்பது.

மற்றும் பல விஷயங்கள் இருந்தாலும் இவைகளையே முக்கியமாய் இப்போதைய சட்டசபை மூலமும் அதனால் ஏற்பட்டுள்ள மந்திரிகள் மூலமும் எதிர்பார்க்கிறோம்." (குடிஅரசு தலையங்கம், 31–8–1930 )

'தேர்தல் முடிவின் பலன்' என்ற மற்றொரு தலையங்கத்தில் பெரியார் எழுதினார்:

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 30, 35 பொது ஸ்தானங்களுக்கு வெற்றி பெற்றிருக்கும் கனவான்கள் யாரென்றால் ஜமீன்தாரர்கள், லேவாதேவிக்காரர்கள், பார்ப்பனர்கள், வக்

படிப்பகம்

www.padippakam.com



கீல்கள், 500, 1000, 10000 ஏக்கர் நிலங்கள் வைத்துக்கொண் டிருக்கும் பெரிய மிராசுதாரர்கள் ஆகிய வியாபாரிகள் இவர் களைத் தவிர வேறு யாருமே இல்லை. இந்தக் கூட்டத்தார் ஏழை மக்களின் பிரதிநிதிகள் என்றால் இவர்களைவிட வெள் ளைக்காரர்களே அரசாட்சியில் இருப்பது என்ன கெடுதி என் பது நமக்கு விளங்கவில்லை. ஏனெனில் மேற்சொன்ன அத் தனை பேரும் ஏழைகளை, பாமரமக்களைத் தாழ்த்திக் கொடு மைப்படுத்தி, இம்சித்து, வயிற்றுக்கில்லாமல் அடித்து துரத்தி, அந்த நிலை பெற்றவர்கள் ஆவார்கள் என்பதோடு, இனியும் அதே நிலையில் மேலும் முற்போக்கடையக் கருதிக் கொண் டிருப்பவர்களும் ஆவார்கள். ஆதலால் தேர்தல் முடிவைப் பற்றி நாம் சிறிதும் சந்தோஷப் படுவதிற்கில்லை. ஆனாலும் இவர்களுள் ஏதாவது தனிப்பட்ட நபர்களைப் பிடித்துக் கெஞ்சி கூத்தாடி ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும்கொடுமைப் படுத்தப்பட்டவர்களுக்கும் ஏதாதது நன்மை செய்ய முடியுமா என்பதுதான் நாம் இனிச் செய்ய வேண்டிய வேலையாகும். (குடிஅரசு, 21-9-1930)

இதுதான் பெரியாரின் / சுயமரியாதை இயக்கத்தினரின் பிழைப்பு வாதமா?

பெரியார் தலித்துகளை திராவிடர்கள், தமிழர்கள் என்ற வகை யினத்தில் சேர்க்கவேயில்லை என்று கோ. கே. பச்சைப் பொய் கூறியுள்ளார் என்ற என் குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளார். 'திராவிட இயக்கமும் மொழிக் கொள்கையும்' என்ற நூலில் திரா விடர், தமிழர் பற்றிப் பெரியார் கூறியவற்றுக்குத் தனது வியாக்கி யானங்களைக் கூறிக்கொண்டுவரும் கோ.கே. (ப. 7-10) தி.க.வைப் பற்றி ஒரு கருத்தைக் கூறுகிறார். தி. க., பெரியாரால் உருவாக் கப்பட்டுக் கடைசிநாள் வரை அவரால் தலைமை தாங்கப்பட்டது என்பதால், தி. க. வைப் பற்றிய கோ.கே.யின் கருத்து பெரியாருக் கும் பொருந்துவதாகும்: (இங்கு நான் 'தி. க.' என்றுதான் குறிப் பிட்டிருக்கிறேனேயன்றி 'பெரியார்' என்றல்ல என்று கூறி கோ. கே. தப்பித்துக் கொள்ளலாம்!):

> தி. க., பார்ப்பனரல்லாத தமிழரை முன்னிலைப் படுத்துகிறது பார்ப்பனரல்லாதார் என்பதில் பார்ப்பனரல்லாத அனைத்துப் பகுதி மக்களும் இடம் பெற்றிருக்கின்றனரா என்பது விவாதத் துக்கு உரிய விஷயமாகும். ஆதி திராவிடர் இதில் இடம் பெற் றுள்ளனரா என்பது குறித்த ஐயம் நமக்கு எழுதல் இயல்பு. எனவே தமிழ்த் தேசிய இனத்தினருள் பார்ப்பனரையும் தாழ்த்தப் பட்டோரையும் விடுத்த ஏனைய தமிழர்களே இவர்களால் திராவிடர் என வகைப்படுத்தப்படுகின்றனர். இது குறித்த வரலாற்றுப் பின்னணியை ஆய்வதற்கு இது ஏற்ற இடமன்று. (ப. 10)- (அழுத்தம் அவருடையது.)

படிப்பகம்

www.padippakam.com



" 'பார்ப்பனரல்லாதார்' என்ற வகை இனத்தில் பெரியார் தலித்துகளை சில கட்டங்களில் சேர்த்துள்ளார், சில கட்டங்களில் சேர்க்கவில்லை என்பதை அவரது பேச்சுகளைக் காட்டி எழுதி உள்ளேன்'' என கோ. கே. கூறுகிறார். இவர் தனக்கு 'மாவோயிஸ்ட்' பட்டம் சூட்டப்பட்டதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறவர். மாவோ, 'மக்கள்' என்ற வகையினத்தை நெகிழ்ச்சித் தன்மையுடனேயே விளக்கினார். விவசாய சங்கத்தில் பேசும்போது விவசாயிகள் மட்டுமே 'மக்கள்' என்று கூறினார்; தொழிலாளர்களும் விவசாயிகளும் சேர்ந்து 'மக்கள்' ஆவதும் உண்டு; ஜப்பானிய எதிர்ப்புப் போராட்டத்தில் கோமிண்டாங், தேசப்பக்தியுடைய நிலப்பிரபுக்கள் (enlightened gentry) உட்பட பலரும் மக்கள்தான். அது போலவே பார்ப்பனராதிக்கத்தை வீழ்த்துவதற்கான பரந்த அணியில் பார்ப்பனரல்லாத இந்துக்கள், தாழ்த்தப்பட்ட சாதியினர் முதலியோர் 'பார்ப்பனரல்லாதாராகப் பெரியாரால் குறிக்கப்படுவதும், பார்ப்பனரல்லாத இந்துக்கள் (சூத்திரர்கள்) மட்டுமே அடங்கிய கூட்டத்தை மட்டும் விளிக்க வேண்டிய கட்டங்களில் அவர்களை மட்டுமே குறிப்பிடக் கூடிய சொல்லாக 'பார்ப்பனரல்லதார்' என்பதைப் பயன்படுத்துவதும்தான் அவரது வழக்கம். 'பார்ப்பனரல்லாதார்' என்ற பரந்த அணிக்குள் சூத்திரர்கள், தலித்துகள் ஆகிய இருபிரிவினரையும் அவர் கொண்டுவந்த போதிலும், தலித்துகள் அனுபவித்துவரும் கூடுதலான சமூக, பொருளாதார, அரசியல்' பண்பாட்டுக் கொடுமைகளை அவர் எப்போதும் உணர்ந்திருந்தார். சூத்திரர்களின் விடுதலை என்பது தலித்துகளின் விடுதலையிலிருந்து பிரிக்க முடியாதது என்றே அவர் கருதினார். தனது இறுதிநாட்களில் 'சூத்திரர்' என்ற சொல்லை பார்ப்பனரல்லாத சாதியினர், தலித்துகள் ஆகிய இரு பிரிவினரையும் குறிக்கக் கூடியதாகப் பயன் படுத்தினார். இருவரும் சேர்ந்த ஒரு சாதியற்ற சமூகத்தை அவர் கற்பிதம் செய்தபோது அதைக் குறிக்கவே 'திராவிடர்' என்ற சொல்லைக் கையாண்டார். அவரது காலத்தில் நிலவிய மரபினவாத வரலாற்றெழுதுநெறி கருத்துகளை அகற்றி விட்டுத்தான் இந்த உண்மையை நாம் புரிந்து கொள்ள முடியும். அப்போதும்கூட சமுதாயத்தில் நிலவிய முரண்பாடுகளை அவர் புறந்தள்ளவில்லை. திராவிடரில் மிகவும் ஒடுக்கப்பட்டவராக 'ஆதி' திராவிடர் இருப்பதை அவர் ஒருநாளும் மறக்கவில்லை. இந்தியாவிலேயே வேறு எங்குமில்லாத அளவிற்கு சூத்திரர்களும் தலித்துகளுமடங்கிய ஒரு வரலாற்றணியாக சுயமரியாதை இயக்கத்தையும் திராவிடர் கழகத்தையும் பல தசாப்தங்கள் நடத்தி வந்திருக்கிறார். அந்த வரலாற்றணி பிளவுண்டதற்கு நிச்சயமாக பெரியார் காரணமல்ல. இது குறித்த கருத்துகளையும் வரலாற்று விவரங்களையும் மற்றொரு சந்தர்ப்பத்தில் விளக்கவுள்ளேன். எனினும் பெரியார் தன்னை ஒருபோதும் தாழ்த்தப்பட்டோரின் தலைவராகக் கூறிக் கொண்டதில்லை — பல்லாயிரக் கணக்கான தலித்துகள் அவரைத் தமது தலைவராகக் கருதிப் போற்றிக் கொண்டிருந்த

படிப்பகம்

www.padippakam.com



காலத்திலும்கூட. தலித்துகள் தமது சுய அடையாளத்தைக் கைவிடும்படி அவர் கோரியதில்லை. 'சுய அடையாளம்' என்று நாம் கூறுகிறபோது, இன்று சில 'அம்பேத்கரிஸ்ட் சிந்தனையாளர்கள்' இருக்கிறார்களே, அவர்கள் கூறும் அர்த்தத்தில் அல்ல. அதாவது திராவிடநாடு கிடைத்தால் ஆதி திராவிடர்களுக்கு இழப்பு ஏற்பட்டு விடும். அதாவது 'ஆதி' என்பதை இழந்து அவர்களும் சூத்திரர்களும் 'திராவிடர்' என்ற சாதியற்ற ஒரே சமூகமாக மாறிவிடுவார்கள் என்று பெரியார் கூறினாரே, அதை எடுத்துக்கொண்டு "பார்த்தீர்களா, பார்த்தீர்களா, நம் சமூகத்தின், குலத்தின் அடையாளத்தையே அகற்றிவிடச் சொன்ன அந்த ஈரோட்டுத் தற்குறியா நம் தலைவர்" என்று நாக்கில் நரம்பில்லாமல் பேசி, குலப் பெருமை, காத்து, சாதியடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்வதே தலித்துகளின் சுய அடையாளம் என்று சிலர் கூறிவருகிறார்களே, அந்த அர்த்தத்தில் அல்ல. தங்களுக்கு மட்டுமே உரிய ஒடுக்குமுறைகளின் பிரத்யேகத் தன்மையால், பிறரின் தயவின்றி தாங்களாகவே தங்கள் அடிமைத் தனத்தை முறியடிக்க வேண்டுமென்கின்ற உணர்வுத் தன்மையால் வடிவமைக்கப்படும் சுய அடையாளத்தைத்தான் பெரியார் அங்கீகரித்தார். தலித்துகளின் எழுச்சியிலும் விடுதலையிலும்தான் சூத்திரர்களின் கடைத்தேற்றம் இருக்கிறது, அவை மூலம் தான் அவர்களுக்கு (சூத்திரர்களுக்கு) பலன்கள் விளையும் என்ற பொருளில்தான் பெரியார் "ஆதி திராவிடர் நன்மை கருதி பேசப்படும் பேச்சுகளும் செய்யப்படும் முயற்சிகளும் ஆதி திராவிடரல்லாத மக்களில் பார்ப்பனரல்லாத எல்லாருடைய நன்மைக்கும் என்பதாக உணருங்கள்" (குடிஅரசு, 11-10-1931) என்று ஆதி திராவிடர்களிடம்தான் பெரியார் பேசினார்; கோ. கேசவன் மேற்சொன்ன நூலின் 89-90 ஆம் பக்கங்களில் கொச்சைத்தனமாக விளக்குவது போலல்ல. சூத்திரர்களின் நன்மைக்காக 'ஆதி திராவிடரை' பயன்படுத்திக்கொள்ள விரும்பினார் என்று விளக்குவது போலல்ல.

பெரியாரின் இயக்கத்தின் சமூக அடித்தளத்தின் பெரும் பகுதியாக தலித்துகள் இருந்ததை இருட்டடிப்புச் செய்யும் வேலையைத்தான் கோ. கேசவன் செய்துள்ளார். "சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமையும்" என்ற நூலில் கூறுகிறார்:

> சுயமரியாதை இயக்கம் அதன் தொடக்க நாள்களில் திருச்சி, தஞ்சை, சென்னை, மதுரை, இராமநாதபுரம், செட்டிநாடு வேலூர், கோவை ஆகிய நகரங்களிலிலிருந்து தனது தொண்டர் பலத்தைப் பெற்றது. வேளாளர், கவுண்டர், சேர்வை, நாடார், செட்டியார், வன்னியர், கள்ளர், இசை வேளாளர், செங்குந்தர் ஆகிய சாதிகளின் படித்த இளைஞர்களே இதன் தொண்டர் பலமாக அமைந்தனர். (ப. 80)

இக்கூற்றுக்கு என்ன ஆதாரமோ தெரியவில்லை. சுயமரி

படிப்பகம்

www.padippakam.com



யாதை இயக்கத்தின் தொண்டர்கள் பட்டியலைத் தந்த பிறகு எழுதுகிறார்:

> இவர்கள் அனைவரும் மேற்குறித்த பார்ப்பனரல்லாத சாதிகளைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்குள்ளும் நிலப்பிரபுக்களும் வணிகர்களும் உண்டு: இசை வேளாளர் முதல் நாட்டுக்கோட்டைச் செட்டியார் வரை பார்ப்பனரல்லாத சாதிகளின் படித்த இளைஞர்கள் இருந்தனர். இங்கு நாம் குறிப்பிடும் பார்ப்பனரல்லாதோர் என்ற வகைப்பாட்டில் தமிரல்லாத ரெட்டியார், கம்மா, பலிஜா நாயுடு ஆகிய சாதிகளும் அடங்கும். (ப. 80 — அழுத்தம் என்னுடையது, எஸ். வி. ஆர்.)

கடைசி வரிதான் 'குணா' என்கின்ற சாமுவேல் குணசீலன், நகைமுகன் சேர்வை போன்ற இரத்தக் கலப்பில்லாத பச்சைத் தமிழர்களின் முன்னோடி கோ. கேசவன்தான் என்பதை நிறுவி விடுகிறது. அதனால்தான் அவர் பெரியார் (கன்னட மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர் என்பதைக்கூட மறுத்து, 'தெலுங்கு பேசும்' பலிஜா நாயுடு சாதியைச் சேர்ந்தவர், அவரை காங்கிரசில் சேர்த்த டாக்டர் பி. வரதராஜுலுவும் பலிஜா நாயுடு சாதியைச் சேர்ந்தவர் என்ற தகவல்களைத் தன் நூலின் முன் பக்கங்களில் தெரிவித்து விடுகிறார்! பலிஜா நாயுடுக்கள் தமிழரல்லாதவர்கள் என்ற உண்மை கோ. கேசவனுக்கு இரண்டு பக்கங்களுக்குப் பிறகு மறந்து போய்விடுகிறது. அதனால்தான் 'தமிழரல்லாத' பலிஜா நாயுடுவான பெரியாரைப் பற்றி இவ்வாறு எழுதுகிறார்: "நீதிக் கட்சிக்குள் தமிழ்த் தேசிய இனத்துக்கான உரிமைக் குரல் எழுப்பத் தொடங்கிய காலத்தில் பெரியார் நீதிக் கட்சியை ஆதரிக்கத் தொடங்கினார்." (ப. 83). ஐயகோ, ரத்தக் கலப்பில்லாத தனித் தமிழர்களை இப்படிக் கைவிடலாமா?

தலித் ஆராய்ச்சி நூலாசிரியர் டி. பி. கமலநாதன் கூறுவதைக் காண்போம்:

> 1926 ஆம் ஆண்டு பெரியார் தனது சுயமரியாதை இயக்கத்தை நிறுவினார். பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனியத்துக்கும் எதிரான இயக்கத்தைத் தொடங்கினார். தங்களது எதிரிக்கு எதிரான பிரச்சாரமாக பெரியாரின் பிரச்சாரம் இருந்ததால் தலித் தலைவர்கள் பலர் அவ்வியக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டனர். அச்சமயத்தில் கடவுள் போதை ஏறிய சாதி இந்துக்கள் (OBCs) பெரியாருடன் சேர பயப்பட்டனர். ஆனால் தலித்துகள் பெரியாரை வலுவாகவும் செயலூக்கத்துடனும் ஆதரித்தனர். தலித்துகள் பெரியார் பக்கம் நின்று வைதீக இந்துக்களிடமிருந்து வந்த தாக்குதல்களிலிருந்து இயக்கத்தைக் காப்பாற்றினர். (TPK, ப. 32)

பெரியார் இயக்கம் பறையர் இயக்கம் என்றழைக்கப்பட்டு வந்

படிப்பகம்

www.padippakam.com



தையும் அவர் குறிப்பிடுகிறார். (ப. 86) சுயமரியாதை இயக்கத்தின் முன்னோடிப் பத்திரிகைகளிலொன்று, அவ்வியக்கத்தின் தூண்களிலொன்றாக இருந்த கோலார் தலித் பௌத்த அறிஞர் ஜி. அப்பாத்துரையார் நடத்தி வந்த 'தமிழன்' ஆகும். அப்பாதுரையாரின் மகள் அன்னபூரணி அம்மாள் கடைசிநாட்கள்வரை சுயமரியாதை இயக்கத்தில் இருந்தவர். என். சிவராஜ், வி. பி. எஸ். மணியர், வி. எம். பொன்னையா, மதுரையார், (கர்க்கி) போன்ற தலித் சிந்தனையாளர்களின் பங்களிப்பு கணிசமானது. அம்பேத்கர் மஹாட் சத்யாக்கிரகம் நடத்துவதற்கும் சில வாரங்களுக்கு முன்பே தமிழ்நாட்டில் மனுநூல், சுயமரியாதை இயக்கத்தையும் நீதிக்கட்சியையும் சேர்ந்தவர்களால் தாழ்த்தப்பட்டோர் கணிசமாக வாழும் வடாற்காடு மாவட்டத்தில்தான் முதன் முதலாக எரிக்கப்பட்டது. (குடிஅரசு, 4-12-1927)

சுயமரியாதை இயக்கத்தின் தலித் பார்வை (Dalit Vision) பற்றி, தலித் சமூக அடித்தளம் பற்றி ம. சிங்காரவேலர் குறிப்பிடுவதாவது:

> இந்தியாவில் நரகத்தில் ஆழ்த்தி வரும் ஜாதிக் கட்டுப்பாடுகளையும் ஜாதிக் கற்பனைகளையும் சுயமரியாதை இயக்கம் கண்டித்து வருவது போல் எந்த இதர இயக்கமும் இன்றைக்கும் செய்யவில்லை என்பதே நமது துணிவு. உண்மையாகவே சுயமரியாதை இயக்கம் இந்த ஜாதிப் பிரச்சனையை பொதுமக்களின் இயக்கமாக்கியதோடு (Mass Movement) நடைமுறையில் நிவர்த்தி செய்யக்கூடிய விஷயமாக ஆக்கிவிட்டது.
>
> இதுவன்றியும் இந்த இயக்கம் தாழ்த்தப்பட்டோருக்கு புத்துயிர் அளிக்க வந்தது என்ற எண்ணம் ஏற்பட்டது. காந்தியார் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பதை வெறுஞ்சொல்லோடு நிறுத்திக் கொண்டார். ஆனால் சுயமரியாதை இயக்கம் இதனைக் காரியாம்சத்தில் ( Practical Politics ) கொண்டு வர முக்கியக் கருவியாகியுள்ளது. இன்றைக்கு சுயமரியாதை இயக்கத்தின் நிழலில் பல்லாயிரம் தாழ்த்தப்பட்டோர் தங்கி தங்கள் கிளர்ச்சியை நடத்தி வருவதே இந்த இயக்கத்தின் உபயோகத்திற்குப் போதுமான அத்தாட்சியாகும். இந்தத் தீண்டாமை என்ற பிரச்சனையை நேர்முகமாக நின்று சுயமரியாதை இயக்கம் தாக்கிவருவது பகுத்தறிவுடையோருக்கெல்லாம் மனமகிழ்ச்சி உண்டாக்குகின்றது.
>
> இந்து சபையார் பஞ்சமர்களை பொதுப் பிரதிநிதித்துவத்தில் வீழ்த்தி 5000 வருஷமாக வீழ்த்திவந்த நிலையில் இருக்கச் செய்கிறார்கள்.
>
> ஆனால் சுயமரியாதை இயக்கத்தால் தாழ்த்தப்பட்டோரை தனித் தொகுதியால் அவர்களே கரை சேர்க்கப் பார்க்கிறார்கள். (குடிஅரசு, 1–5–1932)

படிப்பகம்

www.padippakam.com



இவை எல்லாம் பழைய 'குடிஅரசு' இதழ்கள், ஆவணங்கள் அரசாணைகள், ஆராய்ச்சி நூல்கள் ஆகியவற்றை அலசிப் பார்த்தும்– 'காங்கிரஸ் நிதியைக் கையாடியதாகப் பெரியார் மீது ஒரு குற்றச்சாட்டு இருந்தது. கீழிடத்திலிருந்து மேலிடத்துக்குப் புகார்கள் சென்றதால் பெரியார் நகராட்சிப் பதவியிலிருந்து விலகினார்' என்பன போன்ற மிக அரிதான செய்திகளைத் தொகுத்துக் கொடுக்கும் முனைவரின் கண்களில் படவில்லை போலும். தன் பார்வைக்குப் படுவதைக்கூட ஒன்று சிறுமைப் படுத்துவதோ அல்லது பார்க்காதவர் போல் இருப்பதோதான் அவரது வேலை. இல்லாவிட்டால் தமிழகத்தில் தாழ்த்தப்பட்டோரின் ஆலய நுழைவுக்காக சுயமரியாதை இயக்கத்தினரும் நீதிக்கட்சியினரும் நடத்திய பல போராட்டங்களில் ஒன்றைக்கூட அவர் எங்கும் குறிப்பிடாதது ஏன்? 1920 களில் நடந்த அந்தப் போராட்டத்தால் சகல துன்பங்களுக்கும் ஆளாகி அங்கீகாரம் ஏதுமின்றி மறக்கப்பட்டு விட்டவர்களைப்பற்றி ஏன் பேச்சே இல்லை? "சூத்திரர்" – பஞ்சமர் முரண்பாட்டைப் பற்றிப் பேசினாலே அதைப் பார்ப்பனியம் என்று வெட்டிச் சாய்க்க முயற்சி செய்பவன் நானல்ல. தலித்துகள் தங்கள் சுயமரியாதையை இழந்து சூத்திரர்களின் நிபந்தனைக்குட்பட்டு ஒரு ஒற்றுமையை உருவாக்குவதை எதிர்ப்பவன் நான். இந்த அடிப்படையில் சென்ற 26–1–1996 அன்று நடந்த ஒரு நிகழ்ச்சியில் தமிழ் நாட்டில் அஇஅதிமுகவுடன் கூட்டணி ஏற்பாடு முயற்சிக்கு வந்திருந்த ராம்விலாஸ்பாஸ்வானை நேருக்குநேர் விமர்சித்திருக்கிறேன்.

(ஆனால் சூத்திரர் – பஞ்சமர் ஒற்றுமை, பஞ்சமரின் சுயமரியாதை என்ற அடிப்படையில் உருவாக்கிய சுயமரியாதை இயக்க சாதனைகளை– அதன் ஆக்கபூர்வமான கூறுகளைப் பாதுகாப்பதும் அந்த வரலாற்றை நினைவு கூர்வதும், அப்படி நினைவு கூர்வதன் மூலம் இன்று அத்தகைய முயற்சிகளுக்கு ஊட்டம் கொடுப்பதும், பெரியார் பெயரைச் சொல்லி இயக்கங்களும், கட்சிகளும் நடத்துகிறவர்கள் யாரும் அந்த மரபுக்கு உரிமை கொண்டாடத் தக்கவர்கள் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதும் தேவை. அதே சமயம் அன்று இருந்த சாத்தியப்பாடுகளின் வரம்பை இன்றைய திராவிடக் கட்சிகளின் வரம்புகளோடும், அவை தலித் பிரச்சனையில் அக்கறையற்று இருப்பதோடும் ஒப்பிடக் கூடாது.) அன்று ஒரு சௌந்தரபாண்டியனார் செய்தவற்றை ஒரு மக்கள் யுத்தக் குழுவின் அல்லது வினோத் மிஸ்ரா குழுவின் அளவுகோல்படிப் பார்க்கக் கூடாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒடுக்கும் சாதியினரை, ஆண்டைகளை எதிர்த்து ஒரு சொல்கூடப் பேச முடியாமல் ஊமைகளாக இருக்கும்படிச் செய்த பார்ப்பனிய, சாதியக் கருத்தியல்மீது தாக்குதல் தொடுப்பதில் அவர்களுடன் தோளோடு தோள் நின்ற சுயமரியாதை இயக்கத்தின் செயல்பாடுகளை ஒன்று மிகவும் எளிமைப் படுத்துவது, அல்லது கொச்சைப்ப படுத்துவது, அல்லது மூடி மறைப்பது என்ற பணிகளைத் தொடர்ந்து செய்துவந்

படிப்பகம்

www.padippakam.com



துள்ள கேசவன் அந்த இயக்கத்தின் மாபெரும் தலைவர் பெரியாரை கொச்சைப்படுத்தவும் திரித்துக் கூறவும் செய்துள்ளார். மற்றோர் புறமோ, தனது பொதுவுடைமை இயக்க முன்னோடிகள் செய்யத் தவறியதை 'மென்மையாக' விமர்சனம் செய்வதன் மூலம் தான் நடுநிலையாளர் என்று காட்டிக்கொள்ள முயற்சி செய்கிறார். அவரது மென்மையான விமர்சனம்கூட பல உண்மைகளை மூடி மறைத்துவிடுகிறது, அல்லது அவற்றைத் திரித்துக் கூறுகிறது.

எடுத்துக்காட்டாக உழைக்கும் வர்க்கத்தினரிடையே உள்ள சாதி வேறுபாடுகளைக் களைய பொதுவுடமையர்கள் செய்த முயற்சி என்று சில விஷயங்களை கோ.கே. 3 நூலின் 90ஆம் பக்கம் கூறுகிறார்: "சாயப்பட்டறையிலும், நெசவுப் பிரிவிலும் தாழ்த்தப்பட்டோரையும் சாதி இந்துக்களையும் பணியில் அமர்த்த வேண்டும். இரு தரப்பினருக்கும் ஒரே இடத்தில் பொதுக் குடியிருப்புகளை அமைத்தாக வேண்டும் என்று 1926இல் அனைத்து இந்திய தொழிற் சங்க காங்கிரசில் காண்கிறோம்." அன்றைய அந்த அனைத்திந்திய தொழிற் சங்க காங்கிரஸ் (AITUC) பொதுவுடைமையின் அமைப்பல்ல. காங்கிரஸ் கட்சியின் தலைமையின் கீழிருந்த அமைப்பாகும். கம்யூனிஸ்டுகளின் தலைமையிலிருந்த 'சிவப்புத் தொழிற் சங்கங்கள்' (Red Trade Unions) ஏ.ஐ.டி.யு.சி.க்குள் அனுமதிக்கப்பட்டதே 1935ஆம் ஆண்டில்தான். (Sunit Kumar Gosh, India and the Raj 1919–1947, Glory, Shame and Bondage Vol. 2, p. 964)

மேற்சொன்ன பக்கத்தில் மராத்தியத்தில் இருந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பொதுவுடைமை இயக்கம் சாதி வேறுபாடுகளைக் களைய முன்வந்ததாகக் கூறுகிறார். அன்று மராத்தியத்திலிருந்த கம்யூனிஸ்ட் தொழிற்சங்கத் தலைவர் ஜோக்லேகரைப் பற்றி நாம் ஒரு செய்தியைக் கூற விரும்புகிறோம்: அவர் 1927 டிசம்பர் 30இல் சென்னையில் நடந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செயற்குழு செய்த கண்டனத்துக்குப் பிறகே 'பிராமண சபா' உறுப்பினர் பதவியைவிட்டு விலகினார். 1928 பம்பாயில் நடந்த தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தின்போது, பம்பாய் நகராட்சி சோறும் குழம்பும் சமைக்க ஒரு பார்ப்பன சமையற்காரர் அமர்த்தப்படுவார் என்றும் அவர் சமைத்த உணவுதான் வேலை நிறுத்தம் செய்துவந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் என்றும் உத்திரவாதம் செய்தது. ஜோக்லேகரோ ஒருபடி மேலே சென்று சமைக்காத உணவுப் பொருட்களைத் தொழிலாளர்களுக்கு தந்துவிட வேண்டும் என்ற கோரிக்கை விடுத்தார். அதற்கு அவர் கூறிய காரணம் கீழ்வருமாறு: ஏனெனில் மற்றவர்கள் சமைத்ததை சாப்பிடாத 'பய்யாக்களும்' அதாவது மேல்சாதிக்காரர்களும் இங்கு இருக்கிறார்கள். நாங்களும்கூட மற்ற சாதிகளைச் சேர்ந்தவர்கள் தயாரிக்கும் உணவை சாப்பிடுவதில்லை. எனவே அவர்கள் (நக

படிப்பகம்

www.padippakam.com



ராட்சி நிர்வாகம் –எஸ். வி. ஆர்.) எங்களுக்கு அரிசியை மட்டும் கொடுக்கட்டும். எங்களுக்கான முறையில் நாங்களே சமைத்துக் கொள்கிறோம். (Sashi Joshi, Struggle for Hegemony in India, 1920–47, Vol. 1, p 170, Saga Publcations, Delhi, 1992). சுய மரியாதை மாநில மாநாடுகளிலோ சாதிப் படி வரிசையில் மிகவும் கீழே இருந்த சாணார்களும் (நாடார்களும்) பஞ்சமர்களும் சமைக்கவும் பரிமாறவும் கலந்துண்ணவும் செய்தனர்.

தொடக்க கால இந்தியக் கம்யூனிஸ்டுகளிலேயே தாழ்த்தப்பட்டோர் பிரச்சனை, தீண்டாமைப் பிரச்சனை ஆகியவற்றில் மிகுந்த அக்கறையும் கூருணர்வும் கொண்டிருந்தவர் ம. சிங்காரவேலர் தான். 1921 - 22இல் நடந்த பின்னி - கர்நாடிக் ஆலை வேலை நிறுத்தத்தின்போது ஒருபுறம் தாழ்த்தப்பட்ட வகுப்புத் தொழிலாளர்களுக்கும் மறுபுறம் சூத்திர இந்துத் தொழிலாளர்கள், முஸ்லிம் தொழிலாளர்கள் ஆகியோருக்கும் இடையில் நடந்த மோதல்கள், அதன் காரணமாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள், நீதிக் கட்சித் தலைவர்களின் நிலைப்பாடு ஆகியவற்றைப் பற்றி கம்யூனிஸ்ட் ஆதரவு நூலாசிரியர்கள் நிறையவே எழுதியுள்ளனர். குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டதால் அகதிகளாக்கப்பட்டு வியாசர்பாடி முகாமிலே வைக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட வகுப்புத் தொழிலாளர்களுக்காக மனம் வேதனைப்பட்டு சிங்காரவேலர் எழுதிய கட்டுரையைக் கோ. கேசவன் சுட்டிக்காட்டுகிறார் (கோகே 3, 37). அந்தக் கட்டுரையில் சிங்காரவேலர் கண்ணீர் விடுவது ஒரு காந்திய வாதி என்ற நிலையிலிருந்துதான்:

> And the words of our Mahatmaji that flowed from his golden lips on the memorable occasion of the meeting of the mill strikers on the Beach, that "hatred is not appeased by hatred" and which, we were not then inclined to accept as applicable to industrial fight, have come upon us with dreadful force... (Swadarma, 1922, p 643)

காந்தியம், கம்யூனிசம் இரண்டையும் ஒரு சேரக் கடைப்பிடித்து வந்த சிங்காரவேலர் தொழிற் சங்கம் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தை உறுதியாக ஆதரித்தவர் என்ற வகையில் அவரிடம் தொழிற் சங்க வாதமும் வர்க்கப் பார்வையும் மட்டுமே இருந்தன என்பதையும் கேசவன் குறிப்பிட்டிருக்க வேண்டும். பிற சூத்திர சாதித் தலைவர்களைப் போலவே அவரும் தாழ்த்தப்பட்ட வகுப்புத் தொழிலாளர்களின் பிரத்யேகப் பிரச்சனைகளைக் கருத்தில் கொள்ளவில்லை. அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளாமலிருந்ததற்கான சில நியாயங்கள் இருந்தன என்பதை அவரும்கூடப் புரிந்து கொள்ளவில்லை. எடுத்துக்காட்டாக இருப்பது அவரது எழுத்து:

படிப்பகம்

www.padippakam.com



While the Strike of these Mill workers was in progress the Mill management contrived to run the Mills through some Panchama "blacklegs" and other Pariahs said to have been procured by the Labour Department under the cover of its office as protector of the depressed classes. The questlon then arose how far the management, the Govern ment and its official and non-official satelites, were justified in helping these "blacklegs", as against the body of the the strikers. The strikers contend that they, incl uding the Panchama "blacklegs", form an organisd body under the name and style of the Madras Labour Union and this Union of Mill Workers is a recognlsed institutiou in the Industrial world and as such, it has definite rights and obligations in relation to the industry in which they happen to labour. (The Right to Strike, Reply to Dr. Gilbert Slater Swadarma, 1921, p 399–400)

வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட சூத்திர, முஸ்லிம் தொழிலாளர்களுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்புத் தொழிலாளர்களுக் குமிடையே நடந்த மோதல்கள், பெரம்பூரில் 29–௬–1921 அன்று நடந்த போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் ஆறு சூத்திரத் தொழிலாளி கள் சாவு, வியாசர்பாடியில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டமை, புளியந் தோப்புக் கலவரத்தில் தாழ்த்தப்பட்டோர் வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டமை, தாழ்த்தப்பட்டோரின் உண்மையான பிரத்யேகமான இன்னல்களைப் பயன்படுத்திக்கொண்டு வேலை நிறுத்தத்தை முறிய டிக்க அரசாங்கமும் ஆலை நிர்வாகமும் செய்து வந்த முயற்சிகள், தனது வகுப்புத் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் ஆதங்கத்தில் அர சாங்கத்திற்கு உறுதுணையாக எம். சி. ராஜா இருந்தமை, அன் றைய இரட்டையாட்சிமுறையின் கீழ் போலீஸ்துறை அதிகாரம் எதையும் பெற்றிராதவர்களும் வேலை நிறுத்தத்தை நடத்திய காங் கிரஸ் ஒத்துழையாமைவாதிகள், அதை ஒடுக்கிய வெள்ளை அரசாங் கம் ஆகிய இரண்டாலும் ஏற்பட்ட கலவரங்கள், உயிர் நாசங்கள் ஆகியவற்றை சமாளிக்க முடியாமல் திணறிய நீதிக்கட்சித் தலைமை அப்போது இரண்டாண்டேயான ஆட்சியைக் காப்பாற்றிக் கொள் ளவும் அன்றைய நிலைமை பற்றி ஒரு நிலைப்பாட்டை பகிரங்க மாக அறிவித்தாகவும் வேண்டிய கட்டாயம்– இந்தச் சிக்கலான சூழலில் நீதிக்கட்சித் தலைமை பரிந்துரைத்த ஆலோசனை ஒன்று சூத்திர சாதிக் கண்ணோட்டத்திலிருந்தே பிறந்தது. வேலை நிறுத்தத்தில் ஈடுபடாதவர்களும் கலவரத்திற்கு காரணமானவர்கள் என்று நீதிக்கட்சித் தலைமையால் கருதப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்புத் தொழிலாளர்கள் அனைவரும் சென்னைக்கு வெளியே ஒரே இடத்தில் ஒரே முகாமில் வைக்கப்பட வேண்டும் என்ற பரிந்

படிப்பகம்

www.padippakam.com



துறை ஆதிக்க சாதித் தன்மையுடையதாகும். சூத்திரர் – பஞ்சமர் ஒற்றுமை ஒரு பலகீனமான கண்ணியால் கட்டப்பட்டிருந்தது வெளிப்பட்டுவிட்டது. நீதிக்கட்சித் தலைமையின் எந்தவொரு பரிந்துரையையும் வெள்ளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. நீதிக்கட்சிக்குள்ளேயே ஓ. கந்தசாமி செட்டி போன்றோர் அவ்வறிக்கையை கடுமையாக விமர்சித்தனர். நீதிக்கட்சித் தலைவர்களின் அறிக்கையை வரவேற்றவர்களில் ஒருவர் ம. சிங்காரவேலர் என்பதுதான் இங்கு குறிப்பிடத்தக்கது:

> ...By this timely act, the non-Bramin party may be deemed to have redeemed themselves from public condemnation of their prolonged inertness in the present critical situation.
>
> They, the leader set out in clear language, characterised by much outspokennes, the various incidents leading up to the present situation and proposed certain remedies to put an end to the disgraceful condition of the city. The facts found by them and conclusions drawn by them were all wellknown to the public. It is a fact that the Government unduly favours the Adi Dravidas. It is a fact that labour officials are openly escorting the blacklegs to the mills. It is a fact that the Panchamas' leaders are inflaming the feelings of the Panchama against caste Hindus. It is a fact that labour officials are frequently seen in and about Paracheries. It is also a fact that the Panchamas are armed with knives made of hoop iron used in bunding cotton bales. It is a fact that the Panchamas are more aggressive in the present crisis than others. And lastly it is a fact, as disclosed in a judicial finding, that the Police are in a way partial to Panchamas. How else can any one with a pretence to a little sense explain this fact that of the persons charged, convicted, injured and killed owing to the disturbance there are more, disproportionately more, of caste Hindus and Mohammedans than of Panchamas. (Swadarma, 1921, p 331)

கோ. கேசவனின் ஆய்வு முறைகளைப் பின்பற்றினால் மேற்காணும் கூற்றுகளைக் கொண்டு, ம. சிங்காரவேலர் ஒரு தலித் விரோதி என்று கூறிவிடலாம்! ஆகா, பார்த்தீர்களா, பஞ்சமர், பறையர் என்ற வார்த்தைகளை சரமாரியாகப் பயன்படுத்துகிறார் என்று குற்றம் சாட்டிவிடலாம். அன்று அச்சொற்கள் தாழ்த்தப்பட்ட சாதிகள் சிலவற்றைக் குறிக்கும் குறிப்புச் சொற்களாக இருந்தன. அச்சாதியினரும் அவர்களது தலைவருமான எம். சி.ராஜா

படிப்பகம்

www.padippakam.com



வும் அக்குறிப்புச் சொல்லை பயன்படுத்தினர். ம.சிங்காரவேலரும் கூட அதைக் குறிப்புச் சொல்லாகப் பயன்படுத்தினாரே தவிர இழிவுக் குறிப்புச் சொல்லாக அல்ல. இங்கு அவர் தலித் தொழிலாளர்களின் பிரத்யேக நிலைமையைக் கருத்தில் கொள்ளாததற்குக் காரணம் அவரது 'வர்க்கப்பார்வை'. சாதி ஏற்றத் தாழ்வுகளையும், சாதி ஒடுக்குமுறைகளையும் கருத்தில் கொள்ளாத பார்வை என்று அவரை இன்று நாம் விமர்சிக்கலாமேயொழிய தலித் விரோதியாக அவர் இருந்தார் என்றல்ல. தலித் மக்களையே தங்கள் அடித்தளமாகக் கொண்டு கம்யூனிஸ்ட் இயக்கம் இயங்கிய இடங்களிலும்கூட, வர்க்கப் பார்வையே அதாவது சாதிய அமைப்பை முழுமையாகக் கருத்தில் கொள்ளாத பார்வையே அவர்களிடம் மேலோங்கிற்று. கிராமப்புறங்களிலும் நகர்புறத் தொழிலாளர்களிடமும் சாதி உணர்வும், தீண்டாமை உணர்வும் இருப்பதை அவர்கள் பார்த்திருந்தாலும்கூட, நமது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் சாதியமும் பார்ப்பனியமும் கலந்திருக்கின்றன என்பதை அம்பேத்கர் போலவோ பெரியார் போலவோ பார்க்கவில்லை. இவ்வாறு கூறுவது எல்லாக் கம்யூனிஸ்ட்களிடமும் சாதிய உணர்வு இருந்தது என்று கூறுவதோ அல்லது அவர்களது தியாகத்தைக் குறைத்து மதிப்பிடுவதோ அன்று. பார்ப்பன உயர்சாதித் தலைமைதான் கம்யூனிஸ்ட் இயக்கங்களின் குறைபாடுகளுக்கான ஒரே காரணம் என எளிமைப்படுத்துவதுமல்ல. இதுவும் மேற்சொன்ன காரணம் என்ற போதிலும் நிலைமைகளைக் கருத்தில் கொண்டுதான் சூத்திரர் – பஞ்சமர் பிரச்சனை அன்று யாராலும் தீர்த்திருக்க முடியாது என்று என்னாலும் தோழர் வ. கீதாவாலும் சொல்லப்பட்டதே யன்றி, இன்றும்கூட அதைப்பற்றி மௌனம் காக்க வேண்டும் என்பதற்காக அல்ல.

குறிப்பு: Swadharma இதழ்கள் சென்னை மேற்கு சி. ஐ. டி. நகர், வடக்குத் தெருவிலுள்ள 18ஆம் இலக்க வீட்டில் இயங்கும் கார்ல் மார்க்ஸ் நூலகத்தில் உள்ளன (எஸ். வி. ஆர்.) புதுடில்லியில் உள்ள நேரு மியூசியம் நூலகத்திலும் உள்ளன.

இனி 'திராவிட இயக்கமும் மொழிக் கொள்கையும்' (கோகே 2) என்ற நூலுக்கு வருவோம்:

1. "பெரியார் காங்கிரசில் இருக்கும்பொழுது இந்தி வகுப்புகளை நடத்துவதற்கு உறுதுணையும் உற்ற நிதியும் நல்கியிருந்தார் என அறிகிறோம்" (ப 36). இப்படிச் சொல்வதற்கும் கோ. கேசவன் தி.மு.க. வில் இருந்தபோது கருணாநிதி புகழ் பாடிக் கொண்டிருந்தார்" என்று சொல்வதற்கும் என்ன வேறுபாடு?

2. "நீதிக்கட்சியின் கல்விப் பொறுப்புக் காலத்திலும் பெரியாரின் ஆதரவு பெற்ற டாக்டர் பி. சுப்பராயன் மாகாண

படிப்பகம்

www.padippakam.com



முதல்வராக இருக்கும் காலத்தில் பள்ளி இறுதி வகுப்பிலும் இந்தி அறிமுகமாயிற்று என்பதையும் மனங்கொள்ளுதல் அவசியம்" (ப 37). ...1936இல் சென்னை மாகாணக் கல்வி இயக்குநரின் பரிந்துரையின் பெயரில் பள்ளி இறுதி வகுப்பில் இரண்டாவது மொழிகளுள் ஒன்றாக A பிரிவில் இந்தி சேர்க்கப்பட்டது. ... 1927ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசு ஆணை பள்ளி இறுதி வகுப்பில் B, C ஆகிய பிரிவுகளில் இந்தியைக் கற்றுக் கொடுக்க ஏற்கனவே வசதி செய்திருந்தது. இந்தப் புதிய ஆணையையும் இணைத்தால் பள்ளி இறுதி வகுப்பின் எல்லாப் பிரிவுகளிலும் இந்தி விருப்பப் பாடமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது என அறிகிறோம். 1936இல் பொப்பிலி அரசரின் தலைமையில் நீதிக் கட்சி அரசாங்கம் நடந்தது. பொப்பிலி அரசரின் ஆட்சிக் காலத்தில் இன்னோர் ஆணை... வெளியிடப்பட்டது. உயர்நிலைப் பள்ளிகளில் கற்றுத்தரப்படும் விருப்பப்பாடத்தைக் கட்டாயப் பாடமாக மாற்றும் வசதியை இந்த ஆணை அளித்தது. இதனால் சென்னை மாகாண மொழிகளுள் ஏதேனும் ஒன்றைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களின் நலனுக்காக இந்தி இரண்டாவது மொழியாகக் கற்றுத் தரும் வசதி செய்து தரப்பட்டது. (அழுத்தம் என்னுடையது. எஸ். வி. ஆர்). இந்த விதத்தில் நீதிக்கட்சிக் காலத்தில் வெளிவந்த அரசு ஆணைகள் இந்தி கற்றுக்கொள்வதற்கு உகந்த விதத்தில் அமைந்தன. (அழுத்தம் கோ.கே.) சென்னை மாகாணத்தில் இந்தி கற்பித்தலுக்கு உரிய வரலாற்றில் நீதிக்கட்சிக்கு தொடக்க காலப் பொறுப்பு இருந்தது என்பதை மறுக்க இயலாது என யூஜின் எப். இர்ஷிக் குறிப்பிடும் கருத்து ஏற்புடையது ஆகும். காங்கிரசுக்கு ஒரு திட்டவட்டமான மொழிக் கொள்கை இருந்ததைப் போல நீதிக் கட்சிக்கு எதுவும் இல்லை. (அழுத்தம் எனது— எஸ். வி. ஆர்.) நீதிக்கட்சிக்கு இந்தக் காலங்களில் ஆதரவு தெரிவித்த பெரியாரின் சுயமரியாதை இயக்கம் இது குறித்துக் கொண்டிருந்த கருத்து குறிப்பிடத்தக்கது." (ப. 51–52) இவ்வாறு சொன்ன கோ. கே. மேற்சொன்ன காலங்களில் பெரியார் சுயமரியாத இயக்கம் கொண்டிருந்த கருத்துகளைப் பட்டியலிடுகிறார். (கோ கே 2, ப. 52-53)

அ. காங்கிரசில் இருக்கும் பொழுது இந்திப் பள்ளிகள் நடத்தப் பெரியார் நிதியுதவி செய்ததாகக் குறிப்புகள் உண்டு; இது குறித்து பெரியாரே பின்னால் வருந்தியுள்ளார். (அழுத்தம் என்னுடையது— எஸ். வி. ஆர். —குடிஅரசு, 14–3–1926.)

ஆ. இந்த இதழில் 'சித்திர புத்திரன்' என்ற புனை பெயரில் பெரியார் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் பிராமணரல்லாதாரின் பணத்தில் பிராமணர்கள் இந்தி கற்றுக் கொள்வதையும்

படிப்பகம்

www.padippakam.com



இதில் நூற்றில் ஒரு பங்குகூட தமிழ்மொழி கற்பிக்க முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இ. முதல் சுயமரியாதை இயக்க மாநில மாநாட்டில் (செங்கற்பட்டு பிப்ரவரி, 1929) 'கல்வி நிறுவனங்களில் தாய்மொழியும் பொது மொழியான அரசாங்க மொழியும் தவிர மற்ற மொழி களின் படிப்புக்கு பொதுப் பணத்தைச் செலவிடக் கூடாதென்று ஒரு தீர்மானம் (எண்: ஊ 12) இயற்றப்பட்டது. (அழுத் தம் கோ.கே)

ஈ. மூன்றாவது மாநில மாநாட்டுக்கு முன்னால் பெரியார் எழு திய ஒரு கட்டுரையில் (20-5-1931, குடிஅரசு) 'இந்தி என் பதை பார்ப்பன ஆதிக்கத்தோடும் ஆரிய நாகரிக்கத்தோ டும் சமயக் கொள்கையோடும் இணைத்துக்' காண்கிறார்.

மேலே (இ), (ஈ) ஆகியவற்றில் கோ. கே. மேற்கோள் குறிக ளில் காட்டுவது போன்ற வாசகங்கள் செங்கற்பட்டுத் தீர்மானத்தி லும் பெரியார் கட்டுரையிலும் இல்லை. செங்கற்பட்டுத் தீர்மானம் பின்வருமாறு: "கல்வி ஸ்தாபனங்களிலேயே தாய் பாஷையும் பொது பாஷையாக அரசாங்க பாஷையையும் தவிர மற்ற பாஷைப் படிப்புக்காக பொதுப் பணத்தை உபயோகிக்கக் கூடாது."

கோ. கே. பொருளைத் திரிக்கவில்லை என்பது உண்மையா னாலும், பிறரின் எழுத்துகளைத் தனித் தமிழாக்கம் செய்யும் வேலையைத் தவிர்த்திருக்க வேண்டும்.

3. மூன்றாவது மாநில மாநாட்டின் தீர்மானம் (7-1931) 'இந்தி மொழியைக் கற்க வேண்டுமென்பது வருணாசிரமத்துக்கு ஆதரவு கொடுப்பதாகும்' என்று குறிப்பிட்டுள்ளார். (இங்கு திட்டமிட்டு மேற்சொன்ன தீர்மானத்தைச் சிதைத்துக் காட்டுகிறார். விருதுநகர் மாநாட்டுத்தீர்மானம் கீழ்வருமாறு: "தேசியத்தின் பெயரால் ஹிந்தி பாஷையைக் கற்றாக வேண் டுமென்பது வருணாசிரமத்திற்கு ஆதரவு கொடுப்பதாய் இருப்பதால் ஹிந்திக் கொள்கையைக் கண்டிக்கிறது" (குடி அரசு, 16-8-1931). இத்தீர்மானம் சொ. முருகப்பாவால் முன்மொழியப்பட்டு சாமி சிவநேசத்தால் வழிமொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது — எஸ். வி. ஆர்.)

இப்படி 'சிதைவுகள்' உள்ள பட்டியல் போட்ட பிறகு கோ. கே. கூறுகிறார்: "இத்தகைய கட்டுரைகளில் இந்தியை விருப்பப் பாட மாகக் கற்றுத்தர வசதி செய்த நீதிக்கட்சியின் நடவடிக்கைகள் குறித்து எவ்வித எதிர்ப்பும் இல்லாதது கவனிக்கத் தக்கதாகும்." (ப 53. அழுத்தம் அவருடையது.)

வலிந்து பொருள் கூறுதல் அல்லது (labou red argument) என் பார்களே, அதுதான் இது. ஆனால் கோ. கே. இங்கு பரிதாபகர மான முறையில் மண்ணைக் கவ்வ வேண்டியுள்ளது!!

படிப்பகம்

www.padippakam.com



முதலாவதாக அன்றைய சென்னை மாகாணம் தெற்கே இன்றைய நெல்லை மாவட்டம் முதல் வடக்கே இன்றைய ஒரிஸாவின் கஞ்சம் மாவட்டம் வரை, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கொங்கணி, ஒரியா, மராத்தி, இந்தி, உருது, (இந்துஸ்தானி) முதலிய பல்வேறு மொழிகளைப் பேசிய மக்களடங்கிய மாகாணமாகும். நீதிக்கட்சி அரசாங்கம் என்பது சென்னை மாகாணத்திலிருந்த தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமே இருந்த அரசாங்கம் அல்ல. எல்லா மொழி மக்களுக்கும் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த அரசாங்கமாகும்.

மற்றோர் புறமோ, சுயமரியாதை இயக்கம் தமிழ் பேசும் பகுதியில் மட்டுமே, தமிழ் மக்களிடையே மட்டுமே இயங்கி வந்த இயக்கமாகும். கோ. கேசவன்களும், சாமுவேல் குணசீலன்களும் (குணா) விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பெரியார் தமிழர் தலைவராகவே செயல்பட்டார். இரண்டாவதாக, ப. சுப்பராயன் அமைச்சரவை, நீதிக்கட்சி அமைச்சரவைகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் அத்தனையையுமோ அல்லது நீதிக்கட்சியின் கொள்கைகள், செயல்கள் அத்தனையையுமோ ஒட்டு மொத்தமாகப் பெரியாரோ சுயமரியாதைக் கட்சியோ ஆதரித்ததுமில்லை; ப. சுப்பராயனும் நீதிக்கட்சித் தலைவர்களும் பெரியாரினதும் சுயமரியாதை இயக்கத்தினதும் கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவற்றை முழுமையாக ஆதரித்ததுமில்லை. தனது குறிக்கோள்களுக்கு உகந்த கொள்கைகளும் செயல்பாடுகளும் ப. சுப்புராயனதும் நீதிக்கட்சியினதும் அமைச்சரவைகளிலும் அக்கட்சி அமைப்பிலும் இருந்த அளவிற்குத்தான் அவற்றைப் பெரியாரும் சுயமரியாதை இயக்கத்தினரும் ஆதரித்தனர். அந்த அமைச்சரவைகள் தங்கள் அதிகார வரம்பிற்குள்ளாக, சுயமரியாதை இயக்கம் விரும்புகின்றவற்றைச் செய்கின்றனவா என்ற அளவிலேயே பெரியாரின் எதிர்பார்ப்பு அமைந்திருந்தது. அதே சமயம் அவை தனது இயக்கம், கொள்கைகளுக்கு எதிராகச் செயல்பட்ட போதெல்லாம் அவற்றை எதிர்க்கவும் விமர்சிக்கவும் பெரியார் தயங்கியதில்லை.

இரண்டாவதாக கோ. கேசவனின் 'ஞானத்தந்தை'யான யூஜின் இர்ஷிக்கிடம் வருவோம்.:

> By 1931, the Census classification of languages made Hindi and Urdu (designated as Hindustani) into different languages. In that year, the Census Commissioner from Madras said that the number of peoples who had Hindi as their mother tongue had increased substantially between 1921 and 1931. In that year, there were 1,230,000 speakers of Hindustani and 19,740 of Hindi in Madras Presidency. Of the Hindi speakers, 14963 lived in either Madras city

படிப்பகம்

www.padippakam.com



or in the Tamil districts. As British bureacratic institutions began to be founded in India, schools were set up in vari ous parts of the presidency to teach either Hindi or Hin dustani to school children......

Between 1920 and 1926, Justice ministries were in power in Madras presidency and, despite the fact that they opp-osed Congress, were partly responsible for establishing Hindi instruction in the presidency. In amending the Mad ras Education Act, the second Justice Ministry ordered that Hindi (like all other vernacular languages) **could not be used as the medium of instruction outside of the area where it or some kindred language was spoken.** The order, however, for the first time made Hindi an opt-ional subject in secondary school. Later on, under the Justice Ministry of the Raja of Bobbili a student's second language in secondary school could be used as a compul sory subject, which elevated the educational status of Hindi. Then, just before the Raja of Bobbili resigned, the high school curriculum was revised so that Hindi could be used as a **second language for the benefit of the pupils whose mother tongue is not one of the south Indian vernaculars.** As a result of these actions of the Justice Party– whose policy was to encourage a wide variety of local solutions to political problem– Hindi and Hindustani came to be taught to a large number of schools before Rajagopalachari or Congress even came to power. (Eugene F. Irschick, Tamil Revivalism in the 1930s, Cre– A, Madras 1986, pp 212–213)

( அழுத்தங்கள் என்னுடையவை– எஸ். வி. ஆர். )

இர்ஷிக் நமக்குத் தெரிவிப்பது என்ன?

அ. அன்றைய சென்னை மாகாணத்தில் இருந்த பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் அனைவருக்கும் பொதுவானதாக இருந்த ப. சுப்பராயன் அமைச்சரவையும், நீதிக்கட்சி அமைச்சரவைகளும் இந்தியையும் இந்துஸ்தானியையும் தாய்மொழியாகக் கொண்ட பள்ளி மாணவர்களுக்காக மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் அம்மொழிகளைக் கற்றுக் கொடுக்கும் பள்ளிகளை நிறுவினர்.

ஆ. இந்தியோ அல்லது அதே குடும்பத்தைச் சேர்ந்த பிற மொழிகளோ பேசப்படும் பகுதிகளுக்கு வெளியே அவற்றைப்

படிப்பகம்

www.padippakam.com



பயிற்று மொழியாகப் பயன்படுத்தப்படமுடியாது. (இது பிற சுதேச/ தாய்மொழிகளுக்கும் –Vernacular languages) என இரண்டாவது நீதிக்கட்சி அமைச்சரவை உத்தரவிட்டது. எனினும் அந்த ஆணைதான் உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியை முதன்முதலாக ஒரு விருப்பப் பாடமாக்கியது.

இ. பிறகு பொப்பிலி அரசரின் நீதிக்கட்சி அமைச்சரவையின் கீழ் உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் இரண்டாவது மொழிகள் (இந்திமட்டுமல்ல) கட்டாய மொழியாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. ( இங்கு could be used என்று தான் இர்ஷிக் குறிப்பிடுகிறாரேயன்றி should be used என்றல்ல. இரண்டுக்குமிடையே உள்ள வேறுபாட்டை விளக்கத் தேவையில்லை.) இவ்வாறு பிறமொழிகளோடு சேர்த்துத்தான் இந்திமொழியின் கல்வித் தகுதியும் உயர்த்தப்பட்டதேயன்றி இந்தி மொழிக்கு மட்டுமே உயர்ந்த கல்வித் தகுதி வழங்கப்படவில்லை

ஈ. பொப்பிலி அரசரின் ஆட்சியின் கடைசி நாட்களில்தான் ( just before he resigned ) இர்ஷிக்கும் கேசவனும் கூறுவது போல "அங்கீகரிக்கப்பட்ட தென்னிந்திய தாய்மொழிகளில் ஏதேனுமொன்றைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களின் நலனுக்காக இந்தியை இரண்டாவது மொழியாகக் கற்றுத்தரும் வசதி செய்து தரப்பட்டது."

1921–1936 கால கட்டத்தில் பெரியாரும் சுயமரியாதை இயக்கத்தினரும் விட்டுக் கொடுப்பு செய்திருக்கிறார்கள் என்பதை யோக்கியப் பொறுப்பும் நாணயமுமுள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதல் நீதிக்கட்சி அமைச்சரவை காலத்தில் சுயமரியாதை இயக்கமே இல்லை. இரண்டாவது நீதிக் கட்சி அமைச்சரவை காலத்தில்தான் சுயமரியாதை இயக்கம் தோன்றியது. முதல் மாநில சுயமரியாதை மாநாட்டின் போது ப. சுப்பராயன் அமைச்சரவை இருந்தது. அப்போது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நினைவு கூர்வோம்: "கல்வி ஸ்தாபனங்களிலேயே தாய் பாஷையும், பொது பாஷையாக அரசாங்க பாஷைப் படிப்பும் தவிர மற்ற பாஷைப் படிப்புக்காக பொதுப் பணத்தை உபயோகிக்கக் கூடாது." 1921 முதல் 1929 வரை இதுதானே நடந்தது. இந்தி மொழியும் சென்னை மாகாணத்திலிருந்த சிலரின் தாய் மொழியாக இருந்ததால் அதைக் கற்பிப்பதற்கான வசதிகள் படிப்படியாக உருவாக்கப்பட்டன. இர்ஷிக்கின் கூற்றுப்படியே பார்த்தாலும் பொப்பிலி அரசரின் நீதிக்கட்சி அரசாங்கத்தின் கீழ் தான் இரண்டாவது மொழிகள் ( அன்று சென்னை மாகாணத்தில் தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு உருது, சமஸ்கிருதம், ஆங்கிலம் தவிர்த்த ஏனைய மொழிகளில் ஏதேனுமொன்று, இந்தி) —பெரும்பான்மையான மாணவர்களைப் பொறுத்தவரை தாய் மொழிகள் கட்டாயப் பாடமாக்கப்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com



பெரியாரோ சுயமரியாதை இயக்கத்தினரோ இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இந்தி படிக்கக்கூடாது, அவர்களுக்கு இந்தி கற்பிக்கப்படக்கூடாது என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்கள் அல்லர். மாறாக இந்தி பேசாத தமிழர்கள் (பிராமணரல்லாதார்) மீது இந்தி திணிக்கப்படுவதை எதிர்த்தவர்கள். பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தினரின் இந்தி எதிர்ப்பு என்பது பார்ப்பனியக் காங்கிரஸ் எதிர்ப்புடன் தொடர்புடையதாகும்; இந்தியை தேசிய மொழியாக்குதல் என்பது காங்கிரஸ் பார்ப்பனிய மொழிக் கொள்கையுடன் தொடர்புடையதாகும். அதனால்தான் பெரியார் இந்தியை பார்ப்பன ஆதிக்கம், ஆரிய நாகரிகம், ஆரிய மதம், வருணாசிரமம் ஆகியவற்றுடன் தொடர்பு படுத்திப் பார்த்தார். 1931 இல் கராச்சியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டுத் தீர்மானங்கள் பார்ப்பனிய மேலாதிக்கத்திற்கான கட்டியங் கூறுபவையாக இருந்ததால்தான் விருதுநகரில் அதே ஆண்டு ஆகஸ்டில் நடந்த மூன்றாவது மாநில சுயமரியாதை மாநாட்டில் கராச்சித் தீர்மானங்களுக்கு நேர் விரோதமான தீர்மானங்கள் பல இயற்றப்பட்டன. இப்போது நாம் விருதுநகர் தீர்மானத்தை நினைவு கூர்வோம்: "தேசியத்தின் பெயரால் ஹிந்திப் பாஷையைக் கற்றாக வேண்டுமென்பது வருணாச்சிரமத்திற்கு ஆதரவு கொடுப்பதாய் இருப்பதால் ஹிந்திக் கொள்கையைக் கண்டிக்கிறது."

1937இல் சி. இராஜகோபாலாச்சாரியார் (ராஜாஜி) நடைமுறைப்படுத்திய இந்தி மொழிக் கொள்கையும் நீதிக்கட்சி அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கையும் ஒன்று என்ற பொய்த் தோற்றத்தை உருவாக்குவதில் கேசவனைப் போலவே இர்ஷிக்குக்கும் பங்கு உண்டு என்பதைத்தான் இருவரது கூற்றுகளும் காட்டுகின்றன. ஆனால் ராஜாஜி செய்தது என்னவென்றால் தெரிந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம், இரண்டாவது மொழி ஆகியவற்றுடன் இந்தியை முதல் மூன்றுப் படிவங்களில் மூன்றாவது மொழியாகக் கட்டாயப் பாடமாக்கியதுதான். இத்திட்டத்தை அவர் சென்னை ராமகிருஷ்ணா உயர்நிலைப் பள்ளியில் 1937 ஆகஸ்ட் முதல் வாரத்தில் நடந்த நிகழ்ச்சியொன்றின் போது வெளியிட்டார். (A R H Copley, The Political Career of C. Rajagopalachari- 1937 - 1954, Mcmillan, 1978, p 101)

'இந்தி படித்தால் துளசிதாஸ் ராமாயணம் படிக்கலாம்' என்று ராஜாஜி கூறியது (குடிஅரசு, 22-8-1937, ஈ.வெ.ரா.சி. 1765) பார்ப்பனியத்தின் வெளிப்பாடல்லவா? 1937 ஜூலை 27இல் இலயோலாக் கல்லூரியில் பேசிய ராஜாஜி கூறியது என்ன? "By getting a workable knowledge of Hindi one could become a Sanskrit scholar. Hindi was by its very nature fit to b t e common language of India." தனது கட்டாய இந்தித் திட்டம் வெற்றி பெறுமேயானால் "நமது அமைச்சரவை பெருமைப்பட்டுக்

படிப்பகம்

www.padippakam.com



கொள்ளத்தக்க ஒரு பெரும் சாதனையாகிவிடும்'' என்று ராஜாஜி கூறினார். (ARH Copley, p 100- 101)

நீதிக்கட்சியின் ஆங்கில வார ஏடு 'ஜஸ்டிஸ்' 12-8.1937 இதழில் எழுதிய கட்டுரையை 'குடிஅரசு' 15-8-1937 இதழ் தமிழாக்கம் செய்து வெளியிட்டது. இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவது மாணவர்கள் மீது சுமத்தப்படும் சுமை என்று கல்வி நிபுணர் டாக்டர் ஜி. எஸ். அருண்டேல் கூறியதை அக்கட்டுரை சுட்டிக்காட்டியது. 'சுயாட்சியா? பழி வாங்கும் ஆட்சியா?' என்ற தலையங்கத்தில் பெரியார் எழுதினார்:

அக்கிரகாரச் சனியன்கள் பிரிட்டிஷ் சர்க்காரை சரணாகதி அடைந்து மந்திரி ஸ்தானத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்த ஆரம்பித்தது முதல் ஒவ்வொரு துறையிலும் பழிவாங்கும் குணத்தையும் அக்கிரகார ஆதிக்கத்தை என்றென்றும் நிலை நிறுத்தும் கவலையும் கொண்டு ஆட்சி நடத்துகிறது....

கல்வி விஷயத்தில் நம் நாட்டு மக்களுக்கு இரண்டு முக்கிய விஷயம் கையாளப்பட வேண்டியது அவசியம் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஒன்று கல்வியால் மக்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் ஏற்பட வேண்டும். மற்றொன்று மேன்மையான வாழ்வுக்குத் தொழில் செய்யவோ அலுவல் பார்க்கவோ வேண்டும். நம் நாட்டைப் பொறுத்தவரை இவ்விரண்டு காரியங்களுக்கும் அனுகூலமான கல்விக்கு ஏற்ற பாஷை தமிழும் ஆங்கிலமுமேயாகும். பிரிட்டிஷ் ஆட்சி இந்த நாட்டில் ஏற்பட்டிருந்தும் 200 வருஷ காலமாக அந்த ஆட்சி நடந்தும்கூட பார்ப்பன ஆதிக்கத்தின் பயனால் இந்த இரண்டு பாஷைகளிலும் பொதுமக்களுக்கு சராசரி 100க்கு 10 பேருக்குக்கூட எழுத்து வாசனை இல்லாமல் போய்விட்டது. தமிழ் நாட்டில் தாய் பாஷையான தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத மக்களே இன்று 100க்கு 90 பேர்கள் இருக்கிறார்கள். ஆங்கிலம் கற்ற மக்கள் இன்று 100க்கு 2 பேரோ 3 பேரோ இருக்கக் கூடுமானால் அதிலும் உள்ளதில் முக்கால் வாசிப் பேர்கள் பார்ப்பனர்கள்தான் கற்றிருப்பார்கள். தமிழ் பாஷையோ 100க்கு 100 பேர்கள் பார்ப்பனர்கள்தான் கற்றிருப்பார்கள். ஆகவே அறிவுப் பழக்கம், சமூகக் கட்டுப்பாடு, பொது வாழ்வு ஆதிக்கம் ஆகிய காரியங்களிலும் மேன்மையான வாழ்க்கைநிலை உயர்விலும் பார்ப்பனர்களே முன்னிற்கிறார்கள். ...இனியும் சுமார் 25 வருஷத்துக்கு வெறும் தமிழும் ஆங்கிலமும் மாத்திரமே, கட்டாயமாய்க் கற்பிப்பது என்று வைத்துக் கொண்டாலும் இன்றுள்ள நிலை ஒரு கால் வாசியாவது மாற்றமடையும் என்று சொல்ல முடியாது. இப்படிப்பட்ட நிலையில் அதுவும் ஏதோ ஒரு வழியில் பொது உணர்ச்சி ஏற்பட்டு எல்லா மக்களும் படிக்க வேண்டும் என்றும் எல்லா

படிப்பகம்

www.padippakam.com



> மக்களுக்கும் படிப்பு சௌகரியம் ஏற்படுத்த வேண்டும் என்றும் உணர்ச்சி பரவி இருக்கிற இந்தக் காலத்தில் அதை பாழ்படுத்துவதற்குப் பாமர மக்கள் கல்வியில், மானத்தில், மனிதத்தன்மையில் வேரைப் பறித்து நெருப்பு வைப்பதற்கு ஆக இன்று பார்ப்பன ஆட்சியானது பிள்ளைகளின் சிறு பிராயத்தில் இருந்தே ஹிந்தியைப் புகுத்த வேண்டுமென்றும் அதுவும் கட்டாயமாக வைக்கப்பட்டு படிப்பிக்கப்பட வேண்டும் என்றும் நிர்பந்தப் படுத்தும்படியான ஒரு கல்விமுறையை ஏற்படுத்துவதென்றால் இதில் யோக்கியமோ நாணயமான கல்விமுறை அபிப்பிராயமோ இருக்கிறதென்று யாராவது சொல்ல முடியுமா? (குடிஅரசு, 22–8–1937)

பெரியாரைப் பொறுத்தவரை, கேசவன் கூறுவது போல, இந்தி எதிர்ப்பு என்பது கலாச்சாரப் பிரச்சனையல்ல; கலாச்சாரப் பிரச்சனையின் ஒரு கூறுதான். எனினும் அது பார்ப்பனரல்லாதாரின் (இதில் தாழ்த்தப்பட்டோரும் அடங்குவர்) வாழ்க்கைப் பிரச்சனை; தன்னுரிமைப் பிரச்சனையாகும்.

"காங்கிரசுக்கு ஒரு திட்ட வட்டமான மொழிக் கொள்கை இருந்ததைப் போல நீதிக்கட்சிக்கு எதுவும் இல்லை" என்று கோ. கேசவன் கூறுகையில், காங்கிரசின் மொழிக் கொள்கையை (அதைத் தனது நூலின் 34, 35ஆம் பக்கங்களில் குறிப்பிடுகிறார்— அதாவது உலக அளவில் ஆங்கிலம், அனைத்திந்திய அளவில் இந்துஸ்தானி, மாநில அளவில் வட்டார மொழி) நீதிக்கட்சியின் கல்விக் கொள்கையுடன் சேர்த்து குழப்பிக் கொள்கிறார்.

இப்படிப்பட்ட ஆய்வுமுறையைத்தான் கோ. கே. "ஆய்வு என்பது ஒரு பொருள் குறித்து அதுவரை கிடைக்கக் கூடிய விவரங்களைத் திரட்டி ஆய்வாளரின் கண்ணோட்டத்தின் ஊடாக சில முடிவுகட்கு / கருதுகோள்களுக்கு வந்தடைதல் ஆகும்" என வரையறுக்கிறார். நடராசன் என்பது தாளமுத்துவாக அச்சுக் கோப்பின்போது உருமாறிவிட்டது அவ்வளவு பெரிய விஷயமல்ல! ஆனால் நீதிக்கட்சி காலத்து கல்விக் கொள்கைதான் இந்தித் திணிப்புக்கு வித்திட்டது. நீதிக்கட்சி காலத்தில் ஒரு கொள்கையும் ராஜாஜி காலத்தில் ஒரு கொள்கையுமென பெரியாரிடம் இரட்டைக் கொள்கை இருந்தது என்று பக்கம் பக்கமாக விழுந்து விட்டதே மற்றொரு சிறிய அச்சுப் பிழை!

இன்னொரு "சிறிய அச்சுப் பிழை"யையும் இங்கு காண்போம்:

> "நீதிக்கட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஆந்திராப் பல்கலைக் கழகம் (The Andhra University) என்றே பெயரிடப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவர் திரு. எம். சி. இராசா அவர்கள் கொணர்ந்த ஒரு தீர்மானத்

படிப்பகம்

www.padippakam.com



தின்படி (மார்ச் 1922) பஞ்சமர், பறையர் ஆகியோரின் பெயர்கள் அரசாங்க ஆவணங்களில் மாற்றப்பட்டன. இவர்கள் தமிழ்த் தேசிய இனத்தினராக இருப்பின் ஆதி திராவிடர் என்றும் தெலுங்கர்களாக இருப்பின் ஆதி தெலுங்கர் என்றும் பெயரிடப்பட்டனர் (அரசு ஆணை எண் 817 சட்டம் (பொதுத் துறை) நாள் 25-3-1922). இங்கு தெலுங்கர்கள் திராவிடர்கள் என்ற பெயரைச் சூட்டிக்கொள்ளாமல், தெலுங்கர் என்ற தேசிய இனப்பெயரைச் சூட்டிக்கொண்டனர். ஆனால் தமிழர்கள், இனப் பெயரைச் சூட்டிக்கொண்டது இங்கு கவனிக்கத் தக்கது. தெலுங்குப் பகுதிகளில் ஆந்திரப் பல்கலைக் கழகம் என்ற பெயரில் பல்கலைக் கழகம் நிறுவ, தமிழ் பேசும் பகுதிகளில் வைக்கவிருந்த பல்கலைக் கழகத்தின் பெயர் 'தமிழ்ப் பல்கலைக் கழகம் என்றே இருந்தாக வேண்டுமென்று' நீதிக் கட்சியின் தமிழ்த் தலைவர்கள் மன்றாடினர் (குணா, தமிழின மீட்சி– ஒரு வரலாற்றுப் பார்வை, பக். 14) நீதிக் கட்சியின் தெலுங்குத் தலைவர்களிடம் திராவிடர் இன அடையாள மறுப்பும் தமிழ்த் தலைவர்களிடம் அதற்கான விருப்பும் இருந்தன என்பது தெளிவு.'' (கோ. கே. 2, ப. 6–7) அழுத்தம் என்னுடையது.)

இக் கூற்றிலுள்ள பித்தலாட்டங்களை ஒவ்வொன்றாக ஆராய்வோம். மேற்சொன்ன கூற்றிலுள்ள அரசாணை முன்னர் நாம் குறிப்பிட்ட டி. பி. கமலநாதன் என்ற தலித் நூலாசிரியரின் நூலின் 71–72 ஆம் பக்கங்களில் காணப்படுகின்றது. இந்த நூலை கோ. கேசவனும் படித்திருக்கிறார். (தாழ்த்தப்பட்டோரும் சமூக விடுதலையும் —கோகே 2, ப. 16–17.) நீதிக்கட்சி பெரும்பான்மையாக இருந்த அன்றைய சட்ட மன்றத்தில் 20–1–1922 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பரிந்துரைத்ததை ஏற்றுக் கொண்ட அரசாங்கம் விடுத்த ஆணை (எண் 817 சட்டம் (பொதுத் துறை) 25–3–1922) கூறியதாவது:

...The Covernment accordingly direct that the following terms shall in future be adopted in place af 'Panchama' or 'Paraya' or similar terms in all official documents: 'Adi–Dravida' in the Tamil, 'Adi-Anthra in the Telugu districts and 'Dravida' if any member of the community prefers to be so called.

'ஆதிதிராவிடர்கள்' என்பது எல்லாத் தாழ்த்தப்பட்ட சாதிகளையும் குறிக்குமா என்ற பிரச்சனை எழுப்பப்பட்டபோது அரசாங்கம் ஒரு விளக்கம் தந்தது:

> 'Adi–Dravida means any person professing the Hindu Religion and belonging to any of the following communities, namely the Parayans, Pallans, Valluvans, Malas, Madigas, Chakkilyians, Tottiyans, Cherumans and Holeyans, or to any other community that may be prescribed.

படிப்பகம்

www.padippakam.com



அதாவது தாழ்த்தப்பட்டோர், தமிழ் மாவட்டங்களில் ஆதிதிராவிடர் என்றும் தெலுங்கு மாவட்டங்களில் ஆதிஆந்திரர் என்றும் அழைக்கப்பட வேண்டும் என்பதும் விருப்பப்பட்டவர்கள் தங்களை 'திராவிடர்கள்' என்று அழைத்துக்கொள்ளலாம் என்றும் அரசாங்க ஆணை கூறியது. அரசாங்கம் தந்த விளக்கம், மாலா, மடிகா, சக்கிலியர் ஆகிய தெலுங்கு பேசும் தாழ்த்தப்பட்ட சாதியினர், செருமான் என்ற மலையாளம் பேசும் தாழ்த்தப்பட்ட சாதியினர், ஹோலையர் என்ற கன்னடம் பேசும் தாழ்த்தப்பட்ட சாதியினர் ஆகியோருக்கும் 'ஆதி திராவிடர்' என்ற சொல் பொருந்தும் என்று கூறியது. ('தேசிய இனங்கள்' என்ற கருத்தாக்கமே அன்று நிலவவில்லை.) எனவே,

1. தாழ்த்தப்பட்டோருக்கான குறிப்புச்சொல் குறித்த அரசாங்க ஆணையொன்றைச் சுட்டிக் காட்டி ஏதோ அது தமிழ்ச்சாதியினர் அனைவருடனும், தெலுங்கு சாதியினர் அனைவருடனும் தொடர்புடையது போலவும், இங்குள்ள தமிழ்ச் சாதியினர் அனைவரும் இனப் பெயரைச் சூட்டிக்கொள்ள, தெலுங்கு சாதியினர் அனைவரும் தேசிய இனப் பெயரைச் சூட்டிக் கொண்டது போலவும் அதற்குக் காரணம் நீதிக் கட்சியிலிருந்த தமிழ்த் தலைவர்களுக்குத் தமிழ்த் தேசிய இன அடையாளத்தை விட திராவிட மரபின அடையாளமே முக்கியமானதாக இருந்தது போலவும் ஒரு எண்ணத்தை உருவாக்கி, அந்த எண்ணம் வலுப்படும்படியாக குணாவின் நூலொன்றிலிருந்து தனது கூற்றையே மறுதலிக்கக்கூடிய மேற்கோள் காட்டும் வினோதத்தை நிகழ்த்தியுள்ளார் கோ. கே.

2. இத்தகைய பரிதாபகரமான முயற்சியில் வெற்றி பெறும் நோக்கத்துடன் அரசாணையில் உள்ள 'ஆதி ஆந்திரர்' என்பதை 'ஆதி தெலுங்கர்' என்று மாற்றி ஒரு புதிய ஆணையைப் பிறப்பித்து விடுகிறார்.

3. இதை அவர் நடராசன் - தாளமுத்து போன்ற அச்சுப் பிழை என்று கூறி தப்பித்துக்கொள்ள முடியாது. காரணம் இங்கு அவர் ஒரு வாதத்தையே எழுப்பியிருக்கிறார். அதுமட்டுமல்ல. அந்த அரசாணையை தனது மற்றொரு நூலில் ஏறத்தாழ சரியாகவே குறிப்பிட்டிருக்கிறார்:

> தென்னிந்தியாவில் வாழும் பண்டைய திராவிட இனத்தைப் பஞ்சமர் அல்லது பறையர் என அழைப்பதற்குப் பதில் தமிழ் மாவட்டங்களில் ஆதி திராவிடர் எனறும் தெலுங்கு மாவட்டங்களில் ஆதி ஆந்திரர் என்றும் இனிமேல் அழைக்க வேண்டும். (கோ. கே. 3, ப. 16)- அழுத்தம் என்னுடையது.

4. 'ஆந்திரர்' என்பது தெலுங்கு மொழியைக் குறிக்கும் சொல் அல்ல. அக்குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்களினத்

படிப்பகம்

www.padippakam.com



தின் பெயர். கேசவனே மற்றொரு நூலில் குறிப்பிட்டதுபோல "தாழ்த்தப்பட்ட மக்களை மொழி ரீதியாக அல்லாமல் அவர்கள் வாழும் பிரதேச ரீதியாக அரசு அடையாளப்படுத்தியதைக் காணலாம்.'' (கோ.கே. 3, ப. 17. அத்த அடையாளங்களும் கூட அரசால் வழங்கப்பட்டது என்ற கருத்துக்கு இங்கு கேசவன் வந்துவிடுகிறார்.

5. ஆந்திரப் பல்கலைக் கழகக் கோரிக்கை வருவதற்கு முன்பே 'மைசூர் பல்கலைக் கழகம்' என்ற கோரிக்கை 1913இல் வந்தது. 'ஆந்திரப் பல்கலைக் கழகம்' என்ற ஒன்று அன்றைய சென்னை மாகாணத்திலிருந்த தெலுங்கு மாவட்டங்களுக்குத் தனியாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதன் முதலில் (1916 இல்) முன் வைத்தவர் அன்று விசாகப்பட்டினம் கல்லூரியொன்றின் முதல்வராக இருந்த தமிழ்நாட்டு அறிஞர் பி. டி. சீனிவாச அய்யங்கார்தான். அதன் பிறகே தமிழ் மாவட்டங்களுக்குத் தனியாக ஒரு பல்கலைக் கழகம் வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அது தமிழ்மொழி வளர்ச்சிக்காக மட்டுமே இருக்க வேண்டுமா அல்லது தமிழ் மாவட்டங்களின் பொதுவான கல்வி வளர்ச்சிக்கு வேண்டி அனைத்துப் பாடங்களையும் கற்பிக்கும் பல்கலைக் கழகமாக இருக்க வேண்டுமா என்பன குறித்து தமிழ் மாவட்டங்களிலிருந்த பல்வேறு தரப்பினரும் பத்திரிகைகளும் கூறிய கருத்துகள், 1925, டிசம்பரில் சென்னையில் நடந்த நீதிக்கட்சி மாநாட்டில் தமிழ்மொழி, தமிழிலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக ஒரு தமிழ் பல்கலைக் கழகம் வேண்டுமென்று தீர்மானம் இயற்றப்பட்டமை, தமிழ் மாவட்டங்களுக்குத் தனிப் பல்கலைக் கழகம் அமைப்பது குறித்து ஆய்வு செய்ய நீதிக்கட்சி அரசாங்கம் 1926 மே மாதம் அமைத்த குழு பற்றிய செய்தி இவையனைத்தையும் நம்பி ஆரூரான் (இவர் ஒரு உண்மையான முனைவர்!) எழுதிய Tamil Renaissance and Dravidian Nationalism, Koodal Publishers, Madurai, 1980 என்ற நூலின் 122–139ஆம் பக்கங்களில் காணலாம். இவர் எந்த அரசியல் / இயக்கக் கருத்தியலையும் சாராதவர் 192[illegible] ஜனவரியில் திருச்சியில் நடந்த தமிழ்ப் பல்கலைக் கழகக் (கோரிக்கை) மாநாட்டில் நீதிக்கட்சி அமைச்சர் டி.என்.சிவஞானம் பிள்ளை ஆற்றிய உரையின் ஒரு பகுதியையும் மேற்சொன்ன நூலின் 12ஆம் பக்கம் காணலாம்:

"சென்னை, மாநில அரசாங்கத்தின் தலைமையிடமாக இருப்பதால், அது தொடர்ந்து எல்லாப் பகுதியிலிருந்தும் மாணவர்களைக் கவர்ந்திழுத்துக்கொண்டிருக்கும். எனவே, அங்குள்ள பல்கலைக் கழகம் கட்டாயமாக எல்லோருடனும் தொடர்பு கொண்டதாகவே (Cosmopolitan) இருக்கும். அனைத்து மொழிகளையும் சேர்ந்த எல்லா மக்களுக்கும் அது சரிசமமான கவர்ச்சிகளையும் சரிசமமான வாய்ப்புகளையும் வழங்கியாக வேண்டும்.... எனவே, தமிழர்

படிப்பகம்

www.padippakam.com



கள் தங்கள் நலன்களை முன்னிட்டு தங்களுக்கான ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவுவதுதான் நல்லது என்றும் அது ஒரு மொழியடிப் படையில், தமிழ்ப் பகுதியைத் தன் எல்லைக்குள் கொண்டு வருகிற தமிழ்ப் பல்கலைக் கழகம் என அழைக்கப்பட வேண்டும் என்றும் கூறி முடிக்கிறேன்.'' (அழுத்தம் என்னுடையது.)

1926இல் நீதிக்கட்சி தோல்வியடைந்த பிறகு ஆட்சிப் பொறுப் பினை ஏற்றுக்கொண்ட ப. சுப்பராயன் தமிழ்ப் பல்கலைக் கழகக் கோரிக்கை மீது உற்சாகம் காட்டாமலிருந்தார். எனினும் ஏற்க னவே செய்யப்பட்டு வந்த முயற்சியை அவரால் புறக்கணிக்க முடிய வில்லை. அரசாங்கத்திடம் நிதிப் பற்றாக்குறை இருந்த அக்காலகட் டத்தில் சிதம்பரத்தில் இருந்த மீனாட்சி கல்லூரியைப் பல்கலைக் கழகமாக உயர்த்தவும் அதற்கான நிதியில் பெரும் பகுதியை வழங் கவும் பிற பாடங்களுடன் தமிழில் 'ஆனர்ஸ்' பட்டப் படிப்பு உட்பட தமிழ் மொழி, இலக்கிய, இசை வளர்ச்சிக்கான பிற பாடங்களை வழங்கவும் இராஜா சர். அண்ணாமலை செட்டியார் முன்வந்தார். அதன் காரணமாக தமிழ் மாவட்டங்களுக்கான பல்கலைக் கழகம் அவரது பெயரால் தொடங்கப்படுவதற்கான அண்ணாமலைப் பல் கலைக் கழகச் சட்டம் சுப்பராயன் ஆட்சிக் காலத்தில் – நீதிக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் – நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு தமிழ் மாவட்டங்களுக்கான ஒரு தனிப் பல்கலைக் கழகம் என்னும் கோரிக்கை– தமிழ்ப் பல்கலைக் கழகம் என்று பெயரிடப்படாமல் போனாலும்கூட - நிறைவேற்றப்பட்டது. இந்த விவரங்களையும் மேற்சொன்ன நூலில் மேலே குறிப்பிட்ட பக்கங்களில் காணலாம். கேசவனின் ஞானத் தந்தை யூஜின் இர்ஷிக் எழுதியுள்ள மற்றொரு நூலான Social conflict in South India விலும் இது குறித்த தக வல்கள் உள்ளன. கேசவனைப் போன்ற ரத்தக் கலப்பில்லாத, பலி ஜாக்கள், ரெட்டிகள் போலல்லாத– அசல் தமிழர் குணாகூட நீதிக் கட்சியின் தமிழ்த் தலைவர்களுக்கு தமிழ்த் தேசிய இனப் பற்று இருந்திருக்கிறது என்பதைத்தானே கேசவன் காட்டும் மேற்கோ ளில் சொல்லியிருக்கிறார்!

இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றியும் திராவிட இயக்கத்தின் மொழிக் கொள்கை பற்றியும் நேர்மையான அணுகுமுறையோடு கேசுவனால் ஒரு நூல் எழுதப்பட்டிருக்குமானால், அதை நாம் மரி யாதையோடு மதிப்பீடு செய்யலாம். உண்மைக்குப் புறம்பான செய் திகளின் துணையோடு பெரியாரையும் பார்ப்பனரல்லாதார் இயக் கத்தையும் அவர் கொச்சைப் படுத்தியுள்ளதற்கான சான்றுகளை நான் நிறையவே தந்திருக்கிறேன். அதேபோல மறைமலை அடி கள், சோமசுந்தர பாரதியார், உமாமகேசுவரன் பிள்ளை, சுத்தா னந்த பாரதியார் ஆகியோரின் தமிழ்ப்பற்றைக் கொச்சைப்படுத்தி அவர்களை ஆங்கில ஏவல்கள் என்றழைத்திருக்கிறார். ஏகாதிபத் திய சார்பு, நிலவுடைமைச் சிந்தனை ஆகியனவற்றுக்கு உட்பட்டு

படிப்பகம்

www.padippakam.com



அதனைத் தலைமையேற்று நடத்திய சக்திகளின் கண்ணோட்டம் இருந்தது என்றும் 1935இல் ப. ஜீவானந்தம் கைது செய்யப் பட்டதை நியாயப்படுத்திய பன்னீர்செல்வம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு வகித்தார் என்றும் குறிப்பிடும் கேசவன், அன்று ஏதாவது முரணற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் இருந் ததா என்பதைப் பற்றியும் விளக்கியிருக்க வேண்டும். ப. ஜீவா னந்தம் போன்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரர்கள், வர்க்கப் போராட்ட வீரர்கள் இந்தித் திணிப்பை வரவேற்றது மட்டுமின்றி இந்தி எதிர்ப்பு போராட்டத்தை பார்ப்பன–பனியா நாளேடான 'தினமணி'யின் டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை முதலியோருடன் சேர்ந்துகொண்டு எதிர்த்ததையும் குறிப்பிட்டிருக்க வேண்டும். பெரியார் ஏகாதிபத்தியம் என்றென்றும் இங்கே இருக்க வேண்டு மென்று கருதியவரல்லர். அவருக்கு ஏகாதிபத்தியம், பார்ப்பனியம் ஆகிய இரண்டுமே எதிரிகளாயிருந்தன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலைபெற்று வந்ததும் பிரிட்டிஷ் ஆட்சியின் போது அனைத்திந்தியச் சக்தியாகத் திரட்சி பெற்றதும் பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்துடன் சமரசம் செய்துகொண்டு 1937இல் அரசாட்சியைக் கைப்பற்றியதுமான பார்ப்பனியத்தை எதிர்ப்பதற்காக, ஏகாதிபத் தியத்திடம் மோதாமல் இருப்பதை ஒரு நடைமுறைத் தந்திரமாகக் கருதினார்–ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்க்க மாசேதுங் சியாங்கே ஷேக்குடன் சேர்ந்தது போல; தனது நாட்டு மக்களைப் பாதுகாக்க ஸ்டாலின் ஹிட்லருடன் ஒப்பந்தம் செய்துகொண்டது போல.

ஆனால் பார்ப்பனியம், பணக்காரனியம் என்ற இரண்டையும் சேர்த்து ஒழிப்போம் என்று முழங்கிய ஜீவானந்தங்களும் சிங்கார வேலர்களும் 1936இல் காந்தியையும் காங்கிரஸ் தலைமையையும் ஒப்புக் கொண்ட காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் சேர்ந்தனர். சிங்காரவேலராவது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஆதரித்தார். போலீஸ் அடக்குமுறையைக் கண்டனம் செய்தார். ஆனால் 'ஜன சக்தி' ஜீவானந்தத்தின் நடைமுறை வேறுவிதமாக இருந்தது.

அன்று பார்ப்பன–பனியா மேலாண்மைக்குச் சான்றாயிருந்த சக்திகள் யாவும் தமக்கிடையே பிளவுண்டு கிடந்தன. சுபாஷ் போ சிலிருந்து ஜின்னா வரை, சோசலிஸ்டுகள் முதல் கம்யூனிஸ்டுகள் வரை, அம்பேத்கரிலிருந்து பெரியார் வரை எதிர்–மேலாண்மை என் பது கூறுபட்டுக் கிடந்தது. சமூகப் புரட்சியும் அரசியல் பொருளா தாரப் புரட்சியும் தனித்தனியாகப் பிளவுண்டு போயிருந்தன. பெரி யாரும் சுயமரியாதை இயக்கத்தினரும் ஏகாதிபத்திய ஆதரவாளர் என்று கூறுவதை விட ஏகாதிபத்தியம் பற்றிய ஒரு கோட்பாட்டு ரீதியான விளக்கம் அவர்களிடம் இருக்கவில்லை என்றே கூறலாம். சுயமரியாதை இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியில் அண்ணா போன் றவர்கள் குறிப்பிடத்தக்க ஏகாதிபத்திய எதிர்ப்புக் கட்டுரைகளை எழுதியுள்ளனர். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக நிலவி வந்த

படிப்பகம்

www.padippakam.com



பார்ப்பனியத்தை எதிர்த்து நிற்பதற்கான களத்தை ஏகாதிபத்தியம் தான் உருவாக்கித் தந்தது என்பது வரலாற்று முரண்களில் ஒன்று. நம் வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஊடுருவியுள்ள, அவற்றை வடிவமைத்துள்ள பார்ப்பனியம் பற்றி இந்தியாவில் வேறெந்த இயக்கமும் பேசாத அளவிற்கு சுயமரியாதை இயக்கம் பேசிற்று. அது பேசிய 'சமதர்மம்', 'பொதுவுடைமை' என்று சொல்லப்படுகின்ற பொருளாதார சமத்துவம் என்பதை உள்ளடக்கினாலும் அதைவிட விரிவானது. எனினும் பொதுவுடைமை என்று நாம் சொல்கிற மார்க்சியத்தில் அது புலமை பெறவில்லை. அந்த இயக்கத்தை அதனுடைய சட்டகத்திற்குள் வைத்தே (in its own terms) முதலில் புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும். பிறகுதான் மதிப்பீடுகள் எல்லாம்.

நான் 'மாவோயிஸ்ட்' அல்ல. அத்தகைய பெரும் தகுதிகள் என்னிடம் இல்லை. நான் 1, 2... என எத்தனையோ 'ஏஜண்ட்'! எனினும் ''விவரங்களிலிருந்து உண்மையைத் தேடுதல்'' என்ற மாவோவின் நெறியை மதிப்பவன். சிதைக்கப்பட்ட, திரிக்கப்பட்ட விவரங்களை நேர் செய்வதிலேயே என் காலம் கழிந்து கொண்டிருக்கும் போது கேசவன் எதிர்பார்க்கும் 'சிதம்பர ரகசியத்தை' எப்போது நான் கண்டறிந்து வெளியிடுவது? அவரும் தான் பாவம் எப்போது 'ஜன்ம சாபல்யம்' அடைவது!

பெரியாரின் மொழிக் கொள்கை பிரச்சனைக்குரியது. மொழியை அவர் வெறும் தொடர்பு சாதனக் கருவி என்றே வரையறுத்தார். மொழி– செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்கான வெறும் ஊடகம் மட்டுமல்ல. மாறாக, நாம் மொழியின் மூலம்தான் சிந்திக்கிறோம். மொழியின் மூலம்தான் நாம் நம்மை மனிதர்களாக அடையாளப்படுத்திக் கொள்கிறோம். நமது சுற்றுப் புறங்களிலுள்ள சக மானுடர்களுடன் ஒரே மொழியில் பேசி, ஒரே மொழியில் கருத்துகளை, அனுபவங்களை, இலட்சியங்களை பகிர்ந்து ஒரு சமூகமாக நாம் அமைகிறோம். மொழியின் இந்தப் பரிமாணங்களையெல்லாம் முழுமையாக உணர்ந்து அவற்றை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திக் கொண்டவர் பெரியார். அதனால்தான் அவரது நடைமுறை, தமிழ்மொழியை அவரும் அவரது சுயமரியாதை இயக்கத்தினரும் கையாண்டமுறை கேலி, கிண்டல், கலக உணர்வு, புதிய கருத்தாக்கங்கள், நவீன சிந்தனை முதலியன — தமிழ் மொழியை நவீன மொழியாக்குவதற்குக் குறிப்பிடத்தக்க பங்கு வழங்கியது. இவ்வகையில் மொழி பற்றிய கருவிவாத நிலைப்பாட்டைத் தனது நடைமுறையின் மூலம் தானே கடந்துவந்தவர் அவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் (1930களில்) அவரும் பிற தமிழ்த் தலைவர்களும் ஆங்கிலத்தை ஆதரித்ததற்கான நியாயமான காரணங்கள் உண்டு. பெரியார் மொழி உட்பட எல்

படிப்பகம்

www.padippakam.com



லாவற்றையும் பார்ப்பனிய எதிர்ப்புக் கண்ணோட்டத்திலிருந்து அணுகியவர்; ஆங்கில மொழி அறிவுக்கும், பார்ப்பன அதிகாரத் துக்குமிடையே உள்ள உறவை நன்கு புரிந்து கொண்டவர். தமிழ் இலக்கியம், மொழியுணர்வு என்ற பெயரால் உதிர்த்துவந்த வெற்றுச் சொற் ஜாலங்களையும் நவீனத்துவ முறைக்கு ஒத்துவராத கருத்து களையும் வெறுத்தவர். 'தாய்ப்பால் வைத்தியம்' என அவர் கூறியது தமிழ் மக்களின் முன்னேற்றம் நவீன அறிவிலும், அறிவியலிலும் அவர்களுக்குத் தேர்ச்சி, பகுத்தறிவுக் கண்ணோட்டம் என்பனவற் றில் அக்கறை இல்லாத மொழியார்வலர்களுக்கான மிகு தீவிரமான எதிர்வினையாகவும், ஆங்கில அறிவைத் தங்கள் முற்றுரிமையாக்கி அதன்மூலம் அதிகாரம் பெறும் பார்ப்பனர்கள் உள்நோக்கத்தோடு தாய் தொழியை ஊக்குவிப்பதை அம்பலப்படுத்தும் முயற்சியாகவும் இருந்தது. வெற்றுத் தமிழ் முழக்கங்களுக்கான மிகு தீவிர எதிர்ப் பாகவும் பெரியார் வீட்டு மொழி, நாட்டு மொழி எல்லாமே ஆங்கி லம் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறவர்.

எல்லா மொழிகளுமே பிற்போக்கான, முற்போக்கான கூறு களைக் கொண்டுள்ளன. ஏனெனில் மொழி என்பது சிந்தனை யின் உடனடியான வெளிப்பாடு. அது வர்க்கப் போராட்டத்திற் கான, சாதி எதிர்ப்புப் போராட்டத்திற்கான களம். (இதை பெரி யாரும் உணர்ந்துதான் இருந்தார்.) ஆங்கிலத்தையும்கூடப் பிற் போக்கான சிந்தனைகளுக்குப் பயன்படுத்த முடியும். (இந்து நாளேடு போதாதா?) தமது வாழ்வின் முன்னேற்றத்தில் பார்ப் பனர்களைவிட, உலகின் பிற பகுதியினரை விட, தமிழர்கள் (சூத் திரர்களும் தலித்துகளும்) பின் தங்கிவிடக்கூடாது, அதிகாரத்தைக் கைப்பற்றுவதைக் கைவிட்டுவிடக் கூடாது என்ற ஆதங்கத்தில் அவர் ஆங்கிலத்தை வலியுறுத்தியிருக்கிறார். சூத்திரர்களும் தலித் துகளும் விழிப்புணர்வு பெறுவதில் ஆங்கில மொழியும் அம்மொழி யினூடாகக் கிடைத்த கருத்துகளும் பயன்பட்டிருக்கின்றன என் பதைப் பெரியார் கருத்தில் கொண்டிருந்தார். பார்ப்பனர்களின் ஆதிக்கத்தையும், பார்ப்பனிய ஆதிக்கத்தையும் எதிர்ப்பதற்கு எந்த வொரு கருவியையும் பயன்படுத்திக்கொள்வது அவரது வழக்கம். இந்தி எதிர்ப்பு என்பது அத்தகையதொரு கருவி. என்னதான் ஆங்கிலத்தை ஆதரித்திருந்தாலும் அவர் பேசியது, எழுதியது, சிந் தித்தது எல்லாமே தமிழில்தான். வேறுவிதமாக இருந்திருக்க முடியாது. தமிழ்நாட்டில் தமிழ் மொழிக்கும் பார்ப்பனரல்லாத தமிழாசிரியர்களுக்கும் சமுதாயத்தில் மதிப்பு வந்திருக்கிறதென் றால் பெரியாரின் இயக்கத்திற்கு அதில் பெரும் பங்கிருந்திருக்கிறது.

பெரியாரின் 'ஆங்கில மொழி ஆதரவை' — ஒரு கோட்பாடு என்ற வகையில் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. அவரது மொழிக் கொள்கையும்கூட பார்ப்பன எதிர்ப்புக் கருத்திய லின் ( ideology ) ஒரு பகுதியே. இன்றைய நமது கடமை

படிப்பகம்

www.padippakam.com



அதிலுள்ள உண்மைகளைச் செறித்துக் கொள்வதும், பார்ப்பனியம், சாதிய ஆதிக்கம், வர்க்க ஒடுக்குமுறை, ஆணாதிக்கம் ஆகியவற்றுக்கான எதிர்ப்பில் தமிழ் மொழியை வளர்ப்பதும்தான்; நமது மொழியை, சிந்தனையை போராட்டக் களமாக்குவதுதான் எனினும் ஆங்கிலத்தைத் தவிர்த்துவிட முடியாது. ஒரு மொழியாக அதனைக் கற்றுக் கொள்ளுதல், இன்றைய உலகில் இன்றியமையாதது. ஒருமொழிக் கொள்கையினர் இதைச் சிந்திக்க வேண்டும்.

ஏதோ பெரியாரின் மொழிக் கொள்கைதான் தமிழரின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று காட்டுவதும், அவரது ஆங்கில ஆதரவைக் காட்டி அவரைத் தமிழர் விரோதி எனக் காட்டுவதும் அந்தப் பெரியாரின் தன்னலமற்ற வாழ்க்கைக்குக் களங்கம் கற்பிக்கும் முயற்சிதான். ஸ்டாலின் மொழிக் கொள்கை அன்றைய சோவியத் யூனியனிலிருந்த பல தேசிய இன மொழிகளை அழித்தது போல, பெரியாரின், திராவிட இயக்கத்தினரின் மொழிக் கொள்கை தமிழை அழிக்கவில்லை. பெரியாரின் பேச்சில்தான் கனல் இருக்கும், மற்றபடி அவர் கனிவானவர். கருணை மிகுந்தவர். அவரது கையில் சர்வாதிகாரம் இருந்திருந்தாலும் நிச்சயமாக அவர் பார்ப்பனர்களைக்கூட அழித்திருக்கமாட்டார். ஆராய்ச்சி அறிஞர்கள், ஆய்வாளர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்களின் யோக்கியப் பொறுப்பு சந்தேகப்படும்படியாக இருக்கும் போது பெரியாரை நாம் ஏன் குற்றம் சொல்ல வேண்டும்...

'பரிமாணம்' அக்டோபர் – டிசம்பர் 1985 இதழில் நான் எழுதியவற்றிலிருந்து ஒரு பகுதியை மேற்கோள் காட்டி என்னை மடக்கப் பார்க்கிறார் கேசவன். அப்பகுதி தி. மு. க.வைக் குறிக்கிறது என்பதை எந்தவொரு வாசகரும் புரிந்துகொள்வார். இந்திய 'மார்க்சியத்'தின் தாக்கத்தின் கீழ் 1990 இறுதிவரை கட்டுண்டு கிடந்த எனது அத்தகைய எதிர்மறைப் பார்வை இப்போது என்னிடம் இல்லை. ஆனால் பெரியார் மீது எத்தனை வசைமாரியைப் பொழிந்திருக்கிறார் கேசவன்! சுயமரியாதை இயக்க முன்னணித் தலைவர்களிலொருவராக இருந்த எஸ். ராமநாதன் காங்கிரசில் சேர்வதற்கு முன் பெரியாரைப் பற்றிக் கூறியதாக சிலவற்றைக் கேசவன் குறிப்பிடுகிறார்:

> பெரியார் ஒருபுறம் புரட்சி வீரராகவும் இன்னொரு புறம் படுமோசமான பிற்போக்காளராகவும் காணப்படுவார். அதாவது வார்த்தையளவில் புரட்சியாளராகவும் செயலளவில் படு மோசமான பிற்போக்காளராகவும் இருப்பார். எல்லோரையும் திருப்தி செய்ய நினைக்கும் பெரியார், மக்களின் அறியாமையையும் அவர்களின் ஞாபக மறதியையும் பயன்படுத்திக் கொள்ளக் கூடியவர். (கோகே 1, 227)

இதைப் பற்றித் தனது சொந்தக் கருத்தைக் கூறுகிறார் கோ. கே.

படிப்பகம்

www.padippakam.com



"இராமநாதனின் விமரிசனம் உண்மையான விவரங்களைக் கொண்டிருப்பினும் காலம் கடந்ததாகும்; சுய நேர்மையற்ற தாகும்." (கோ.கே. 1, 227)

சுய நேர்மை யாரிடம் இல்லை என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு மாவோயிஸ்ட், காந்தியை ஏகாதிபத்திய தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ ஆதரவாளர் என்று வர்ணித்துக் கொண்டே 'அண்ணல் மகாத்மா காந்தியடிகள்' என்று அழைப்பது போலத்தான், எஸ். ராமநாதனின் விமர்சனம் என்ற வடிவத்தில் பெரியாரை இத்தனை கேவலமாகக் கருதும் ஒருவர் அவரை 'ஈ. வெ. ராம்சாமி நாயக்கர்' என்றழைக்காமல் பெரியார் என்றழைப்பதாகும்.

கேசவனைப் பொறுத்தவரை வைக்கம் போராட்டம், ரயில்வேத் தொழிலாளர் போராட்டம் ஆகியவற்றில் பெரியார் வகித்த பங்கும் கூட "ஒரு விசயத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அதன் மூல மாகத் தன் நிலையை உயர்த்திக்கொள்ளும் பண்பு"தான் (கோகே 1, ப. 140) பெரியாரின் மிராசுதார் எதிர்ப்பிலிருந்து வருணாச்சி ரம எதிர்ப்பு வரை எல்லாமே போலியானவை. (ப. 244-245)

திருத்துறைப்பூண்டியில் ப.ஜீவானந்தத்தை மறுத்துப் பெரியார் பேசியவற்றில் ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கூறிய பின் பொழி கின்றாரே ஒரு வசைமாரி:

> பெரியாரின் இந்தப் பார்வை அமைப்பியல் அராஜகப் போக்கு ஆகும். இயக்கத்தின் கொள்கைகளை மறுத்துக் கட்சி சேர்ப் பவர்களையும் இயக்கத்தில் பெருமைப் படுத்துதல் அராஜகப் பட்ட நிலையாகும். பணக்காரனிடமும் ஜமீன்தாரிடமிருந் தும் பணம் பெற்றுக் கொண்டு பணக்காரத் தன்மையும் ஜமீன் முறையையும் எதிர்த்து சமதர்மப் பிரசாரம் செய்வது சந்தர்ப்ப வாதத் தன்மை மட்டுமின்றி பிழைப்புவாதத் தன்மையுமாகும். சமதர்மத்தையும் சமய ஒழிப்பையும் உரத்த குரலில் முழங் கிக் கொண்டு முதலாளிகளையும் ஆத்திகர்களையும் சட்ட மன்றத்துக்குக் கொண்டு செல்லும் பல்லக்குத் தூக்கிகளாக இருப்பதை நியாயப்படுத்துதல் பொதுமக்களை ஏமாற்றுதலாகும். கோ.கே. 1, 205)

பாவம் பெரியார்!

மாவோ தனது இறுதிக் காலத்தில் தன்னை A lonely Monk with a leaky umbrella என்று வர்ணித்தாராம். அது ஒரு உருவகம். பெரியாருக்கும் அத்தகைய உருவகம் பொருந்தும். அவருக்கு வேறொன்றும் இருந்தது – A leaky Urinary Track. வலி தாங்காமல் பேச்சுக்களிடையே அவர் 'அம்மா' என்று அலறு வதுண்டு.......

www.padippakam.com

## ஜீவராம் சுந்தரின் இரு கவிதைகள்

என் அறை மின்விசிறி அழகானது
என் விரல்முனை ஆணைக்குக்
கட்டுப்பட்டு சுற்றிக் கொண்டிருக்கிறது
சுழலும் வேகத்தில்
இறக்கைகளின் எண்ணிக்கை
மூன்றல்ல ஒன்றுதானென்ற
பிரமை தருகிறது
பார்த்துக் கொண்டிருந்த நான்
மின் விசிறியானேன்
காற்றை அனுப்பிக் கொடுத்தேன்
படுத்திருந்த மின் விசிறிக்கு
அதன் குறட்டை ஒலி எரிச்சலூட்ட
சுழன்று சுழன்று சுழன்று
வெளியே வேகமாய்
விசிறியடிக்கப்பட்டேன்
மின் விசிறி அதன் இடத்தில்
சுற்றிக் கொண்டிருக்கிறது.

எப்போதாவது வரும் நண்பன்
இப்போதும் வந்துவிட்டான்
திரைச்சீலை ஆடுவதிலிருந்து
காற்றை உணரமுடிகிறது என்றான்
ஒளிக்கற்றைகள் விழமுடியாத
பிரதேசத்தில் வசிக்கிறாய்
வெளிச்சத்தின் முக்கியத்துவத்தை
உணரவில்லை நீ
எனக் குற்றஞ் சாட்டினான்
கவிதை எழுத முயலாதே
காற்றைப் படி என்று
அவன் கிழித்தெறிந்த
என் கவிதைத் தாள்கள்
காற்றில் அசைந்தசைந்து
வெளியில் கலக்கின்றன
நண்பனில்லாத நான்
கவிதைகளோடு
வசித்துக்கொண்டிருக்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

## வரப்போகிறவளுக்கு...

அம்மா வகையில் சிலர்
அப்பா வகையில் சிலர்
இன்னும் எவருமற்ற உறவிலான
நட்பு வகையில் சிலரென
வகை வகையாய் வருகின்றனர்
எனினும் பிரியமில்லை எதுமீதும்!
இவர்களின் எந்த முக ஜாடையில்
நீ இருப்பாயென மனசு யோசிக்கும்.
சாந்தியைப் போல உயரமாகவா
வேணியைப் போல குட்டையாகவா
சித்ராவைப் போல நோஞ்சானாகவா
எப்போதும் முறைப்பாய் இருக்கும்
காஞ்சனாவைப் போலவா?
இவர்களில் எதுவுமில்லாமல்
தெருவில் பார்க்கிற
யாரோ ஒரு முகம் போலவா?
நீ யாரெனத் தேடி
நீ யாரெனத் தவிப்பாகி
யோசித்து போய்க்கொண்டிருந்தேன்
பௌர்ணமி நிலாவின்
வெளிச்சத்தில் நனைந்தவாறு...
எது மாதிரியாகவோ
இருக்கத்தான் போகிறாய்
நீ வந்த பின்
அம்மா அவளுக்குப் பிடித்த மாதிரியும்
தம்பி அவனுக்குப் பிடித்த மாதிரியும்
ஊர் அவர்களுக்குப் பிடித்த மாதிரியும்
நான் எனக்குப் பிடித்த மாதிரியும்
உன் முகத்தை மாற்றிக் கொள்வோம்
எங்களுக்கு சவுகரியமாய்—
பாவம் நீ சொந்தமுகம் தொலைத்து
இருப்பாய் என் வீட்டில்
எனக்கு மனைவியாய்!

**க. அம்சப்ரியா**

படிப்பகம்

www.padippakam.com

தொடர்: 7

# நானும் நாடகமும்

## ஜெயந்தன்

— சென்றமுறை நாம் பேசிக்கொண்டிருந்த போது கடைசிக் கட்டத்தில் நான் என்ன சொன்னேன் என்பது ஞாபகமிருக்கிறதா?

— ம்... இருக்கிறது. நாடகம் தவிர்த்த மற்ற வடிவங்களில் உங்கள் செயற்பாடு நாடகம்போல் இயல்பானதல்ல. அவையெல்லாம் முரட்டுத்தனமான முயற்சி; உழைப்பு என்றீர்கள்.

— அந்தக் கருத்தை உறுதிப்படுத்துவதற்கு இன்னுமொரு நல்ல உதாரணம்கூட இருக்கிறது.

நீண்ட கட்டுரைகளை நான் எழுத நேர்ந்தபோது அதிகமான விஷயங்களை வழக்கமான கட்டுரை பாணியில் ஒழுங்குபடுத்திக் கொண்டு வருவது மிகுந்த சிரமமாகவும் சலிப்பாகவும் இருப்பது வழக்கம். ஒருமுறை 'இலக்கியச் சிந்தனை' அமைப்பிற்காக 'வாழ்வும் இலக்கியமும்' என்ற கட்டுரை தயாரிக்க, இயல்பான கட்டுரை பாணியில், ஒரு பதினைந்து நாள் கஷ்டப்பட்டும் முடியவில்லை. ஆனால் திடீரென்று ஒரு யோசனை வந்து அதை நாடக பாணியில் அதாவது வசன ரூபத்தில், அதாவது இப்போது பேசிக் கொண்டிருப்பது போல எழுதினால் என்னவென்று முயன்ற போது அதை ஒரு மூன்று நாளில் முடித்துவிட்டது மட்டுமல்ல, சொல்ல வந்த விஷயங்களை ஒன்றுவிடாமல் சொல்லவும் செய்திருந்தேன். இதைப் பற்றிப் பேசும் போது நண்பர் திருப்பூர் கிருஷ்ணன், 'இந்த பாணி ஒன்றில் தவிர, வேறு எந்த பாணியிலும் இவ்வளவு விஷயங்களை சொல்லியிருக்க முடியாது' என்று சொன்னார்.

இதே உத்தியை பின்பு சுபமங்களா நாடக விழா ஒன்றில் படித்த கட்டுரைக்காகவும் வெற்றிகரமாகப் பயன்படுத்தினேன்.

— அது என்ன கட்டுரை?

— அதன் தலைப்பு 'நாடகம் – நிகழ்வுப் போக்குகளும் எதிர்பார்ப்புகளும்.'

— அதன் பிரதி உங்களிடம் இருக்கிறதா?

— இருக்கிறது.

— முடிந்தால் எடுத்துக் கொடுங்களேன்.

— கொஞ்சம் இருங்கள். ம். இதுதான் அது. படித்துப் பாருங்கள். வேண்டாம். எழுத்து சரியாக இல்லை. நானே படித்து விடுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



— நல்லதாய்ப் போச்சு. படியுங்கள்.

— வடிவத்தை 'ஆனா'வும் 'ஆவன்னா'வும் பேசிக் கொள்வது போல் வைத்திருந்தேன். படிக்கிறேன்.

அ- நாடகம் இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தாக்குப் பிடிக்கும்? அதற்கு எதிர்காலம் உண்டா? வரும் 21ஆம் நூற்றாண்டை எதிர்கொள்ளும் சக்தி அதற்கு இருக்கிறதா? அதன் ஜெட் வேகத்திற்கு முன்னால் எதிர் நீச்சல் போடுமா? அல்லது கால அமிலத்தில் கரைந்து காணாமல் போய்விடுமா?

ஆ- என்ன காரணங்களை வைத்து நீ இந்த கேள்விகளைக் கேட்கிறாய்?

அ- நிறைய காரணங்கள் சொல்ல முடியும். முக்கியமான ஒன்றைச் சொல்கிறேன். சர்வ வல்லமைமிக்க, மகத்தான சாதனைகளைப் படைத்திருக்கிற விஞ்ஞானம் உங்கள் நாடகக் கலையைப் புறக்கணித்திருக்கிறது. இன்று விஞ்ஞானம் கைகொடுக்காத எந்தத் துறை எழுந்து நடக்க முடியும்? விஞ்ஞான வெப்பத்தை உட்கொள்ளாத எந்தக் கலை உயிர் வாழ முடியும்?

ஆ- நாடகத்தை விஞ்ஞானம் எப்படி நிராகரிக்கிறது என்று சொல்.

அ- மருத்துவத்தை இன்று கத்தி எடுக்காமலேயே பைபாஸ் சர்ஜரி செய்யுமளவுக்கு முன்னேறியிருக்கிறது விஞ்ஞானம். போக்குவரத்தில் ஒலி வேகத்தை மிஞ்சும் விமானங்களை நீ பார்க்கலாம். சினிமாவில் நிறைய பணம் போட்டு முதலில் படம் பிடித்தாலும், பின்பு அந்த நடிகர்கள் இல்லாமல், டைரக்டர்கள் இல்லாமல், லைட் பாய் இல்லாமல் நூற்றுக்கணக்கான பிரதிகளை, ஏன் வேண்டுமானால் வேண்டுமளவு பிரதிகளை எடுத்துக் கொள்ள முடியும் அதன் தயாரிப்பாளர். ஒரே சமயத்தில் நாடெங்கும் நூற்றுக்கணக்கான தியேட்டர்களில் லட்சக்கணக்கான ரசிகர்களுக்குப் போட்டுக் காட்ட முடியும். ஒரு தேய்ந்து போன பிரதி மிச்சமிருந்தாலும் 35 ஆண்டுகளுக்குப் பிறகு டி.வி. ஸ்டேஷனுக்குள் தள்ளிவிட்டு 5 லட்சம் 6 லட்சம் வாங்கிவிட முடியும்.

நீ ஒரு நாள் போட்ட நாடகத்தை, அதே நடிகர்கள் இல்லாமல், அந்த விளக்குகள் இல்லாமல், திரைச்சீலை இல்லாமல், முதல் நாள் செய்த செலவு செய்யாமல் மறுநாள் யாருக்காவது போட்டுக் காட்டிவிட முடியுமா? ஒரு சினிமா, அது ரிலீஸான முதல் நாள் போகிற இடங்களுக்கு மட்டும் உங்கள் ஒரு நாடகம் போவதானால் கூட எத்தனை காலம் ஆகும் தெரியுமா?

களத்தில் விளையாடும் ஒரு விளையாட்டான கிரிக்கெட் டி.வி.க்குள் புகுந்த பிறகு நம்முடைய அடுப்படிகளுக்குள் எல்லாம் புகுந்து அட்டகாசம் செய்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால், மியூசியம் தியேட்டரில் 200 பேரோடும், நாரதகான சபா மினி ஹாலில் முப்பது பேரோடும் உட்கார்ந்து பேமே என்று முழித்துக் கொண்டிருக்கும் உன் நாடகத்தை வைத்துக் கொண்டு விஞ்ஞானம் எப்படி புறக்கணிக்கிறது என்று கேட்கிறாய் நீ.

ஆ– ஓகோ அப்படி வருகிறாயா நீ. அப்படியானால் நான் பெருமையோடு சொல்வேன். விஞ்ஞானம் நாடகத்தைப் புறக்கணிக்கவில்லை. எங்கள் நாடகம்தான் விஞ்ஞானத்தைப் புறக்கணிக்கிறது.

அ– அடடே, இது வேறா? ஒரு உதார்ணம் சொல்லேன்.

ஆ– உதாரணமாக விஞ்ஞானம் தருகிற மைக்கை -நாங்கள் நிராகரிக்கிறோம். ஏனென்றால் மைக்குகள் ஒரு Composition இல் இருக்கும் நடிகர்கள் எந்தெந்த இடத்திலிருந்து பேசுகிறார்களோ, அந்தந்த இடத்திலிருந்து புறப்பட வேண்டிய அவர்களது குரல்களை உள்வாங்கி, ஒன்றாக்கி ஓரத்தில் இருக்கும் ஒலிபெருக்கி மூலம் வெளியே கக்குகிறது. அதாவது Voice compositionஐ சாகடித்துவிடுகிறது. அதற்காகவே நாங்கள் நடிகர்கள் குரல் நேரடியாக பார்வையாளனை சென்றடையும்படி பேச அவனுக்குப் பயிற்சி கொடுக்கிறோம்,

அ– ஓகோ. உங்கள் பார்வையாளர் ஒரு 5 ஆயிரம், அல்லது 10 ஆயிரம் ஜே ஜே என்று வந்து ஒரு மைதான தியேட்டரில் உட்கார்ந்துவிட்டால் என்ன செய்வீர்களாம்?

ஆ– 5ஆயிரம் 10 ஆயிரம் பேர் முன் போட்டால் அது நாடகமல்ல. நாங்கள் அதைச் செய்ய மாட்டோம். தியேட்டரின் கருத்தாக்கங்களில் ஒன்று நெருக்கம்; நடிகர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இடையே உள்ள நெருக்கம்.

அ– இப்படி தத்துவம் பேசிக் கொண்டிருந்தால் போதுமா! வாழ வேண்டாமா?

ஆ- வாழ்ந்து கொண்டுதானே இருக்கிறது. நாடகம் போட்டுக் கொண்டுதானே இருக்கிறோம். நீயே சொன்னாயே, மியூசியம் தியேட்டரிலும் நாரத கான சபா மினி ஹாலிலும் என்று. போன வருஷம் கோடை நாடக விழாகூட நடந்ததே. ஸ்ரீராம் சிட் பண்ட் சுபமங்களா நாடக விழாகூட அமர்க்களமாகப் போகிறதே.

இதை நிரந்தரம் என்று எப்படிச் சொல்வது? நானும் பல வருஷங்களாக பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஒரு சீசனில் ஏதாவது நான்கு பேர் சேர்ந்து ஒரு நாடகம் போடுவார்கள். உடனே இதை பார்த்த ஆர்வத்தில் பின்னும் மூன்று நான்கு குழுக்கள் நான்கைந்து நாடகம் போடும். ஒரு இரண்டு வருஷம் ஓடும். அப்புறம் எல்லாரும் தூங்கப் போய்விடுவார்கள். அப்புறம் ஐந்தாறு வருஷம் கழித்து ஒரு பரபரப்பு. அப்படித்தான் இந்த 2 வருஷமாக ஒரு பரபரப்பு. இது எவ்வளவு ஓடும் என்று எப்படிச் சொல்ல முடியும்.

படிப்பகம்

www.padippakam.com


தவிர இந்தத் தடவை நீங்கள் கொஞ்சம் நீட்டிப் பேசுவதற்குக் காரணம் ஆக்ஸிஜன், குளுகோஸ் வகையறா.

ஆ– அது என்ன ஆக்ஸிஜன், குளுகோஸ்!

அ– அகாடமி, Foundations, எம்பஸீஸ், ஸ்ரீராம் சிட் பண்ட்ஸ் என்று தனியார் நன்கொடைகள்.

ஆ– இதில் என்ன தவறு?

அ– தவறு இல்லையென்றால் தவறு இல்லைதான். ஆனால் இது மாதிரி நிறுவனங்கள் எதற்குமே ஒரு சொந்த நோக்கம் உண்டு. அந்த தனிப்பட்ட நோக்கங்களோடு நீங்கள் எவ்வளவுநாள் ஒத்துப் போகமுடியும்! ஒத்துப் போகாத நிலை வரும்போது அவர்கள் ஆக்ஸிஜன் டியூபை எடுத்துவிடுவார்கள். அப்புறம் என்ன செய்வீர்கள். கிராமங்களில்கூடக் கேட்பார்கள், கட்டிக் கொடுத்த சோறும் சொல்லிக்கொடுத்த சொல்லும் எத்தனை நாள் வருமென்று.

ஆ– நாங்கள் எல்லோருமே இதை நம்பியில்லையே. பலர் சொந்தக் காசைப்போட்டு, கையை சுட்டுக்கொண்டாவது செய்கிறோமே.

அ– எவ்வளவு நாள் சுட்டுக்கொள்வீர்கள்? எவ்வளவு நாள் முடியும்?

ஆ– இல்லை. இப்போது அதிலும்கூடக் கொஞ்சம் முன்னேற்றம் தான், நாரதகான சபா மினிஹால் இலவசமாகக் கிடைத்த பிறகு.

அ– இந்த நாரத கானசபா மினிஹாலும்கூட ஒரு foundation வகையறாதான். அவர்கள் யாரோ, வேறு எதற்காகவோ கட்டிய பிரமாண்டம் அது. அவர்கள் எதனாலோ, ஏதோ மனது வைத்து தங்கள் வராண்டாவில் ஒதுங்கிக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். உடனே நீங்களும் விழுந்தடித்துக் கொண்டு ஓடிவிட்டீர்கள்— MGR மதிய உணவு போடுகிறேன் என்று சொன்னதும், இவரென்ன நம் பிள்ளைகளுக்குச் சோறு போடுவது என்று கொஞ்சம்கூட வேகப்படாமல், ஓடு ஓடு என்று பிள்ளைகள் கையில் தட்டைக் கொடுத்துவிட்ட நம் பெற்றோர்கள் மாதிரி.

நாளைக்கு ஒரு தலித் நாடகம் தயாரித்து அதில் K. A. குணசேகரனுடைய "இந்தக் கொடுமையைச் செய்தது இந்து மதம். இதைக் குழிதோண்டிப் புதைக்கணும், அவசியம் அவசியம்" என்ற பாடலும் அதில் இடம் பெற்றால் மறுவாரம் உங்களுக்கு மினிஹால் கிடைக்குமா? அப்போது எந்த முகத்தை வைத்துக் கொண்டு வெளியே வருவீர்கள்?

அ– நீ என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறாய்?

அ– நீங்கள் ஏன் பிறருடைய விருப்பு வெறுப்புகளுக்கெல்லாம் உங்களை ஒப்புக் கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறேன். போகட்டும். உங்கள் பார்வையாளர்கள் மொத்த மக்கள் தொகையில் என்ன சதவிகிதம் என்று தெரியுமா?

படிப்பகம்

www.padippakam.com



ஆ— அப்படியென்றால்?

அ— இந்நகரத்தின் மக்கள் தொகை 100 என்று வைத்துக் கொண்டால் உங்களை எத்தனை பேர் சீந்துகிறார்கள்?

ஆ— நீதான் ரொம்பத் தெரிந்த மாதிரி பேசுகிறாயே. அதையும் நீயேதான் சொல்லிவிடேன்.

அ— 0.0006 சதவிகிதம். அதாவது உங்களை சீந்தாதவர்கள் 100க்கு 99.9994.

ஆ— இது என்ன கணக்கு?

அ— சாதாரண கணக்குதான். இந்த சென்னை மாநகரத்தின் மக்கள்தொகை குறைந்தது 50 லட்சம். உங்கள் பார்வையாளர்கள் 300. நீயே ஒரு கால்குலேட்டர் எடுத்து எவ்வளவு சதவீதம் என்று பார்.

ஆ— இந்த 300 என்ன கணக்கு?

அ உங்களது 'நிரம்பி வழிந்த' நாடகம் ஒன்றில் நானே எண்ணினேன்.

ஆ— அந்த நாடகத்திற்கு 300 பேர் வந்திருக்கலாம். வேறு ஒரு நாடகத்திற்கு வேறு ஒரு 300 பேர் வந்திருக்கக் கூடாதா!

அ— இல்லை. உங்களது ஒரு சிறந்த நாடக இயக்குநரும், நாடகாசிரியருமான ஒருவரே ஒருமுறை மியூசியம் தியேட்டரில் நாடகம் பார்த்துவிட்டுத் திரும்பும்போது சொன்னார்: 'நானும் 15 வருஷமாகப் பார்க்கிறேன். வருகிற ஆடியன்ஸ் எல்லாமே அன்று பார்த்த அதே முகங்கள். கூடுதலாக 10 அல்லது 12 முகங்கள் இருக்கலாம்.''

ஆ— அப்படிச் சொன்னது யார்?

அ— தண்ணீர் தண்ணீர் புகழ் கோமல் சுவாமிநாதன்.

ஆ— யாரிடம் சொன்னார்?

அ— இன்னொரு நாடக ஆசிரியரிடம்.

ஆ— பெயர்?

அ— ஜெயந்தன்.

இன்னொரு விஷயம் தெரியுமா? இந்த 50 லட்சத்திற்கு 300 பேர் ஒப்பீட்டளவில் ஒரு தொகையே அல்ல. நாளைக்கு எவனாவது இந்த நாடகங்கள் என்பது நாட்டுக்குத் தரித்திரம். நாடகக் கொட்டைகளைக் கொளுத்து; நாடகக்காரர்களை வெட்டு என்று கட்சி ஆரம்பித்தால் இந்த 300 பேரைவிட அதிகமான பேரே அந்தக் கட்சியில் சேருவார்கள். அல்லது, தற்கொலைத் தத்துவத்தைத் தூக்கிப் பிடித்து எவனாவது இயக்கம் தொடங்கினாலும்கூட இதைவிட அதிகமான பேரே அங்கு போவார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஆ- முடிவாக நீ என்னதான் சொல்கிறாய்?

அ- ஐயா, நாடகம் என்னும் சித்திரம் எழுதத் தேவையான சுவர் பார்வையாளன். அவன் செலுத்துகிற கட்டணம்தான் நாடகத்தின் உயிர். அவனைப் பற்றிய அக்கறையும் சிந்தனையும் இல்லாத நீங்கள், மழைக் காலத்தில் பட்டம் விடுகிற ஆசாமிகள் என்று சொல்கிறேன்.

ஆ- அதற்கு நாங்கள் ஒரு திட்டம் வைத்திருக்கிறோம்.

அ- எதற்கு?

ஆ- இந்த 300ஐப் பத்தாயிரம் ஆக்குவதற்கு.

அ- பலே பலே, எப்படி?

ஆ- அது ஒரு இயக்கம்?

அ- எதுவாயிருந்தால் என்ன, விஷயத்தைச் சொல்.

ஆ- இனி நாங்கள் நாடகங்களை எங்கே போட்டாலும் எங்கே எடுத்துச் சென்றாலும், நாடகங்களை மட்டுமல்ல, நாடகங்களை குறித்த விமரிசனங்களையும், நாடகம் குறித்த அழகியல் பாடங்களையும் கூட எடுத்துச் செல்லப் போகிறோம். இதற்காக குறிப்பிட்ட நாடகக் குழுவோடு வேறு குழுவைச் சேர்ந்த சிலரும் சில நாடக ஆர்வலரும்கூடச் செல்வார்கள்.

நாடகத்திற்கு முன்போ பின்போ, இந்தக் குழுவினர் நேரடியாகப் பார்வையாளர்களை அணுகுவார்கள்.

நாடகம் என்பது என்ன; நாடகக்கலை எவ்வளவு அற்புதமான ஒன்று; நடிப்புக்கலை நுணுக்கங்கள், நடிப்புக்கலை பார்வையாளரோடும்கூட தினசரி வாழ்விலும் எப்படி சம்பந்தப்பட்டிருக்கிறது; நடிப்புத் தாகம் அவர்கள் ரத்தத்தோடே கலந்திருக்கும் அதிசயம்; ஆனால் அவர்கள் நிஜமான நடிப்பையும் நாடகத்தையும் தவறவிட்டிருக்கும் சோகம்; தவறான கலை வடிவங்கள் அவர்களுக்கு ஊட்டப்பட்டிருக்கும் துரோகம்.

முன்முற்ற மேடையென்றால் என்ன; திறந்தவெளி மேடைகள் ஏன் கைக்கொள்ளப் படுகின்றன; பாடு பொருளுக்கும் நாடக வடிவத்திற்கும் உள்ள உறவு.

தங்கள் நாடகங்களில் வாழ்க்கை தரிசனம் எப்படி வெளிப்பாடு கொண்டிருக்கிறது.

ஒரு நாடகம் குறியீட்டு உத்தியில் அமைந்திருந்தால்- குறியீடு என்றால் என்ன? குறியீடு சொல்லும் விஷயங்களை அவர்கள் புரிந்து கொள்ளும் போது உண்டாகிற ஆனந்தானுபவங்கள்.

Composition என்றால் என்ன? நடிகர்களின் குரலும் எவ்வாறு நடிக்கிறது. தேர்ச்சி பெற்ற ஒரு நடிகனின் ஒரு விரல்

படிப்பகம்

www.padippakam.com



சொடுக்கு அதன் context ஐப் பொறுத்து எப்படி பத்துப் பக்கங்கள் எழுத வேண்டிய செய்திகளைச் சொல்லிவிடுகிது.

இப்படி நூற்றுக் கணக்கான, ஆம், நூற்றுக்கணக்கான நுணுக் கங்களை, விவரங்களைத் திரும்பத் திரும்ப எடுத்துப் பேசப் போகி றோம்.

இவைகளை நாடகம் நடத்துகிறபோது சொல்வது மட்டுமல்ல, இவைகளை ஆற்ற இயலுமென்று தோன்றுகிற இடங்களுக்கு நாட கங்களை எடுத்துச் செல்ல இருக்கிறோம்.

அ– சரி, இதை யார் செய்யப் போவது?

ஆ– நாங்கள்தான்.

அ– நாங்கள் என்றால்?

ஆ– எங்கள் நாடகக் குழுக்கள், அதன் உறுப்பினர்கள், நாடக ஆர்வலர்கள். (அ சிரிக்கிறான்.) என்ன சிரிப்பு?

அ– நீங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு இயக்கம் நடத்தவா? முதலில் உங்களுக்கிடையிலுள்ள முரண்பாடுகளைத் தீர்க்கவே இன்னோர் இயக்கம் வரவேண்டுமே ஐய்யா.

ஆ– இல்லை. எங்களுக்கிடையே முரண்பாடுகள் அல்ல; சாதா ரண கருத்து வேறுபாடுகள்தாம். கருத்து வேறுபாடு ஒரு ஆரோக் கியமான நிலை. நாங்கள் உயிரோடு இருக்கிறோம் என்பதன் அடையாளம். நாங்கள் சுயசிந்தனைக்காரர்கள், வெறும் செம்மறி யாடுகள் அல்ல என்பதன் சாட்சியம்.

எங்களுக்கு ஒரு பொது நோக்கம் உண்டு; இலக்கு உண்டு· அது எங்களை இணைக்கிறது நாங்கள் ஒரே படையணி. எங்கள் குறிக்கோள் சாதனைக்காக நாங்கள் ஒன்றாகக் கைகோர்த்தே நிற்கிறோம்.

அ– இந்த இயக்கத்தை எப்போது ஆரம்பிக்கப்போகிறீர்கள்? கி.பி. இரண்டாயிரமா? இரண்டாயிரத்துப் பத்தா?

ஆ ஏன்? உடனேயேதான். இந்த வருஷமேதான்.

அ- அதற்கில்லை. போன வருஷம் ஸ்ரீராம் சிட் பண்ட்ஸ் நாடக விழா முடிந்ததுமே உட்லண்ட்ஸில் வைத்து ஒரு கூட்டம் போட்டீர் கள். நாடகக்காரர்கள் என்று ஒரு இயக்கம் ஆரம்பிப்பதாகச் சொல்லி, திரு. கோமல் தலைமையில் ஒரு adhoc கமிட்டிகூடப் போட்டீர்கள். அப்புறம் மூச்சே இல்லை. அது மாதிரி... இன் னொரு விஷயம்கூட உண்டு. சமீபத்தில் சாகித்ய அகாடமி விவ காரம் தொடர்ச்சியாக இ. பா, சா. க. எல்லாம்கூட, ஏதோ எழுத் தாளர் பேரணி அமைக்கப் போவதாகச் சொல்லி ஒரு adhoc கமிட்டி– திரு. கோமல் தலைமையில்தான்– போட்டார்கள். அது பற்றியும் 2 மாதமாக மூச்சுப் பேச்சு இல்லை. அந்த மாதிரியும்...

படிப்பகம்

www.padippakam.com



ஆ– எனக்குத் தெரியும். இதற்குப் பதில் கோமல் அவர்களிடம் தயாராக இருக்கிறது. அவரும் இங்கேதான் இருக்கிறார். இன்னும் 5 நாளைக்கும் இருப்பார். தகுந்த சந்தர்ப்பத்தில் உனக்குப் பதில் சொல்வார்.

அ– சரி, இவ்வளவு கஷ்டப்பட்டு, ஒன்று திரண்டு, மூச்சைக் கட்டி இந்த நாடகக்கலையை வளர்த்து நீங்கள் அடையப் போவதென்ன?

ஆ– முதலாவதாக ஓர் அற்புதமான கலையை அதன் பளிங்குத் தன்மையோடு அப்படியே அனுபவிக்கிறோம். இரண்டாவதாக எங்கள் எதிரிகளை அழிக்கும் ஒரு ஆயுதமாக இதைப் பயன் படுத்துகிறோம்.

அ– யார் உங்கள் எதிரிகள்?

ஆ– கலையை கற்பழிக்கிவர்கள், அதை வியாபாரம் செய்கிறவர் கள். இந்த அதிகாரம், நிறுவனம், சுரண்டல், மனிதன் முதுகில் மனிதனைத் தூக்கி வைக்கும் தத்துவங்கள் எல்லாம்தான்.

அ– இவ்வளவு பெரிய எதிரிகளுக்கு எதிராக இந்த பூஞ்சை உடம்பு நாடகமா?

ஆ– உண்மைதான். ஆனால் வேறு வழி? நீ சொன்ன விஞ்ஞா னம் வளர்த்த கலைகளெல்லாம் எங்கள் எதிரிகளின் கைக்குப் போய்விட்டன.

Accumulation of money is atrocity என்று காந்தியாரே சொன் னார். சினிமாவுக்கு முதலீடு லட்ச லட்சமாய் வேண்டும். அது போல் லாபமும் லட்சம் லட்சமாய் வேண்டும். என்ன செய்வார் கள் அவர்கள்? எதையும் செய்கிறார்கள்.

சினிமா வியாபாரிகள் கையில் என்றால், டி. வி. அரசாங்கத் தின் கையிலும், உப்பு சோப்பு விற்கும் வியாபாரிகள் (Sponsors) கையிலும். இது குருடனும் செவிடனும் சேர்ந்து கூத்துப் பார்க் கப் போன கதையாகிவிட்டது. மிச்சமிருப்பது இந்த நாடகம் மட் டும்தானே.

அ– சரி, பத்தாயிரம் ரசிகர்களைத் திரட்டிவிட்டால், அவர்களுக் குப் போட்டுக்காட்ட அவ்வளவு நாடகப் பிரதிகள் இருக்கிறதா?

ஆ– அதற்கும் ஒரு திட்டம் இருக்கிறது. 3 நிமிஷம், 10 நிமிஷம், 30 நிமிஷம் 1 மணி என்று வரக்கூடிய 100 நாடகங்களை முதலில் மூன்று நான்கு தொகுப்புகளில் வெளியிடப் போகிறோம், இவை கொஞ்சம் தரம் குறைந்தாலும் பரவாயில்லையென்று. நாடக அம் சம் உள்ள சிறுகதைகளில் இருந்துகூட தயாரிக்க இருக்கிறோம்.

அ– அப்புறம்?

ஆ– கேட்கும் நாடகங்களையும் தயாரிக்கப் போகிறோம். இவை களை குறைந்த செலவில் தயாரிக்க முடியும் என்பதோடு, நீ

படிப்பகம்

www.padippakam.com



சொன்ன விஞ்ஞானம் கொண்டு ஒலிப் பேழைகளில் வெளியிட முடியும்.

அ– கேட்கும் நாடகம் என்றால் ரேடியோ நாடகமா?

ஆ– இல்லை. இதுவரை கேட்ட ரேடியோ நாடகங்களால் இந்தச் சொல்லோடு ஒரு குணாம்சம் ஒட்டிக்கொண்டுவிட்டது. அதனால் கேட்கும் நாடகம் என்றே அழைக்க விரும்புகிறோம்.

நடிப்பின் ஒரு முக்கிய பகுதி குரல் வளம். நடிகன் உடலால் மட்டுமல்ல, குரலாலும்தான் நடிக்கிறான். ஸ்டானிஸ்லாவ்ஸ்கி வசனம் பேசுவதை, கவிதையைக் காற்றில் கரைப்பது என்று சொன்னான்.

ஷேக்ஸ்பியர், ''போர்ப் புரவிகளைப் பற்றி நாங்கள் சொன்ன மாத்திரத்தில், ஈரமண்ணில் அவை பெருமையுடன் பதிக்கும் குளம்பொலி உங்கள் காதில் விழட்டும்'' என்று சொன்னான்.

இந்த வகையில் குரல்கள் கதா பாத்திரங்களாக மாறிய நாடகங்களாக அவை இருக்கும்.

அ– அப்புறம்?

ஆ– ஒரு விஷயத்திற்காக அரசை வற்புறுத்தப் போகிறோம். நடிப்புக்கலை பற்றிய உணர்வை சிறுவயதிலிருந்தே துவக்க வேண்டும். ஆகவே அரசானது பள்ளிகளில், முன்பு நெசவு ஆசிரியர்கள், தற்போது இசையாசிரியர்களும் இருப்பதுபோல், நாடகத்திற்கென்று ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். இதன் ஆசிரியர்களாக புதுவை நாடகப் பள்ளி மற்றும் தஞ்சை, மதுரையிலிருந்து தகுதிச் சான்றிதழ்களோடு வரும் மாணவர்களை நியமிக்க வேண்டும். ஆரம்பத்தில் எல்லாப் பள்ளிகளுக்கும் இதைக் கொண்டுவர அரசு இணங்காது என்றாலும் முதலில் சில குறிப்பிட்ட எண்ணிக்கையிலாவது துவங்க வற்புறுத்தப் போகிறோம்.

— ஜெயந்தன், அப்புறம் இந்த இயக்கத்தை தொடங்கிவிட்டீர்களா?

— இல்லை.

— ஏன்?

— தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு சொல்ல வேண்டும்: யாரும் இந்தக் கருத்தைக் கண்டுகொள்ளவே இல்லை.

— நீங்களாவது ஏதாவது செய்தீர்களா?

— இதற்கு இன்னும் கொஞ்சம் நான் தலையைத் தொங்கப்போட்டுக்கொள்ள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

நூல் நலம்:

# தலித் கதைகள்

—வீ. அரசு

அண்மையில் வெளிவந்துள்ள மூன்று தலித் கதைத் தொகுதிகளைப் படித்த அநுபவத்தைப் பகிர்ந்து கொள்ள முயலுகிறேன் ஈழ எழுத்தாளர் டேனியல் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த உஞ்சை ராசன், பாப்லோ அறிவுக் குயில் ஆகியோரின் தொகுப்புகள், டேனியல் கதைகள், எகிறு, கிளுக்கி என்ற பெயர்களில் வெளிவந்துள்ளன. தலித் கலை இலக்கியத் தொடர்பான சில அடிப்படைகளை விவாதிக்க இத்தொகுதியின் கதைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

— இடதுசாரி அரசியலோடு தலித்தியம் எங்கே முரண்படுகிறது? எங்கே உறவு கொள்கிறது?

— ஆதிக்க சாதி மற்றும் வர்க்கங்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் தொடர்பாக பொய்யான ஊகங்களை உருவாக்கி வந்தது / வருகிறது. இதனை உடைத்து நொறுக்கி, தலித்திய அடையாளத்தை முன்னெடுப்பது எப்படி?

— தலித்தியம் தனது தன்னுணர்வைப் பதிவு செய்ய வேண்டியதின் அவசியமென்ன?

— தலித் ஆக்கத்திற்கான மொழி மற்றும் புனைவைக் கண்டெடுத்து வளர்க்க வேண்டியதன் தேவை என்ன?

மேற்குறிப்பிட்ட பல்வேறு கூறுகளின் அடிப்படையில் தலித்திய அழகியலைப் புரிந்துகொள்ள வேண்டியதன் அவசியம் போன்ற பல செய்திகளை விவாதிக்க இத்தொகுதிகளின் கதைகள் வாய்ப்பளிக்கின்றன.

இடதுசாரி அரசியல் இயக்கங்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை என்பது, பொருளாதார அலகுகளை அடிப்படையாகக் கொண்டது என்பதாக வரையறை செய்தன / செய்கின்றன. நிலவுடைமை அழிவோடு, தலித்திய இழிவுகளும் சரியாகிவிடும் என்று பேசுகின்றன. இத்தன்மையில் உடன்பட்டவராகவே தோழர் டேனியலையும் நாம் புரிந்து கொள்ளலாம். பண்ணைகளைப் பழி வாங்கும் கோபத்தை டேனியல் தமது கதைகளின் அடிப்படையாகக் கொண்டார். தாம் சார்ந்து நின்ற மக்களின் கோபங்களை வெளிப்படுத்த டேனியல் கண்டெடுத்த வழியாகவே அதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

டேனியல் தம் கதைகளில் பஞ்சமர்களைப் பாத்திரங்களாக வடிவமைத்தார். பஞ்சமருக்குள் ஒடுக்கப்பட்ட பஞ்சமர்களாக

படிப்பகம்

www.padippakam.com



உதிரி மக்களைப் படைத்துக் காட்டுவதிலும் இவர் அக்கறை செலுத்தினார்.

அலிகள், விலை மகளிர், அனாதைகளாக வாழும் உதிரி மக்கள், பிச்சை எடுத்து வாழும் மக்கள், சிறுதொழில் செய்து பிழைப்போர் போன்ற மக்களைத் தம் கதைகளில் ஆழமாக வெளிப்படுத்த டேனியல் முயன்றுள்ளார். இதுவரை இம்மக்கள் பற்றிய ஆக்கங்கள் என்பவை, வாசகனின் அனுதாபத்தை வேண்டி உருவாக்கப்பட்டவைகளாகவே இருக்கின்றன. அவர்களின் வறுமைகளை வர்ணிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன. டேனியல் இத்தன்மைகளில் இம்மக்களைக் காட்டவில்லை. அவர்களது வாழ்க்கையே, அவர்களது எதிரியைப் புரிந்துகொள்ள வாய்ப்பளிப்பதையும் அதனால் அவர்களுக்கு ஏற்படும் கோபத்தையும் கதைகளாக டேனியல் எழுதியுள்ளார்.

இடதுசாரி அரசியலைச் சார்ந்து இருந்த அதே நேரத்தில், தலித்திய மக்களின் தன்னுணர்வுகளை ஆழமாகக் காட்டுவதில் டேனியல் கவனமாக இருந்திருக்கிறார். சாதிய ஒடுக்குமுறைகளைப் பேசும் இடதுசாரி அரசியல், சாதியப் பண்பாட்டிலுள்ள பண்பாட்டு ஒடுக்குமுறைகளையும் ஆழமாக விதாதிக்கத் தவறியது. பண்ணையார்கள் / ஒடுக்கப்பட்ட பஞ்சமர்கள் என்ற எதிர்வுகளில் டேனியல் தமது கதைகளை உருவாக்கினார். இதன் மூலம் இடதுசாரி அரசியலில் இவர் தனித்து செயல்பட்டதைக் காணமுடிகிறது. இதனால் ஈழத்தில் கடுமையான விமரிசனத்திற்கு ஆளாக்கப்பட்டார் / ஆளாக்கப்பட்டு வருகிறார். தமிழகத்தில் டேனியல் கதைகளை மீண்டும் அச்சாக்கும் இந்தச் சூழலில் டேனியல் படைப்புகள் புதிய வாசிப்பை வேண்டி நிற்கின்றன. அதில் தலித் மக்களுக்கான அரசியல் இருப்பதைப் புரிந்து கொள்வது அவசியமாகும். இந்தத் தருணத்தில் இடதுசாரி அரசியலும் தலித்திய அரசியலும் கொள்ள வேண்டிய உறவுகள் பற்றிச் சிந்திக்க டேனியல் உதவுகிறார். விளிம்பு டிரஸ்ட் டேனியல் கதைகளைச் சரியான நேரத்தில் சரியாகவே அச்சுக்கு கொண்டு வந்திருப்பதாகக் கருத முடியும். உடல் உழைப்பைச் சுரண்டுவதோடு, அவர்கள் உடலும் ஒரு அரசியல் கருத்தாக்கமாக இருப்பதை உணருவதின் மூலம் இதனை நாம் புரிந்து கொள்ளலாம்.

டேனியல் கதைகளின் வளர்ச்சியை, தெளிவை உஞ்சைராசன் கதைகளில் நாம் பார்க்க முடியும். உஞ்சைராசன் கதைகள் உடலால், உள்ளத்தால், சுற்றுபுறச் சூழலால் பலவகையிலும் ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் தன்னுணர்வு சார்ந்த கோபத்தைக் காட்டுகின்றன. தலித் மக்கள் மீதான ஊகங்கள் எவ்வளவு பொய்யானவை என்பதை இவரது கதைகள் பேசுகின்றன. உஞ்சைராசன் கதைகள் தலித்திய அடிப்படைகளை உள்வாங்கியவைகளாக உள்ளன. இக்கதைகள் தலித் மக்களின் அடையாளத்தைக் காட்டுகின்

படிப்பகம்

www.padippakam.com



றன. அவர்கள் இதுவரை தமது அடையாளத்தை தாமே இழிவாகக் கருதிய அவலத்தை உடைப்பதில் உஞ்சைராசன் சிறப்பாகச் செயல்படுகிறார்.

பரம்பரையாகச் செய்துவரும் சடங்குகளைப் புறக்கணித்தல்; அதனால் பண்ணைகள் அதிர்ச்சி அடைதல் என்னும் நிகழ்வுகள் கதைகளில் வடிவமைக்கப்படுகின்றன. தன்னுணர்வில் பண்ணைகளுக்கு எதிராகவே தலித்திய உணர்வுகள் கட்டமைக்கப்பட்டு இருப்பதைக் கதைகள் காட்டுகின்றன.

காலம் காலமாக இருந்த இடத்தை விட்டுத் தனியாகவே வாழமுற்படுதல்; கலப்பு மணங்களால் ஏற்படும் சிக்கல்களை எதிர்கொள்ளல் போன்ற அனைத்து நிலைகளிலும் உஞ்சைராசன் கதைகள் தலித்திய தன்னிலையில் செயல்படுவதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. தமிழில் தலித்திய அழகியல் சார்ந்த புனைவுகளாகவே இக்கதைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

டேனியல் பண்ணையார்களுக்கு எதிராகப் பஞ்சமர்களைப் படைத்தார். உஞ்சைராசன் தனது வாழ்வுக்கு எதிரான அனைத்து நிலைகளுக்காகவும் போராடும் தலித் மக்களைப் படைக்கிறார். இவ்விருவருக்குமான வேறுபாடுகள், இன்றைய தலித்திய தன்னுணர்வு, அடையாளம் மற்றும் அழகியல் கூறுகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள உதவும்.

பாப்லோ அறிவுக்குயில், தலித் மக்களின் வாழ்வைப் புறநிலையில் நின்று வெளிப்படுத்துகிறார். உதிரிப் பாட்டாளியாக வாழும் தலித் அவன் உடல் உழைப்பை சுரண்டுவதில் கொள்ளும் கோபத்தை இவரது கதைகள் சொல்லுகின்றன. அவன் தலித்தாகவும் இருக்கும் கொடுமை பாப்போ படைப்புகளில் ஆழமாக வெளிப்படுகிறதா என்ற சந்தேகம் வருகிறது. ஒடுக்கப்பட்டவனாக இருக்கும் அதே நேரத்தில் தலித்தாகவும் இருப்பதில் ஏற்படும் இரட்டை அவலங்களை உணர்வது அவசியம். இதற்கான அடிப்படைகளை பாப்லோ அறிவுக்குயில் தன்னுடைய சிறு கதைகளின் அளவுக்கு குறுநாவல்களில் கொண்டிருக்கவில்லை. குறுநாவல்களின் மொழியும் இதற்கொரு காரணமாக இருக்கலாம். பாப்லோவின் 'சூரி' கதை ஒடுக்கப்பட்ட தலித்தின் பழி வாங்கும் கோபத்தைக் காட்டும் வேளையில், அவனது தற்கொலைதான் அவனது தன்மானத்தைக் காப்பதாக அமைவதை எழுதியுள்ளார். இப்புனைவு ஒரு வகையில் அனுதாபம் வேண்டி நிற்பதாக அமைந்துவிடும். வாசக அநுபவத்தின் பல பரிமாணங்கள், தலித்திய பல் நிலைகள் ஆகியவற்றைப் பாப்லோ படைப்புகள் மிகுதியாகக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அதற்கான அடிப்படைகளை இவரது கதைகள் சொல்லுகின்றன.

இத்தொகுப்புகளின் மொழி தலித்திய படைப்பின் அடிப்படைகளை எவ்வகையில் உள்வாங்கியுள்ளன எனப் புரிந்து கொள்ள உதவும்.

படிப்பகம்

www.padippakam.com



டேனியல் மொழியில் ஒரு வகையான எள்ளல் இருப்பதைக் காணலாம். இந்த எள்ளல் பஞ்சமர்களின் அகம் சார்ந்தே உள்ளது. பண்ணைகளை அதன்மூலம் பகடி செய்வதைப் பார்க்க முடிகிறது. யாழ்ப்பாணம் சார்ந்த வட்டார மொழியாகவும் அது அமைவதின் மூலம் இன்னும் ஆழமாக எள்ளல் உள்ளார்ந்து அமைந்திருக்க வாய்ப்புண்டு. தமிழகத்தைச் சேர்ந்த நம்மால் அதனோடு முழுமையாக உள்ளே செல்வது இயலாததாக இருக்கும். படைப்பாளியே கதைகளைக் கூறும் வடிவத்தில் அவை உள்ளன. இத்தன்மை பஞ்சமர்களின் அடையாளத்தைக் காட்டவும் உதவுகிறது.

உஞ்சைராசன் கதைப்புனைவு மொழி, தலித் என்ற உணர்வுத் தளத்தின் ஆழத்தைக் காட்டும் மொழியாக இருக்கிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்து ஆதிக்க சாதிக்காரர்கள், தலித் மக்களை நோக்கிப் பயன்படுத்தும் மொழியில் உள்ள அதிகாரம், வெறி, திமிர் ஆகிய அனைத்துத் தன்மைகளையும் இவரது கதைகளின் மொழி தன்னகத்தே கொண்டுள்ளது. அந்த மொழியே இவர் சொல்லவரும் உலகத்தைச் சொல்லும் விதமாக அமைந்துள்ளது.

ஒடுக்கப்பட்ட தலித்துகளின் கிளர்ச்சி சார்ந்த அனுபவங்களே கதைகளாக உருவாகியுள்ளது இத்தொகுப்பில். தலித் மக்களின் அகம் சார்ந்த அனுபவங்கள் ஊடாக இக்கதைகள் கிளர்ச்சியை முன்னெடுக்கலாம். அவை பகடிகளாக, வாய்மொழிக் கதைகளாக, படிமங்களாக வெவ்வேறு தளத்தில் வெளிப்படலாம். அவ்வகைப் புனைவு வாசக அனுபவத்தின் பல்தன்மைக்கு வாய்ப்பு அளிக்கும். இத்தன்மைகள் உஞ்சைராசன் இனி உருவாக்கும் கதைகளில் இடம் பெறச் செய்வது அவசியம்.

இடதுசாரி இயக்கம் சார்ந்த போராட்ட வடிவங்களாக தலித் படைப்புகளை உருவாக்கிய டேனியல் கதைகளையும், தலித் மக்கள் உடலால், உள்ளத்தால் அடிமைப்பட்டிருக்கும் அவலத்திற்கு எதிரான கிளர்ச்சியை முன்னெடுக்கும் உஞ்சைராசன் கதைகளையும் வாசித்த வாசக அனுபவம் பாப்லோ அறிவுக் குயிலில் பெற இயலாத நிலை உருவாகிறது.

இவரது ‘கிளுக்கி’ தொகுப்பில் இரு தன்மைகளோடு கூடிய கதைகள் உள்ளன தமிழில் உருவான அச்சுச் சந்தை காரணமாக, வெகு மக்களிடம் உருவான வாசிப்பு பழக்கம் சார்ந்து உருவாக்கப்படும் கதைமொழி உருவாவதுண்டு. இவரிடம் அவ்வகையான மொழியை குறுநாவல்களாக இத்தொகுப்பில் உள்ள ‘கிராமம் நகரம்’, ‘பொதி’ ஆகியவற்றில் காண முடிகிறது. ஒடுக்கப்பட்ட மனிதனின் அவலத்தைச் சொல்லும் ஆழம் வெளிப்படும் இக்கதைகளில் இடையிடையில் வரும் வருணனைகள், கதை நோக்கத்தையே சந்தேகம் கொள்ளச் செய்கிறது. கதைகளின் தொடக்கம், ‘மெர்குரி, இருளை மேய்ந்துவிட்டு பூச்சிகளோடு வம்படித்துக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருந்தது' (ப 9–10) போன்ற வருணனைகள் மேற்குறிப்பிட்ட அடிப்படையில் கவனத்தில் கொள்ள வேண்டியவை.

'தலித்தாக உணருதல் என்பது ஒரு தலித் படைப்பாளியிடம் அடிப்படையாக அமைதல் வேண்டும். பாப்லோ அறிவுக்குயிலின் குறுநாவல்கள் அவ்வகையில் இருப்பதாகப் படவில்லை. தலித் கொடுமைகளின் வருணனைகளே எஞ்சுகின்றன. இத்தொகுப்பில் உள்ள பிற சிறுகதைகள் வேறு நிலையில் இருப்பதைக் காணமுடிகிறது.

தலித் கதைகளான இம்மூன்று தொகுப்புகளையும் வாசித்த அனுபவத்தைப் பின் கண்டவாறு தொகுக்கலாம்.

டேனியல், அவரது கால நிகழ்வுகளோடு தமது அனுபவத்தைக் கதைகளாக எழுதினார். அவற்றில் உள்ள பாத்திரங்கள் இன்று நாம் வாசிக்கும்போது, நமது அனுபவப் பரப்பில் தலித் கொடுமைமைகளுக்கு எதிரான ஆக்கங்களாக உள்ளன. உருவாக்கப்பட்ட தேவையை மீறி இன்றைய தேவைக்கும் அதில் இடமிருக்கிறது. தலித் மக்களைச் சந்திக்கும் அனுபவம் இயல்பாகவும் அவர்களது போராட்ட கோபங்கள் வாசிப்பு அனுபவமாகவும் இருக்கிறது.

உஞ்சைராசன் கதைகள் தலித்துகளின் அடையாளம், அவர்களது குரல், அவர்களது மொழி எல்லாவற்றையும் வாசக அனுபவத்தில் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கிறது.

பாப்லா அறிவுக் குயில் கதைகள் தலித்துகளைப் பற்றி எழுதிய கதைகளாக உள்ளன. குறிப்பிட்ட ஒரு சமூகத்தைப் பற்றி எழுதுவது என்பதும், அச்சமூக வாழ்நிலை, மனித அனுபவப் பகிர்வாக எழுதுவதும் வேறுபட்டது. இதில் முதல் நிலையில் 'கிளுக்கி' தொகுப்பில் பல கதைகள் உள்ளன.

தலித்துகள் மீதான பொய்யான ஊகங்களை உடைத்தல் தலித் அழகியலைப் புரிந்து கொள்ளல், தலித் அடையாளத்தை முன்னிலைப்படுத்துதல் போன்ற பல கூறுகளில் மேற்குறிப்பிட்ட தலித் கதைகள் அமைந்துள்ளன. ●

## 'தாராமதி' ஜூலை, 1996 வெளியிட்ட ஒரு கடிதம்:

★ ஜூன்' 96 இதழில் மொழி நெடி சற்று அதிகமாகவே அடிப்படையாக என் கருத்து. ஒன்று, அன்பர் குமரிமைந்தன் கட்டுரை; மற்றது தங்கள் தலையங்கம்.

'ரோஸா லக்ஸம்பர்'கை 'ரோசா லக்சம்பர்க்' என்று எழுதினாலும் ஒரே ஒலியுடன்தான் சராசரி தமிழ் மக்கள் படிப்பார்

படிப்பகம்

www.padippakam.com



கள்' என்று கட்டுரையாளர் கூறுகிறார். இந்தக் கூற்றைப் படிக்கும்போது, ஒரு நிகழ்ச்சி கவனத்துக்கு வருகிறது.

ஒரு சமயம் கோவையிலிருந்து தாராபுரத்துக்குப் பயணம் செய்த பொழுது, உடன் இரண்டு ஆந்திரச் சகோதரர்களும் அந்த பஸ்ஸில் பயணம் செய்தனர். சூலூருக்கும் தாராபுரத்திற்கும் இடையில் ஒரு சிற்றூரில் பஸ் நின்றபோது, அவர்களுடைய பார்வை டீக்கடை முகப்பில் ஒட்டப்பட்டிருந்த ஒரு சினிமாபோஸ்டர் மீது விழுந்தது. அவர்களில் ஒருவர் என்னிடம் கேட்டார், "சார் 'பா(ச்)சமும், நே(ச்)சமும்' என்றால் என்ன அர்த்தம்?" நான் அதிர்ந்தேன். அப்படியும் உச்சரிக்க (ஒலிக்க?) முடியுமோ என்று இருந்தது எனக்கு. ஒன்று புரிந்தது. போஸ்டரைப் படித்தவர் தமிழ் கற்றிருக்கிறார். 'க, ங, ச' தெரியும். ஆகவே கற்றபடி, அவர் உச்சரிக்கமுயல்கிறார் என்பது புரிந்தது. 'ரோஸா லக்சம்பர்க்'கில் 'ஸ'வுக்கு 'இஸட்' ஒலி இயல்பாக வருகிறது. 'ரோசா லக்ஸம்பர்க்'கில் தமிழ் ரோஜாவும், லட்சமும்தான் ஒலிக்கின்றன.

'மொழி அழிவுற்றால், இனம் அழியும் என்பதாக எந்த மேல் நாட்டு அறிஞன் சொன்னானோ! இந்தப் 'பொன்மொழி(!)'யை தூய தமிழ்வாதிகள் குரங்குப் பிடியாகப் பிடித்துக்கொண்டு, மொழியைத் தூய்மை செய்துதான் தீருவோம் என்று விளக்குமாறும் கையுமாகக் கிளம்பி இருக்கிறார்கள்.

வடநாட்டில் அன்றைய பிராகிருதம்தான் ஹிந்தி முதல் பல வடநாட்டு மொழிகளாக பரிணாம வளர்ச்சி பெற்றிருக்கிறது. சமஸ்கிருதம் பொதுமக்களின் மொழியாக இருக்கவில்லை. கற்றவர்களுக்கு இடையிலும், அரண்மனைகளிலுல் மட்டுமே புழங்கப்பட்ட மொழி அது. பாரத(!) மன்னர்கள் மறைந்ததும், சமஸ்கிருதமும் வழக்கு ஒழிந்தது. இருந்தாலும், எழுதப்பட்ட இலக்கியங்களால் அம்மொழி வாழ்கிறது.

கிரேக்கமும், லத்தீனும் வழக்கழிந்த மொழிகள்தாம். ஆனால் இனங்கள் அழிந்துவிடவில்லை.

எந்த ஒரு விவகாரமும் இரு வகையான அணுகுமுறைகளைக் கொண்டது. 1. உணர்வு பூர்வமான அணுகுமுறை. 2. அறிவு பூர்வமான அணுகுமுறை. இவற்றை முறையே எமோஷனல் அப்ரோச்; லாஜிக்கல் அப்ரோச் என்று ஆங்கிலத்தில் கூறுவர்.

நம் தாய்மொழியை தூய மொழிவாதிகள் அணுகுவது உணர்வு பூர்வமாக இருக்கிறதே தவிர அறிவுபூர்வமாக இல்லை.

'பஸ்'ஸுக்குப் பேருந்து என்று பெயர் சூட்ட எங்கிருந்து இவர்கள் உரிமை பெற்றார்கள்? பஸ் என்னும் சாதனம், பயணிக்கும் வண்டி, தமிழனோ, இந்தியனோ கண்டுபிடித்தது அல்ல. 'பேருந்து' என்பது பெறாத பிள்ளைக்குப் பெயர் சூட்டுவது போன்றது.

தமிழ் எண்கள் வழக்கொழிந்துவிட்டன. (தமிழ்மொழி எழுத்துக்களைச் சீர்திருத்திய வீரமாமுனிவர் அவர்கள் தமிழ் எண்கள் மீது கை வைக்கவில்லை என்பது குறிப்பிட வேண்டியது அவசியம்)

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் எண்கள் வழக்கு ஒழிந்துவிட்டன என்பதற்காக எவரும் கதறித் துடிப்பதாக, கண்ணீர் விடுவதாக இல்லை.

பேச்சு மொழி வேறு, எழுத்து மொழி வேறு என்பதாகத்தான் மொழிகள் அனைத்துமே இருந்து வருகின்றன. காலம் செல்லச் செல்லத்தான் இவற்றிடையே இடைவெளி குறுகிவருகிறது. சங்கத் தமிழும் இன்றைய தமிழும் ஒன்றல்ல. சங்ககாலப் பாடல்களில் சில சொற்களைப் பொருள் கூறாமல் புரிந்து கொள்ள முடிகிறது. அதே சமயம் ஆங்கிலத்திலுள்ள 'ஒன்' என்ற சொல்லுக்கும் தமிழிலுள்ள 'ஒன்று' என்ற சொல்லுக்கும் உள்ள உறவையும் சிந்தித்துப் பார்ப்பது சிறப்பு. உரையாடலின் போது 'ஒன்னு' (ஒண்ணு?) என்பவன் கையில் பேனா பிடித்ததும் விரைப்பு உண்டாகி 'ஒன்று' என்று எழுதுகிறான். 'சுவரில்' என்பதை 'சுவற்றில்' என எழுதுகிறான்.

தமிழ்மொழிக்கும் ஆங்கிலமொழிக்கும் இந்த 'ஒன்று' 'ஒன்' என்னும் சொற்கள் தொடர்பு இருப்பதாக தெரிவிக்கும்போது, ஒரு ஆதி மூத்தமொழி இருந்திருக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்கிறோம். மேலும் இரண்டு, மூன்று என்பதான மற்ற எண்களையும் மாதா, பிதா, பிரதா(பிரதர்), ஸ்வஸா (சிஸ்டர்) முதலான சமஸ்க்ருதச் சொற்களை ஆங்கிலத்திற்கும் சமஸ்க்ருத மொழிக்குமுள்ள தொடர்பை உணரலாம்.

மேலும் தமிழுக்கும் வடமொழியான சமஸ்க்ருதத்துக்கும் சொற்களை அமைப்பதில் ஒரே மாதிரியான இயல்பு இருப்பதும் தெரிகிறது. மேற்கோளாக எண்ணெய், தைலம் ஆகிய சொற்களைக் கொண்டு ஆராய்ந்தால் இந்த உண்மை தெளிவுபடும். 'எள்' என்னும் சொல்லிலிருந்து எண்ணெய் பிறந்தது என்பதை அறிவோம். வடமொழியில் 'திலம்' என வழங்குகிறார்கள். 'திலம்' என்ற சொல்லிலிருந்து 'தைலம்' சொல் பிறந்துள்ளது. ஹிந்தியில் 'தேல்' என்றாகிறது.

மற்றொரு மேற்கோள்: தமிழ்நாட்டில் மணமான பெண்கள் கணவனின் உடன் பிறந்தவனை 'கொழுந்தன்' என அழைக்கிறார்கள். இச்சொல் 'கொழுநன்' என்னும் சொல்லின் திரிபு. அக்காலத்தில் கொழுநன் என்றால் கணவன் என்பது பொருள்.
"மணஅணி அணிந்த மகளிர் ஆங்கே / பிணஅணி அணிந்துதம் கொழுநரைத் தழீஇ / உடுத்த ஆடை கோடி யாக / முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்- என்ற வெற்றிவேற்கை பாடலிலிருந்து இதைத் தெரிந்துகொள்ளலாம். மேலும் பல பாடல்கள் கொழுநனைக் கணவன் என்றே குறிப்பிடுகின்றன. இதிலிருந்து நாம் புரிந்துகொள்வதென்னவெனில் கொழுந்தன் என்று சொல்லப்படும் கணவனின் சகோதரனுக்கு கணவனுக்குரிய அனைத்து உரிமைகளும் இருந்திருக்கின்றன.

இதேபோல, மைத்துனன் என்ற வடமொழிச் சொல்லும் உள்ளது. 'மைதுனம்' என்னும் சொல்லிலிருந்து மைத்துனன் என்னும் சொல் பிறந்துள்ளது. 'மைதுனம்'என்னும் சொல்லுக்கு 'உடல்உறவு' என்பது பொருள். அதாவது மைத்துனன் என்பவன் 'உடல்உறவு' உரிமை உள்ளவன் என்பது தெரிகிறது. இந்த மைத்துனன் என்ற சொல் பாமர மக்களிடம் மச்சினன் மச்சான் என்று திரிந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



இவ்விதம் ஒரே உள்ளார்ந்த பொருள் உள்ள, இணைந்த மொழிகளாகத்தான் தமிழும் சமஸ்கிருதமும் இருக்கின்றன. அனேகமாக நெடுங்கணக்கும் ஒரே மாதிரியாக உள்ளது. சொல்வதானால், தமிழ் மொழியிலிருந்துதான் சமஸ்கிருதம் அல்லது பிராகிருதம் எழுத்துகளைக் கற்றுக் கொண்டு, மேலும் சீர்திருத்திக் கொண்டிருக்கிறது.

வாரம் என்பது தமிழரின் காலக்கணக்கு. அதாவது மனிதனின் அறிவு ஏழு நாட்களுக்குள் சுற்றித் திரிந்த காலத்தில், ஏற்படுத்தப் பட்டது வாரம். அதேபோல தமிழ் மாதங்களும் தமிழரின் சொத்து தான். இந்த வார, மாதங்களின் பெயர்களில் ஒரு வடமொழி சிறப்பு எழுத்துகூட இல்லாது இருப்பது இந்த ஆய்வை மெய்ப்பிப்பதாக இருக்கிறது. தமிழர் கண்ட வாரம் உலக முழுதும் பரவியுள்ளது என்பதிலிருந்து தமிழன் இன்றைய தமிழ்நாட்டின் ஆதிகுடிமகன் அல்லன் என்பதையும் உணரலாம்.

அதாவது நடோடியாகத் திரிந்த மனிதன் உற்பத்தியில் ஈடுபட்டு வசதியாக ஓர் இடத்தில் குடி அமர்வதற்கு முன்னமேயே, சைகையாக அவனிடம் மொழி பிறந்திருக்கிறது. அந்த ஆதி மொழியிலிருந்தே உலக மொழிகள் அனைத்தும் பிறந்துள்ளன. உற்பத்தியில் ஈடுபட்ட பின்தான் மொழி பிறந்தது என்பதான எங்கெல்ஸின் கூற்று தவறான முடிவு. உற்பத்தியில் ஈடுபடாத நாடோடி மக்களிடையிலும் மொழி இருக்கிறது. மனிதனின் முதல் சொல் ‘மா’. தமிழன் சற்று அழுத்தி ‘அம்மா’ என்கிறான்.

பார்ப்பனீயம் பற்றி பொருள் புரிந்தோ, புரியாமலோ சாடுபவர்கள் ஒன்று புரிந்துகொள்ள வேண்டும். வட்டார மொழி பார்ப்பனர் அல்லாதாரிடையேதான் இருக்கின்றதே தவிர, பார்ப்பனரிடையே அவ்வளவாக வட்டார வழக்குச் சொற்கள், வட்டார உச்சரிப்புக்கள் இல்லை. வட்டார மொழியாகத் தமிழ் வழுப்படுவதற்குக் காரணம் கல்வியறிவு இன்மைதான். மக்களின் இந்த ‘நெகடிவ்’ இயல்பையே வட்டார மொழி இலக்கியங்கள் உயர்த்திக் காட்டுகின்றன. இருந்தாலும் இலக்கியம் என்பது காலத்தின் பிரதிபலிப்பு என்பதை ஏற்கும் போது வட்டார மொழி இலக்கியங்கள் ஓர் அந்தஸ்தைப் பெறுகின்றன.

தலையங்கத்தில் மொழி ஒரு கருவி என்பதாக ஆசிரியர் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. கருவியைக் கையாள்வதில்தான் சிறப்பு இருக்கிறதே தவிர கருவி மட்டுமே சிறந்ததாக ஆகிவிடாது. மொழியைவிட அதைத் திறம்படப் பயன்படுத்துபவர் உயர்ந்தவர்.

**—இக்கடிதத்திற்கான எதிர்வினைதான் ‘நெஞ்சு பொறுக்குதிலையே’ பகுதியில் ‘அருவெறுப்புகள்’ எனும் தலைப்பில் தொடரும் கடிதம் —ஆர்.**

படிப்பகம்

www.padippakam.com

## நெஞ்சு பொறுக்குதில்லையே!

### அருவெறுப்புகள்

சென்னை–19
20–7–'96.

அன்பும் மதிப்பும் மிக்க குன்றம் அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் அஞ்சலட்டை என்னையே எனக்கு அடையாயப்படுத்துவதாக இருந்தது. நன்றி. 'தாராமதி' மேலும் கனம் கொள்கிறது. கடந்த இரு இதழ்களும் நிறைவாய்ப் பூத்திருக்கின்றன.

ம. ந. ராமசாமியை ஏறக்கட்ட வேண்டிய கட்டத்தை 'தாராமதி' எட்டிவிட்டதென்றே தோன்றுகிறது. ஜூன் '93இல் 'கவிதாசரண்' இதழும் இதே காரணங்களுக்காக அவரை எதிர்கொண்டதும், பின்னர் ஒரு கட்டத்தில் அவரே, "தயவுசெய்து இனி எனக்கு இதழ் அனுப்பாதிருக்க வேண்டுகிறேன்," என்று கூறி விலகிக் கொண்டதும் நிகழ்ந்தது.

எது எப்படியாயினும் அவர்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டே விலகுகிறார்கள்; அல்லது விலக்குகிறார்கள். ஆனால் விலக்கப்படுகிறார்களா என்றால் இல்லை. ஏன்? குமரிமைந்தன் சொல்வது போல "பலரறிய வேண்டுமென்றால் பார்ப்பான் காலிலே விழு" என்னும் அருவெறுப்புக் கொள்ளும் படியான நமது அடிமனை அரிப்பினாலா?

இது சுய எள்ளல்தான். குத்திக் கிழிக்கிறதுதான். இதில் நமது ஏமாளித்தனம், கையாலாகாத்தனம், சூழ்ச்சித் திறமற்ற பாமரத்தனம் யாவும் குருதிக் கசிவை நக்கிச் சகித்துக்கொள்ளத்தான் பயன்படுகின்றன. சொற்களின் நிறமும் தரமும் என்னவாயினும் இக்கருத்தில் தாங்களும் என்னோடு உடன்படத்தான் வேண்டியிருக்கும். அல்லாமற் போனால், இந்த வயதில் நாம் மனித நேயம் என்னும் பெயரில் உதவாக்கரை வேலை செய்வதாக ஆகிவிடும்.

நடைபாதை பிள்ளையாருக்கு 'மந்திரம் சொல்கிறேன் பேர்வழி' என்று தன் வயிற்றுப்பாட்டுக்கு வழி பண்ணிக்கொண்டு, தனது பல்லிடுக்கில் தெறிக்கும் எச்சிலால் பிள்ளையாரை நீராட்டு செய்யும் 'சொல் கழண்ட' குருக்களுக்கும், ம.ந.ராமசாமிக்கும் பெரிதாக ஒரு வேறுபாடும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



'பார்ப்பன நலம்' பாதிக்கப்படுவதாக ஒரு சிறு பொறி தட்டினால் போதும், உடனே தன் எச்சில் நீராட்டு மந்திரங்களோடு களத்தில் இறங்கி விளையாடுகிறவர்தான் ம. ந. ராமசாமி. அண்மையில் இவர் தனது சிகப்புச் சட்டையைக் கழற்றிப் போட்டு விட்டதுகூட மார்க்ஸ் – ஏங்கெல்சை மறுப்பதற்கும் மேலாகத் தனது 'பாப்பாரத் தோரணை'யைப் பளிச்சென்று வெளிச்சப்படுத்தவும்தான். இவரை ஒரு 'தனியன்' என்று ஒதுக்கிவிடலாம்தான். ஆனால் இவருக்குப் பின்னே இதே குப்பையைச் சுமந்து கொண்டு, அறிவுயிரிக் கவசம் பூண்டு, எதிராளியின் வீழ்ச்சியில் குறிவைத்து, எந்தத்தோல்வியையும் இறுதி வெற்றியாக மாற்றிக்கொள்ளத்தெரிந்த ஒரு 'ராட்சச மொழி அகதி'க் கும்பல் நிற்கிறதே; இவர் அந்தக் கும்பலின் தான்தோன்றிப் பேச்சாளர்.

இந்த மொழி அகதிகள் தமிழ்மொழியை வேறெந்த தமிழனை விடவும் நேர்த்தியாகவும் நெளிவு சுளிவுகளோடும் கையாளக் கற்றவர்கள். ஆனால் எதற்காக? தமிழைச் சிறுமைப் படுத்துவதற்காக இவர்களில் நூற்றில் ஒருத்தன்கூட முற்ற முழுக்கக் கற்றறியாத வடமொழியை சிரக்கம்பம் செய்து சிலாகிப்பதற்காக.

"கிரேக்கமும் லத்தீனும் வழக்கொழிந்த மொழிகள்தாம். ஆனால் இனங்கள் அழிந்துவிடவில்லை. (அதுபோல) சமஸ்கிருதமும் வழக்கொழிந்தது," என்கிற ம. ந. ராமசாமி, கூடவே சொல்லத் துடிப்பது "ஆனால் அதன் இனமாகிய நாங்கள் அழியவில்லை," என்பதுதான்.

உலகம் முழுவதிலும் மனிதர்ளை மேல்–கீழாக வரிசைப்படுத்தலை மதமாக்கிய ஒரே மொழி சமஸ்கிருதமல்லவா. அந்தப் பார்ப்பன மதம் வழங்கும் பிராமணப் பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்கென்றே கற்பிதத்தில் கட்டமைத்துக் கொண்டதுதான் பார்ப்பன இனக்குழு சித்தாந்தம். பார்ப்பனன் வீட்டில் எவன் பிறந்தாலும் அவன் பார்ப்பனனாகக் கட்டமைக்கப்படுகிறான் என்பதைத் தவிர, இன்று அந்த இனக்குழுவுக்கான சான்றாதாரங்கள் வேறென்ன மிஞ்சியுள்ளன? இந்தக் கட்டமைத்தலுக்கு எந்தச் சாதிக்காரனும் விதிவிலக்கல்லன்.

"மக்களில் கேள்விக்கப்பாற்பட்ட மேல்நிலையை உறுதி செய்யும் செப்பம் செய்யப்பட்ட மொழிக்குரியவர்கள் நாம்" என்னும் கற்பிதமே தமிழை எதிர்கொளும் போது இவர்களை மொழி அகதிகளாக்குகிறது. பார்ப்பன நலன் பேணலை இவர்களின் வாழ்வியக்கமாக்குகிறது.

ஒரு தமிழன் நல்ல தமிழைப் படிக்க நேர்ந்தால் தன்னையறியாமல் மகிழ்வான். தனக்கு அந்தப் பயிற்சி இல்லையெனில் அதற்காக வருந்துவான். அதையே ஒரு மொழி அகதி படிக்க நேர்ந்தால் அவனுக்கு 'மொழி நெடி'தான் அடிக்கும். நெடி நாசி

படிப்பகம்

www.padippakam.com



யைத் துளைக்கும்; வயிற்றைப் புரட்டும். செரித்துப் பின்தள்ள வேண்டியதை செரியாமல் முன் தள்ளும். ம. ந. ராமசாமிக்கும் அதுதான் நேர்ந்திருக்கிறது.

தமிழைப் பேணல், கிரந்த எழுத்துகளை விலக்கல், சமஸ்கிருதக் கலப்பை மறுத்தல், அதன் தொடர்ச்சியாக சாதி, வருணம், அதிகாரம், ஒற்றைத்தேசியம், ஒற்றைக் கலாச்சாரம், ஒற்றை மொழி ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்கல் என்பனவெல்லாம் பார்ப்பன நலன்களைப் பாதிக்கும் கூறுகளாகின்றன. இவற்றில் ம.ந. ராமசாமியின் எதிர்வினைகள் அவ்வப்போது நிகழ்ந்துள்ளன.

ஒரு தமிழ்ச் சகோதரன் ரோசா லக்சம்பர்க் என்று எழுதுவதும், ஒரு ஆந்திர சகோதரன் பா(ச்)சமும் நே(ச்)சமும் என்று படிப்பதும் மொழிமீது அவனவனுக்குள்ள ஆளுமையையும் பயிற்சியையும் பொறுத்தது. அதனை ஒரு மொழிக்குறைபோலக் கிடத்தி, விவாதப் பொருளாக்குவதும் கருத்துருவாக்குவதும் சிறுபிள்ளைத்தனமான— அன்று. சிறுபிள்ளைத்தனத்தில் ரசிக்கும்படியான சில அழகுகள் இருக்கும். இது அந்த வகையன்று— சில்லறைத்தனமான ஆரியக் கூத்து.

ஒவ்வொரு மொழிக்கும் சில தற்சிறப்புகள் உண்டு. தமிழ் எழுத்தொலிகள் மூக்குத்துளைகள் அன்னக் குழாயைத் தொடும் மேலன்னத்திற்கு முன்பகுதியிலிருந்தே வெகு இயல்பாக, முயற்சியின்றி பிறப்பவை. நாப்பழக்கத்தால் முழுமைப் பெறுபவை. ழ, ள, ல, ற, ர, ண, ன, ந, எழுத்துகள் நாவைத் தொட்டும், அழுத்தியும், மடித்தும், கிடத்தியும் ஒலிக்கப் பெறுபவை. வடமொழி எழுத்தொலிகள் நாபியில் பிறப்பவை. பிரெஞ்சு போன்ற மொழிக்குரிய எழுத்தொலிகள் மூக்கில் முழுமை பெறுபவை. ஆப்பிரிக்க மொழியொலிகள் கன்னக் கதுப்பை சுருக்கியும் விரித்தும் உதடுகளின் துணையுடன் வெட்டுக்கிளிச் சத்தக் கோவையாகப் ( kickling sound ) பிறப்பவை. அவையவை அதனதன் ஒலித்திறனில் இயங்குவதுதான் அவற்றின் முழுமை.

எந்த மொழியும் சர்வதேச ஒலித்தரம் கொண்டதன்று. சான்றாக, உலகத்தின் எல்லா முடுக்குகளிலும் பயன்படுத்தப்படும் ஆங்கிலம்கூட 'ரோசா லக்சம்பர்க்'கா, 'ரோசா லுக்சம்பர்க்'கா என்பதை அறுதியிட்டுச் சொல்லும் மொழி நுணுக்கம் பெற்றுவிட்டதா என்ன? செஞ்சீனத்தின் தலை நகரை பீகிங் என்றுதான் பல பத்தாண்டுகள் அழைத்துக் கொண்டிருந்தோம். அண்மையில்தான் அதை பெய்ஜிங் என்று அழைக்கப் பழகியிருக்கிறோம். இன்னமும் இதன் சரியான உச்சரிப்பை ஒரு சீனனிடம்தான் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். அதனால் என்ன? அந்த நகரம் தொலைந்தா போயிற்று?

வங்கமொழியில் 'வ' எழுத்து இன்னமும் இல்லைதான். 'வ'

படிப்பகம்

www.padippakam.com



வெல்லாம் 'ப'தான். அந்த மொழிப் பாடலைத்தான் தேசீய கீதமாக ஒலித்தரப்படுத்தி வைத்துக் கொண்டுள்ளோம். அவ்வளவு ஏன்? இந்த நாட்டின் ஒற்றை ஆட்சிமொழியாக இருக்கத் தகுதியுள்ளதென்று பீற்றிக் கொண்டு நிற்கும் இந்தி மொழியில் நம் தொல்காப்பியத்தை தோல்காப்பியம் என்றுதான் எழுத முடிகிறது. தில்லியிலிருந்து இந்தியிலும் ஆங்கிலத்திலும் செய்தி வாசிக்கும் வடநாட்டுக்காரர்களைப் பாருங்கள்; உலகின் எந்த மொழிப் பெயரையும் ஓரளவு சரியாகவே உச்சரிப்பார்கள், தமிழ்ப் பெயர்களைத் தவிர. காரணம் இது ஒன்றுதான் அவர்களுக்கு அந்நியக் குடும்பம்.

எல்லா மொழிகளும் இப்படித்தான் அதனதன் போக்கில் முழுமை பேசுபவை. அவற்றை அதனதன் மொழி அமைதியோடு ஏற்றுக் கொள்கிறவன்தான் அவற்றுக்கு நியாயம் செய்கிறவனாவான். பைபிளைத் தமிழில் மொழியாக்கம் செய்த வெள்ளைக்காரன் அதை விவிலியம் என்றுதான் குறித்தான். ஏசு என்றும், யாகோப் என்றும், யோவான் என்றும் மொழி பெயர்த்தானே; அவன் தமிழுக்கு அவமரியாதை செய்ய அஞ்சியவன். ஆட்சியாளனாயிருந்தும் அஞ்சினான்.

ஆனால் இந்த மொழி அகதிகள்?

குறிப்பாக வடமொழியும் மற்றும் திசைமொழிகளும் தமிழில் கலப்பதைத் தவிர்க்கவியலாதபோது 'தற்சமம், தற்பவம்' என்றெல்லாம் சில வரம்புகள் வகுத்து, பிற மொழிக் கலப்பை ஒழுங்குபடுத்தினார்கள். ஆனால் இந்த மொழி அகதிகளின் தாக்குதலாலும் நெருக்குதலாலும் பெருந்தன்மேயோடு கிரந்த எழுத்துகளை உருவாக்கி அவற்றை மருந்தைப்போலப் பயன்படுத்த அனுமதித்தார்கள். ஆனால் நடந்ததென்ன? சகட்டுமேனிக்கு அவற்றைப் பயன்படுத்தவும், சமஸ்கிருதச் சொற்களை அப்படி அப்படியே இறக்குமதி செய்யவும், வழக்கிலிருந்த பல நூறு சொற்களைப் புறக்கணித்து, அவற்றுக்கு மாற்றாக சமஸ்கிருதச் சொற்களை புழக்கத்தில் விட்டும் பயிற்றிப் பழக்கிவிட்டார்கள்.

உழைப்பறியாக் கூட்டம் கல்வியையும் கருத்துருவாக்கலையும் கைப்பற்றிக் கொண்டமையால் இது சாத்தியமாயிற்று. புரந்து மகிழும் தமிழனின் பெருந்தன்மை அவனின் வீழ்ச்சிக்கான பலவீனமாக மாற்றப்பட்டுவிட்டது.

மொழி மீதான இந்த ஈனத்தாக்குதலைத் தடுத்து நிறுத்த முனையும் போதெல்லாம் இந்த மொழிஅகதிகளின் அருவெறுப்பூட்டும் மூணுமுணுப்புகளும் முகச்சுளிப்புகளும் ஒய்வொழிச்சல் இல்லாமல் தொடர்கின்றன. ம. ந. ராமசாமி அந்த முணுமுணுப்பின் அங்கம்; நீர்த்தாரைகளை சாக்கடையாக்கும் கிருமிகள் இவர்கள். பெருக்கித் தள்ளத் தள்ளப் புதிதாய்ப் பிறக்கும் கிருமிகள்.

கிரந்த எழுத்துகளை விலக்குவதென்பது தமிழை அதன் குறைந்தபட்ச அமைதிக்கு கொணரும் அடிப்படை முயற்சிதான்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழை முழுமையாக மீட்டெடுக்கத் தமிழர்கள் மெய்யாகச் செய்ய வேண்டுவது, மறக்கடிக்கப்பட்ட, மற்றும் ஒலிச் சீர்மையும் நளினமும் அற்றவை என்று சொல்லிச் சொல்லி இவர்களால் உரு வேற்றப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட பல நூறு தமிழ்ச் சொற்களை இலக்கியத்திலிருந்தும், திராவிடக் குடும்பங்களிலிருந்தும், ஒதுக்கப் பட்ட கைவினைஞர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், தச்சர், கொல்லர், குயவர், உழவர் என்று இலக்கியத்தால் புறக்கணிக்கப்பட்ட தமிழர் களிடம் இன்னும் புழக்கத்திலுள்ள பொறியியல், தொழிலியல் துறை சொற்களையும் மீட்டெடுத்து, புதுக்கி, அவற்றைப் பொதுப் புழக் கத்திற்குக் கொண்டுவருவதும், அவற்றின் புழக்கத்தை இடைவிடா மல் கண்காணிப்பதும்தான்.

"'பஸ்'ஸுக்குப் பேருந்து என்று பெயர் சூட்ட எங்கிருந்து இவர்கள் உரிமை பெற்றார்கள்?" என்று கேட்கிறார். பாண்டு, திரு திராஷ்டிரன், விதுரன் ஆகியோர் கட்டியவனுக்குப் பிறந்த பிள்ளை கள் அல்லர். கொடுத்தவனா அவர்களுக்கு பெயர் வைத்தான் என்று கேட்கலாம். அவ்வளவு நன்றாயிராது. பேருந்து என்பதற்குப் பதில் ஒரு சமஸ்கிருதப் பெயர் வைத்திருந்தால் இவருக்கு இப்ப டிக் கேட்கத் தோன்றியிராது. ஒரு காலத்தில் மிதிவண்டிக்குச் 'துவிச்சக்ர வண்டி' என்று பெயர். சமஸ்கிருதம் தெரிந்தவன் வைத்த பெயர். அப்போது பெயர் வைக்கும் உரிமை பற்றிக் கேள்வி எழவில்லை. அதையே 'ஈருருளி வண்டி' என மாற்றியதும் 'என்ன இழவு பெயர்?' என்று ஏளனமாய் முணுமுணுப்பு எழுந்தது. 'மிதி வண்டி' என்று எளிமைப்பட்டபோது கூடுமானவரை மொழி அகதி கள் அதைப் பயன்படுத்துவதில்லை. தமிழ் முண்டங்களும்தான்.

இதுபோன்ற கேள்விகள் நியாயத்துக்காகக் கேட்கப்படுவ தில்லை என்பதுதான் உள்ளுறை சிறப்பு. "தமிழ் எண்கள் வழக்கு ஒழிந்துவிட்டன என்பதற்காக எவரும் கதறித் துடிப்பதாக, கண்ணீர் விடுவதாக இல்லை," என்ற இவரின் அருவெறுக்கத்தக்க தோரணை இந்தக் கீழ்மையைத் தெள்ளெனக் காட்டும்.

மொழி ஆய்வு செய்கிறவன் நேர்மையானவனாக, மொழியின் வேர்த் தன்மை அறிந்தவனாக, சான்றாதாரங்களோடு தன் கண் டுபிடிப்புகளை நிறுவுகிறவனாக, அல்லது தான் பயன்படுத்தும் தரவுகளைப் பட்டியிலிடுகிறவனாக இருப்பான். ம. ந. ராமசாமிக்கு ஒரு புடலங்காயும் வேண்டாம். 'பசு 'மா' என்று கத்துகிறது. பாலகனும் 'மா' என்றே கத்துகிறான். ஆகவே பசு = பாலகன் என்று கண்டறிய என்ன மகத்தான அறிவும் உழைப்பும் வேண்டிக் கிடக்கிறது.

தமிழையும் சமஸ்கிருதத்தையும் ஒப்பாய்வு செய்வதாகப் பேர் பண்ணிக்கொண்டு புறம்போக்கில் மைதுனம் செய்து மகிழ்வது ஒன்றும் குருட்டாம் போக்கான நிகழ்வன்று. உதாரணமாக பாரத(!) மன்னர்களில் ஒருவனான அர்ச்சுனன் கட்டிக்கொண்டு வந்த திரௌபதியை அவனுடைய மூத்தார்கள் இருவரும் இளைய

படிப்பகம்

www.padippakam.com



கொழுந்தன்கள் இருவரும் உரிமையோடு உபயோகித்துக்கொண்ட உண்மையிலிருந்து "நாம் புரிந்துகொள்வது என்னவென்றால், 'கொழுந்தன்' என்று சொல்லப்படும் கணவனின் சகோதரனுக்கு கணவனுக்கு உரிய அனைத்து உரிமைகளும் இருக்கின்றன," என ஆதாரபூர்வமாக அவர் நிறுவுகிறாராம்.

இதை நம் கூறுகெட்ட தமிழன்கள் நகையாடி ஒதுக்கிவிட முனைந்தால், அது நிலைநாட்ட முனையும் இன்னொரு பொய்க்கு மௌனமாய் உடந்தையாகும் மடமை வந்து சேரும். அதாவது கொழுநன், கொழுந்தன் என்னும் சொற்களோடு பாரத(!) மன்னர்களின் பண்பைப் புணர்த்தி, "பார்த்தாயா, இந்தியா முழுதும் ஒரே கலாச்சாரம்– சமஸ்கிருதக் கலாச்சாரம்தான் இருந்தது, புரிகிறதா?" என நிறுவும் குல்லுகத்தனம் இதன் அடிநாதமாகிறது.

இவரைப் போன்றவர்கள் எப்பொழுதாவது சில நியாயங்களைக் கூடச் சொல்லிவிடக்கூடும். ஆனால் இவர்கள் நமக்கு அமைக்கும் மேடை நம் புதைகுழியை மூடி மறைத்திருக்கும் இழுபலகை தான் என்பதில் நாம் தெளிவாய் இருக்க வேண்டும்.

"சொல்வதானால், தமிழ்மொழியிலிருந்துதான் சமஸ்கிருதம் அல்லது பிராகிருதம் எழுத்துகளைக் கற்றுக்கொண்டு மேலும் சீர்திருத்திக் கொண்டிருக்கிறது," என்று இவர் ஏற்பது எதற்கெனில், "ஆகவே நீங்கள் சமஸ்கிருதத்தைப் புறக்கணித்தால் ஏழேழு ஜென்மங்களுக்கும் அந்தப் பாவம் உங்களைச் சும்மா விடாது," என்று சபிக்கத்தான்.

ம.ந. ராமசாமியின் அலட்டலான தோரணைகளில் மிகப் குறிப்பிடத்தக்கது, பார்ப்பனியம் பற்றி இவர் ஒருவருக்குத்தான் பத்தினித்தனமான புரிதல் இருப்பதாகப் புலம்புவது. அந்தத் தோரணையில்தான் இங்கே பார்ப்பன மொழி பற்றியும் பேசுகிறார். (மூன்றாண்டுகளுக்கு முன்பே நான், பார்ப்பனர்களுக்கு வட்டார வழக்கு ஒன்றும் கிடையாது. ஆலப்புழையில் இருப்பவனும் அரிசோனாவில் இருப்பவனும் ஒன்றுபோலத்தான் பேசுவான்" என்று எழுதியதை இவரும் படித்தவர்தான். இப்போது அந்த உண்மையை தன் கருத்துக்கு உரம் சேர்க்கப் பயன்படுத்துகிறார்.) மண்ணிலிருந்து பிரிக்க முடியாதபடி அதில் வேர் பாய்ச்சி வாழ்பவர்களிடம் தான் வட்டார வழக்கும் அது சார்ந்த கலைவடிவங்களும் தோன்றும். அவற்றில்தான் அவர்கள் இயல்பாய் வாழ்ந்திருப்பார்கள்.

மண்ணில் வேர் விடாதவர்கள் பார்ப்பனர்களும் பனியாக்களும். அவர்கள் மதத்தில் வேர் பாய்ச்சியவர்கள். ஆகவே வட்டார வழக்கொழித்தவர்கள். இது ஒரு சிறப்பம்சம் என்று கருதி விட வேண்டாம். இவர்கள் தூக்கிப் பிடிக்கும் மதமும் மொழியும் தான் இவர்களைப் பெருந் தேசியம் பேச வைக்கிறது. இவர்களின் ஒற்றைப் போக்கிலான அணுகுமுறை பல்வகை தேசிய இனக்குழுக்களின் சவக்கிடங்கைக் கட்ட முயல்வதை மறந்துவிடக்கூடாது.

படிப்பகம்

www.padippakam.com



ஆர். சண்முகசுந்தரம், புதுமைப்பித்தன் போன்றவர்கள் வட்டார வழக்கைப் பயன்படுத்தியபோது மகிழ்ந்திருந்துவிட்டு, இன்று தலித்துகள் தங்கள் மொழியில் எழுதத் தொடங்கியதும்தான் புதுச் சுரணை வந்தாற்போல வட்டார வழக்குநடை மொழியைச் சிதைக்கும் என்று கதைக்கும் செம்மொழியாளர்கள் ஒன்றைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

தமிழின் தொன்மை நூலான தொல்காப்பியம் இணையற்ற பல சிறப்புகளைக் கொண்டிருக்கலாம். ஆனால் அது பார்ப்பனியக் கருத்தாக்கத்துக்கு முற்றும் இரையாகிப் போன நூல். ஐந்திணை மாந்தர் பற்றிப் பேசும் அதே நேரத்தில் நாற்பால் பற்றியும் பேசுகிறது. மேற்பாலை ஒத்துக்கொள்கிறது. மனிதர்களை மேலோர் – கீழோர் என்று, உயர்ந்தோர் – இழிந்தோர் என்று பண்புப் பிரிவாய் இல்லாமல் படிநிலைப் பிரிவாய்ப் பாகுபடுத்துகிறது. படுத்தியதோடு நில்லாமல் ஐந்திணை அகவொழுக்கமும் அது சார்ந்த இலக்கியமும் மேலோர்க்கே உரியனவென்றும், இலக்கியத்தில் அது சொல்லும் இலக்கணப்படி உயர்ந்தோர் மட்டுமே பேசப்படக் கூடியவர் என்றும் வரையறுக்கிறது.

இதைக் கேள்விக்குள்ளாக்க, 'இது சிறுமை' என்று தெளிந்து புதிய இலக்கண நூல் எழுத, இரண்டாயிரம் ஆண்டு காலத் தமிழ்ப் போக்கை வகைப்டுத்திப் புதுப்பிக்க யாராவது முயன்றார்களா?

இன்று தலித்துகள் தங்கள் கதைகளைத் தங்கள் மொழியில் எழுதுகிறார்கள். கொல்லன், தச்சன், குயவன், வண்ணான், நாவிதன், வேடுவன், பாணன், கூத்தாடி போன்றோரையும் இழி மக்கள் என்றே தொல்காப்பியம் ஒதுக்குகிறது. இவர்கள் பற்றிய இலக்கியமும் 'மேலோர் இலக்கிய'மாகாது! பார்ப்பனர்கள் தங்கள் பார்ப்பன மொழியில் எழுதிய இலக்கியம் செந்தமிழைச் சிதைத்ததாக இன்றுவரை குரல் கொடுக்கவில்லை. தலித்துகள் தங்கள் மொழியில் எழுதும் போது மட்டும் மொழி சிதைகிறது என்றால் அது நம் சாதிய 'கேப்பமாரி'த்தனத்தைக் காட்டவில்லையா? மொழி சிதைகிறதுதான். சிதையட்டுமே. அதாவது தலித்துகள் மொழியே பின்னாளில் தரப்படுத்தப்பட்ட தமிழாய்ப் போய்விடும் என்றா இந்த அங்கலாய்ப்பு? போகட்டுமே. நமக்குத்தான் ஐயன்மார்கள், ஆங்கில மார்கள் இருக்கின்றனவே, கறந்து பருக!

மொழிச்சிதைவைப் பற்றிய கவலைக்கும் முன்னோடியான கவலை மனிதச் சிதைவைப் பற்றிய கவலை என்பதை மறந்துவிடும் போது, நாம் நாகரிகம் என்று போற்றுவது நசுங்கியவர்கள் பார்வையில் அருவெறுக்கத்தக்க அநாகரிகமாகிவிடாதா? ஒருவேளை இந்த அநாகரிகத்தை, "மொழியைவிட அதைத் திறம்படப் பயன்படுத்துபவர் உயர்ந்தவர்" என்று ம. ந. ராமசாமி நாகரிகப்படுத்திவிடக்கூடும் எனில், சாதிய மேன்மை பேணலே நமக்கான இழிவாகி விடாதா?

படிப்பகம்

www.padippakam.com



வட்டார வழக்கு சார்ந்த இலக்கிய மொழிக்கப்பால் இலக்கணப் படும் கட்டுரை மொழி தமிழில் நிராகரிக்கப்பட்டுவிடவில்லை. அந்தக் கட்டுரை மொழியையும் மறுவாசிப்புக்கும் புதுச்சிந்தனைக்குமுரிய வீரியமுள்ள மொழியாக மாற்றுச் சிந்தனையாளர்கள் வளர்த்துக்கொண்டுதான் வருகிறார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம்.

பார்ப்பன நலனை இந்த மாற்றுச் சிந்தனையாளர்கள் கேள்விக்குள்ளாக்கும் போதெல்லாம், எதிர் கொள்வதற்கான போதிய நியாயங்கள் தன் கைவசம் இல்லாவிடினும், ம. ந. ராமசாமி தன்னைக் களமிறக்கிக் கொள்வதும் தானே வலுச்சண்டைக்குப் போவதுமாகத் தன் இருப்பை பறை சாற்றிக் கொண்டிருக்கிறார்.

கஸ்தூரிரங்கன் காலத்தில் தினமணியில் நிகழ்ந்த ஆரிய – திராவிட விவாதம் கடைசியில் இவருடைய கடிதத்தோடுதான் ஒருதலைப் பட்சமாக நிறுத்தப்பட்டது. ரஜினி அரசியல் பற்றி தினமணியில் 'நிறப்பிரிகை' ரவிக்குமார் எழுதிய கட்டுரையை மிகவும் கொச்சையான புரிதலோடு 'பயங்கரவாதத்தை அவர் நியாயப்படுத்துகிறாரா?' என்று இவர்தான் கேள்வி எழுப்பினார். ஜெயமோகன் தன் தினமணி கட்டுரையில் 'மார்க்ஸ் முதல் பெரியார், அம்பேத்கர், பாஸ்வான் வரை ஒழுக்கங்கெட்ட இருட்டு வாழ்க்கைக்குரியவர்கள்; காந்தி மட்டுமே திறந்த புத்தகம்' என்று சாடியபோது, உடனடியாக மறுப்பெழுதிய எஸ். வி. ஆர். கட்டுரையைக் குறித்துக் கொண்டவர் இவர்தான. 'நண்பர் வட்டம்' இதழில் ஆரிய இளைஞன் திராவிடப் பெண்ணைக் கலவி செய்து இனக் கலப்பைத் தொடங்கிவைத்தான் என்று கதை எழுதியவர். (மணிரத்தினம்கூட இந்துப் பையன் முஸ்லீம் பெண்ணை இழுத்துக் கொண்டு ஓடியதாகத் தான் கதை பண்ணுவார். ஆணையும் பெண்ணையும் மதம் மாற்றியமைத்தால் இவர்களுக்கு அனாச்சாரமாகிவிடும். எல்லாம் நல்லெண்ணத்தோடுதான்!) 'கவிதாசரண்' இதழில் '93களில் பார்ப்பன நலன்களை வெகு மூர்க்கமாகத் தாங்கிப் பிடித்தவர்.

இதற்கெல்லாம் மேலாக, அண்மையில் 'நாலாவான்' என்னும் பெயரில் நாவல் எழுதியவர் இவர். நாலாவான் என்றால் நாலாஞ் சாதிக்காரன் — சூத்திரன், தாசிமகன், அடிமை, தொண்டூழியம் செய்கிறவன், ஈனன், வைப்பாட்டி பிள்ளை. ஒரு பொய்யான கௌரவத்தோடு அவனை 'உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவன்' என்றும் சொல்லிக் கொள்ளலாம். இப்படியொரு தலைப்பை வைக்கும் துணிச்சல் ம. ந. ராமசாமிக்கே உண்டு. இந்தத் தலைப்பை ஒரு ஔவைக் கிழவியின் பாடலிலிருந்து எடுத்தாள்கிறாராம். அவளும் அந்தக் கதையில் ஒரு பாத்திரம். அந்தப் பாட்டு:

—நாலாவான்/

மந்திரியும் ஆவான் வழிக்குத் துணையாவான்
அந்த அரசே அரசு..

படிப்பகம்

www.padippakam.com



என்று முடிகிறது. இதைப் பாடிய ஔவை எப்படிப்பட்டவள்? அவள் காலில் விழுந்து வணங்கும் அரசியை, "தீர்க்க சுமங்கலி பவ. சீக்ரம் ஏவ புத்திரப் பிராப்தி அஸ்து" என்று கூறி வாழ்த்து கிறவள். அதாவது சமஸ்கிருத வர்ணாஸ்ரம தர்மம் அறிந்து தமிழைக் கற்றவள்.

எப்படி, பார்த்தீர்களா?

'நாலாவான்' என்னும் இந்தச் சொல்லைப் பொன்னே போல் எடுத்துத் தன் நாவலின் தலைப்பாகப் பூட்டிக் கொண்ட இதே ம. ந. ராமசாமி, "மொழி அழிவுற்றால் இனம் அழியும் என்பதாக எந்த மேல் நாட்டு அறிஞன் சொன்னானோ, இந்தப் பொன் மொழி(!)யைத் தூய தமிழ்வாதிகள் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டு மொழியைத் தூய்மை செய்துதான் தீருவோம் என்று விளக்குமாறும் கையுமாகக் கிளம்பியிருக்கிறார்கள்," என்று எவ்வளவு துல்லியமாய்க் கணிக்கிறார் பாருங்கள்! தனக்கு ஒவ்வாத பொன்மொழியைச் சொன்ன மேல்நாட்டு அறிஞனைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் கிடாசிய கையோடு, தூய தமிழ்வாதிகளை விளக்குமாறும் கையுமாக அலையும் சூத்திரப் பிறவிகளாக அருவெறுத்தொதுக்க இவரைத் தவிர வேறு யாருக்குத் துணிச்சல் வரும்? உண்மையில் மொழியைத் தூய்மை செய்வதற்கு முன்பாக எந்த ஈனப் பிறவியைக் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டு, விளக்குமாறும் கையுமாக விளாசித் தள்ளவேண்டும் என்னும் சுரணையற்ற தமிழ்வாதிகளை வேறு என்ன சொல்லித்தான் துப்ப முடியும்?

'நாலாவான்' நாவலை நர்மதா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. நர்மதா ராமலிங்கம் ஒரு வெள்ளாளராக அறியப்படுகிறவர். நாலாவான் நூலில் மூன்று இடங்களில் தெளிவாக வெள்ளாளன்தான் சூத்திரன் என்று குறிக்கப்பட்டுள்ளது. மற்ற உயர் சாதியினர் மேட்டுக்குடியினர் என்று வகைப்படுத்தபட்டுள்ளனர். பெரியார் வாழ்ந்து சென்ற இந்த மண்ணில், இந்த நாளிலும் 'சூத்திரன்' என்று பெயர் வைத்து எழுதுவதும், அதை வெளியிட ஒரு சூத்திரப் பதிப்பகம் இருப்பதும் பற்றி ஒற்றை வரி விமர்சனமாகக் 'கவிதாசரணில் குறிப்பிட்டிருந்தேன். ராமலிங்கத்துக்கு அதில் மிகுந்த வருத்தம். நாவலின் நல்லெண்ணத்தை நான் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அமுதபாரதி மூலமாக அதன் படியொன்றை எனக்கு அனுப்பியிருந்தார். நானும் புரிந்து கொள்ள முயன்றேன். அந்த நாவலைப் பரிசுக்குரியதாக 'புதியபார்வையும் நீலமலைத் தமிழ்ச் சங்கமும்' தேர்வு செய்தது. தேர்வுக் குழுவில் ராமலிங்கத்தின் மாமா – கலைஞன் பதிப்பகம் மாசிலாமணி அவர்களும் ஒருவர். அவரிடம், "இப்படி நாலாவான் என்று பெயர் வைத்துள்ளது உங்களுக்கு உறுத்தவில்லையா? அல்லது நாலாஞ் சாதிக்காரன் வெள்ளாளன்தான் என்று அறுதியிட்டுச் சொல்லியுள்ள

படிப்பகம்

www.padippakam.com



அருமைக்காக கையெழுத்திட்டீர்களா?'' என்று கேட்டேன். அவர் கொஞ்சம் சங்கடப்பட்டு, "பெரும்பான்மை அப்படி'' என்றார்.

நர்மதா ராமலிங்கத்தின் வருத்தத்தில் சிலிர்த்துக் கொண்டு நின்ற கோபம் எத்தன்மையது என்பது அண்மையில்தான் தெரிய வந்தது. 'கவிதாசரண்' மே, 96 இதழில் "தலித்துகளுக்கெதிரான இழிமனப் போக்குகள்'' என்றொரு கட்டுரை எழுதி வெளியிட்டிருந்தேன். ராமலிங்கம் அதைப் படித்துவிட்டு, அதே அமுதபாரதியிடம் "இதைப் படித்தீர்களா? கவிதாசரண் சந்தேகமில்லாமல் ஒரு தலித்துதான்,'' என்று சொல்லித் தெளிந்திருக்கிறார். அதாவது ஒருவன் தலித்தாக இருப்பதுதான் ரொம்பவும் அசிங்கமான, கேவலமான விஷயமாக அந்த வெள்ளாளருக்குப்படுகிறது. கவிதாசரணைத் திருப்பித் தாக்கிவிட்ட பெருமிதம் அவருக்கு.

ஒரு சூத்திரனாக – தாசி மகனாக அடையாளப்படுவதைவிடவும் ஒரு தலித்தாக – ஒடுக்கப்பட்டவனாக அடையாளப்படுவது கேவலமானது என்று நம்பும் தமிழன்கள் இருக்கும் வரை ம. ந. ராமசாமிகள் இருக்கலாம்தானே!

வெட்கங்களைத் தின்று விம்மிதமுறும் சுரணையற்ற கூட்டம்.

---

— 8ஆம் பக்கத் தொடர்ச்சி

**கடிதங்கள்**

நீங்கள் நலமாக இருப்பீர்கள் என எண்ணுகிறேன். கண்ணில் ஏதோ அறுவை சிகிச்சை செய்து கொண்டதாக போன மாதம் ஒரு அன்பர் பேச்சோடு பேச்சாக அறிவித்தார். குணம் பெற்றிருப்பீர்கள் என நம்புகிறேன். 'இதழ் நின்று போவதென்பது இந்த நூற்றாண்டில் இல்லை' என்று உறுதி கூறி இருக்கிறீர்கள். வைர நெஞ்சின் சக்தி வாழ்க. வளர்க.

**வல்லிக்கண்ணன், சென்னை–5**

● மதிப்பீடுகளை முகமூடிகளாக அணிந்து உலா வந்த, வந்து கொண்டிருப்பவர்களையெல்லாம், முகமூடியைக் கழட்டச் சொல்கிறது கவிதாசரண்.

அப்பட்டமான நேர்மையை எதிர்பார்த்தலே கவிதாசரணில் எனக்கு மிகவும் பிடித்தமான விசயம். என்னால் மனதில் எண்ணி சமூகத்தோடு முரண்பட்டுச் செயலற்று இருக்கையில், நீங்கள்

படிப்பகம்

www.padippakam.com



அதை செயலில் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். அதனால் ஒத்த மனதுடையோருக்கான பரிச்சயம் நிறைய ஏற்படுகிறது.

மார்க்சியம்– மாறுதல் தேவைதான்– அன்றி உலகை ஒப்புயர்வற்ற நிலைக்குக் கொண்டு செல்வதென்பது இயலாது. மார்க்சியமே மனித நாகரிகத்தின் அடிப்படை. ஆனால் இந்தியச் சூழலில் சாதிப் பிரச்சனையையும் மார்க்கியத்தையும் இணைப்பது எப்படி என்பது மிகப் பெரிய சவால். அதற்கு மார்க்கியர்கள் மனத்தளவில் சாதியத்தை விட்டொழிக்க வேண்டும். சாதி வேரை மனதில் இருந்து பிடுங்கி எறிய வேண்டும். அப்படிச் செய்யாததே இன்றுள்ள குறை.

**ஜி. காசிராஜன், பாபநாசம்**

● ஒரே வரியில் சொன்னால், என்னைப் போன்ற சிந்தனையாளர்களுக்கு, மிகவும் பயன்படும் இதழ்; மார்க்சிய —லெனினியத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் அனைவரும் ஊன்றிப் படிக்க வேண்டிய இதழ்; கட்டுரையாளர்களின் கருத்துக்களோடு நாம் ஒன்றுபடலாம் அல்லது முரண்படலாம்; ஆனால் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய அம்சங்களே அதிகம்; தனித்தனியாக அன்று; இயக்கமாக! ஆம்; சாதாரண இயக்கமாக அன்று; பேரியக்கமாக!...

''வாசகர் கடிதங்கள் பக்கம் நிரப்பும் விஷயமல்ல,'' என்று வெளிப்படையாகக் கூறி, மிகச் சிறந்த முறையில் இவ்விதழ்களின் பக்கங்களை நிரப்பியுள்ளீர்கள்; இதற்கு, முதற்கண், என் உளங்கனிந்த பாராட்டுகள்...

7–1–96 அன்று நடைபெற்ற 'கோடு' சிறப்புக் கூட்டம் பற்றிய கட்டுரை, இவ்விதழின் மிக முக்கிய கட்டுரையாகும்.

'நிறப்பிரிகை, ஆசிரியர் குழுத் தோழர்கள் மூவருடன் நடைபெற்ற கலந்துரையாடல்கள், குறிப்பிடத்தக்கவை. இதுபோன்ற இன்னும் பல குழுக்களுடன் கலந்துரையாடல்களைக் 'கோடு' மேற்கொள்ள வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

'கோடு' பேசும் தமிழியம், தலித்தியத்திற்கும் பெண்ணியத்திற்கும் அப்பாற்பட்டதல்ல. அவற்றை உள் வாங்கிக் கொண்டது. ஆகவே, அவற்றைப் பற்றிய எங்கள் அக்கறையும் ஈடுபாடும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவை'' என்று தோழர் இன்குலாப் கூறியிருப்பது மிகச் சரியான நிலைபாடு; இது ஓர் பரந்து விரிந்த பார்வை...

'நிறப்பிரிகை'த் தோழர்கள் 'அதி நவீன தலித்தியம்' அல்லது 'தலித்தியத்தில் அதி நவீனத்துவம்' என்ற தடத்தில் செல்கின்றனர். இதனால் அறிவுஜீவிகள் என்ற தற்பெருமையை–மயக்கத்தை தவிர ஆக்கபூர்வமாக தலித்துகளுக்கு அவர்களால் எதுவும் அதிகம் செய்ய இயலாது.

படிப்பகம்

www.padippakam.com



வ. ரா. வுக்கு வந்த கடிதங்கள் தொடர்ந்து வரவேண்டும். தோழர் ஜெயந்தனின் சிறுகதை கசப்பும் கிண்டலும் நிறைந்தது; இன்றைய மனிதனின் இழிநிலையைக் கடவுளுக்குச் சுட்டிக்காட்டி அறுவுறுத்தும் அருமையான படைப்பு; ஜெயந்தனுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள்.

**தி. க. சிவசங்கரன், நெல்லை–6**

● நல்ல பங்குனி, சித்திரை தகிப்பு நாளில் தெற்குச் சீமை இரவில் தென்காற்று வந்து நீவிவிடுமே சொன்னாக்கமாய், அது போல் அப்படியொரு அற்புதம்தான் 'மீண்டும் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்.' யுகத்தின் குணாம்சம் மாறிக்கொண்டே இருப்பதை இப்படிப் பலரும் பழைய கதைகளிலிருந்து படைத்தது உண்டு. அதற்கான அவசியத்தைக் காலம் தருகிறது.

ராம கதையிலிருந்து கம்பராமாயணம், பாரதத்திலிருந்து காண்டேகர் யயாதி, ராமாயணத்திலிருந்து பு. பி. 'சாபவிமோசனம்'. இவரெல்லாம் சமகாலத்தை தர்சிப்பதற்கான கருக்களை மூலத்திலிருந்து எடுத்துக்கொண்டார்கள். வரலாறு, யுகம் என எடுத்துக் கொண்டால் பு. பி. காலம்கூட நமக்கு சமகாலம்தான்.

இரண்டு தலைமுறைகள் முந்திய காலம். ஆனால் அறிவியல் யுகத்தின் மாற்றங்கள் எதையும்விட வேகம் கொண்டவை. அந்த வகையில் 20, 30 ஆண்டுகளில் சமூக உடலில் எழுந்துவிட்ட கொப்புளங்கள் நிறம், குணம், மணம், மாற்றம் மறு தரிசனம் ஆகியிருக்கிறது.

ஜெயந்தனின் படைப்பில் கடவுளைப் பார்த்த பிள்ளைவாளின் தகிப்பும் வீட்டாரின் உப குறிப்பும் "மனிதன் மிஞ்சி மிஞ்சிப் போனாலும் மனிதன் மட்டும்தானே சர்வேசுவரா" என்ற உபசரிப்பும் கடைசியில் மாறிவிட்ட மனித மதிப்பீடுகளை இன்னும் காணமுடியாத கடவுளுக்குப் பிள்ளைவாளின் உபதேசமும் நல்ல வடிவாய் வெளிப்பட்டிருக்கின்றன.

இன்னொரு தலைமுறை கடந்ததும் கடவுள் மீண்டும் வருவார். தேவை இன்னும் அதிகமாகவே இருக்கும். பலே பலே சொல்ல வேண்டிய விஷயம். ஜெயந்தனுக்கு கைவந்திருக்கும் இயல்பான கிண்டலும் எள்ளலும்.

**பா. செயப்பிரகாசம், சென்னை–106**

படிப்பகம்

www.padippakam.com

# வ. ரா. வுக்கு வந்த கடிதங்கள்

## 4. வ. உ. சி. கடிதம்

V. O. CHIDAMBARAM PILLAI
PLEADER

Tuticorin
8-6-1935

திருவையாறுப் போஸ்டுத் திருப்பழனத்திலிருக்கும் தேசாபிமானி ஸ்ரீமான். வ. ராமசுவாமி அய்யங்காரவர்களுக்கு,

அன்பார்ந்த சகோதரர் அவர்களே,

நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்திற்குப் பிரார்த்திக்கிறேன். தங்கள் தற்கால விலாசத்தைத் தெரிவதற்கு யான் பிரமப்பிரயத்தனம் செய்ய வேண்டியதாக ஏற்பட்டது.

தாங்கள் தேசத்திற்குச் சேவை செய்து முடிந்துவிட்டதென்று கருதித் திருப்பழனத்தில் போய்த் தூங்கத் தொடங்கிவிட்டீர்களா? இரண்டில் எது நினைத்தாலும் தவறு. தேசம் அடிமைப்பட்டேயிருக்கிறது. என்போன்ற உண்மை தேசாபிமானிகள் பலர் வறுமையில் ஆழ்ந்திருக்கிறோம். இது நிற்க.

தேசத்திற்குச் சேவை செய்ய வெளிக்கிளம்புக. கொழும்பு 'வீரகேசரி'- தினசரிக்குத் தலைமை ஆசிரியர் தேவை. அப்பதவியைத் தாங்கள் வகித்துத் தேசத்திற்குச் சேவை செய்ய வேண்டுமென்பது எனது விருப்பம். அதன் அதிபர் எனது நண்பர். நல்ல தேசாபிமானி. என் சொல்படி தங்கள் செலவுக்குப் பணம் கொடுப்பார். தாங்கள் அதன் தலைமையாசிரியராயிருப்பதில் அதற்கும் என் போன்ற தேசாபிமானிகளுக்கும் பெருமையுண்டு. கொழும்பு இக்காலம் திருப்பழனம் போலவே இருக்கும். ஆதலால் அப்பதவியை ஒப்புக்கொள்வதற்குத் தங்களுக்கு மாதம் எத்தனை ரூபா வேண்டுமென்பதை உடனே எனக்குத் தெரிவித்திடுக. உடனே தங்களுக்குப் 'பாசு'ம் பணமும் அனுப்புவேன். தாங்கள் உடனே புறப்பட்டுப் பாம்பன் மார்க்கம் கொழும்புக்குச் சென்று "வீரகேசரி" ஆசிரியர் பதவியை ஏற்று, அதனைச் செம்மையுற நடாத்தித் தேசத்திற்குச் சேவை செய்து வர வேண்டும்.

தாங்கள் காரைக்குடி "ஊழியன்" பத்திரிகையை முன்னர் சில காலம் நடாத்தி வந்ததுண்டா? "வீரகேசரி" ஆசிரியராகத் தாங்கள் இருந்து நடாத்திவர வேண்டுமென்று 'குமரன்' அதிபர் தங்களுக்கு எழுதியதுண்டா? ஆம் என்றால் முடிவு ஏற்பட்டதா? ஆம் என்றால், அம்முடிவுப்படியே தாங்கள் விரைவில் சென்று "வீரகேசரி"யை நடாத்துக.

கடவுள் துணை.

தங்கள் அன்பன்
வ. உ. சிதம்பரம்

படிப்பகம்

www.padippakam.com

# நான் யார்?

மா. அர்த்தனாரி

மனிதர்களே நான் யார்?
என்னை உலகத்திற்கு முதல்வன் என்றீர்கள்.
ஏற்றுக் கொண்டேன்.
எல்லாவற்றிலும் இருப்பவன் நானே என்றீர்கள்.
நான் மறுக்கவே இல்லை.
எல்லாமாய் இருப்பதும் நானே என்றீர்கள்.
நான் ஏதாவது சொன்னேனா?
உள்ளே இருப்பதும் வெளியே இருப்பதும் நானே என்றீர்கள்.
நான் வாய் திறந்து பேசவே இல்லையே!
அசைப்பதும் ஆட்டுவிப்பதும் நானே என்றீர்கள்.
என் வாய் திறந்ததா?
எனக்கு எண்ணிலடங்கா விழாக்களை எடுத்தீர்கள்.
எதையாவது நான் ஏற்றுக் கொண்டேனா?
எங்கும் ஏகாந்தமாய் இருப்பவன் என்றீர்கள்.
நான் இதற்காவது செவி சாய்த்தேனா?
பார்ப்பனப் பாவிகள் என்னை கருவறையில் பூட்டினார்கள்.
இந்தக் கொடுமை ஏன் என்று நீங்களாவது கேட்டீர்களா?
தொடக்கூடாத இடத்தில் எல்லாம் தொட்டுக் குளிப்பாட்டினார்கள்.
நான் கூசிக் குறுகி நின்றேனா?
பளபளக்கும் பட்டாடைகளைக் கட்டினார்கள்.
என் எரிச்சலைக்கூட நான் காட்டவில்லை.
பார்ப்பனர்கள் நான் கேட்டதெல்லாம் தருவதாகச் சொன்னார்கள்.
நீங்கள், எதற்கு பிறரிடம் தட்டேந்துகிறீர்கள் என்றாவது கேட்டேனா
எல்லாம் அவன் செயல் என்று என்னைக் காட்டினார்கள்.
இதுவரைக்கும் என் செயல் ஒன்றாவது பார்த்தீர்களா?
எல்லாம் வல்லவன் என்றார்கள் என்னை.
ன் வல்லமையை எதிலே எதைக் கண்டீர்கள்!
யளப்பவன் நான் என்று பார்ப்பனர்கள் சொன்னார்கள்.
ர் மடியை ஏன் காலி செய்கிறீர்கள்?'
தப் பார்ப்பானையாவது நான் கேட்டதுண்டா?
க்கே நான் யார் என்று தெரியாமல் மனுவைக் கேட்டேன்.
பார்ப்பனர்களின் அடிமை என்றான் மனு.
நான் யார் என்று பார்ப்பனர்களையே கேட்டேன்.
பேசாமல் கருவறையில் கிட என்று நெட்டித் தள்ளினார்கள்.
நான் யார் என்று வள்ளலாரைக் கேட்டேன்.
நீ சோதி வடிவானவன் என்றார் வள்ளலார்.

படிப்பகம்

www.padippakam.com



நான் யார் என்று திருமூலரைக் கேட்டேன்.
மக்களின் சீவன் என்றார் திருமூலர்.

நான் யார் என்று சித்தரைக் கேட்டேன்.
மக்களின் உள்ளுக்குள்ளே இருக்கிற நாதமே நீதான் என்றார்.

நான் யார் என்று நாயன்மார்களைக் கேட்டேன்.
அன்பு என்றும அறிவு என்றும்
சித்தி என்றும் முத்தி என்றும் சொன்னார்கள்.

நான் யார் என்று எல்லாம் தெரிந்த வள்ளுவரைக் கேட்டேன்.
மக்களின் இதயங்கள் என்றார் வள்ளுவர்.

மக்கள் இல்லை என்றால் என்று கேட்க நினைத்தேன்.
வள்ளுவரைக் காணவே இல்லை.

இப்பொழுது நான் யார்? நான் தனியாக எங்கே இருக்கிறேன்?

மக்களின் நினைவே நான்தான் என்றால்
மக்களுக்குத் தெரியாமல் நான் எதையாவது
வைத்துக் கொண்டிருக்க முடியுமா?

மக்களோடு மக்களாகிவிட்ட என்னை
வேறெங்கு தேடினாலும் கிடைப்பேனா?

மக்கள் கேட்பதை எல்லாம் என்னால் கொடுக்க முடியுமா?

இப்பொழுது நான் யார்?
மக்கள்.

மக்கள் இல்லை என்றால்?
நானில்லை.

இதை மக்கள் உணர்ந்து கொண்டால்?
என்னை எங்கேயும் தேட வேண்டியதில்லை.
எதையும் கேட்க வேண்டியதில்லை.

ஏன் என்றால் என்னைக் கேட்பது தன்னைக் கேட்பதே!

இப்பொழுது நான் யார்?
நான் நீ, நீ நான்.
நீ உழைத்தால், நானும் உழைப்பேன்.

நீயும் நானும் உழைக்கவில்லை என்றால்
மனிதர்களுக்குத் தேவைப்படும் பண்டங்கள் எதுவும் கிடைக்காது

இப்பொழுது நானும் நீயும் யார்?
உழைப்பு உழைப்பு உழைப்பு.

உழைப்புதான் எல்லாம் என்று யார் சொன்னார்?

ஸா. அர்த்தநாரியும் சொல்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com

## ம. செல்வபாண்டியன்

காலம் நக்கிய
எச்சில் இலையாய் வாழ்க்கை

கைகுவிக்கும் வரவேற்பில்
மறைந்து சிரிக்கும் கத்தி

நட்பின் சிரிப்பில்
அழுகி நெளியும் புழுக்கள்

கை குலுக்கலில்
எலும்புகளின் நிர்வாண ஸ்பரிசம்

குளிர்ந்த வார்த்தைகளில்
மறைந்து கிடக்கும் அமிலம்

ஒருகை வழி நடத்த
மறுகை வெட்டும் சவக்குழி

தென்றலின் தொடுகையில்
நாசிமுகரும் நச்சுக் காற்று

உறவின் நெருக்கத்தில்
பிதுங்கி வழியும் எதிர்பார்ப்பு

விடைவாண முடியாத
விநோதப் புதிர்களாய்
எப்படி ஆனது இப்படி வாழ்க்கை.

படிப்பகம்

... Sep. October, 90 Regd.No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL R. Dis. 5479/90
www.padippakam.com

## விடுபடும் கண்ணி

—கொம்ப மாடசாமி

மேச்சாதி அவமானம் பொறுக்காது
தெக்காட்டுப் பிஞ்சையில்
கழுத்தறுத்துச் செத்துக்கிடந்தார்
பாட்டையா

பாளை மிதித்துச் சரித்துக் கலயமுடைத்துக்
கள்ளப் பதனி குடித்துக் கும்மாளமிடும்
முதலழித்தவன் கால் வெட்டாது
கோமணாண்டித் தாத்தா
அய்யம்மை முத்தந் தொளிக்கும் முன்
முணங்கிக் கொண்டு
பனையேறப் போவார்

மரமேறத் தெரியாத சட்டை போட்ட அய்யா
பாளையருவாளில் சீலா நறுக்கினார்
கோவத்துடன் வெறிகுடியில்
கடைக்கூடை மீனள்ளித் தெருவீசும் மனிதனை
ஏதும் சொல்லாது வாழ்ந்தார்

சூட்டுப் போட்டு வாத்தியானாய்
அலையுமென்னைக் கடவுக்குள்
மறித்துப் பெயர் சொல்லிச் சாதி பேசும்
சறுபயலைச் செவிட்டிலறைந்து வீழ்த்த
அண்டியில் பெலமில்லாது
கவிதையில் புலம்பும் என் மூஞ்சியில்
சளியுதிரக் காறித் துப்பட்டும்
எவனாவது— அரிவாள் தீட்டி எதிர்த்து வெட்டட்டும்
தன்மானமுள்ள புதிய சந்ததி

Printed by Mrs. Kavithasaran at 31, T.K.S. Nagar, Madras-19 and Published at 580, T.H. Road, Madras-2 & Edited by: Kavithaasaran.

படிப்பகம்